Vol.9, Issue 5 | Annual Subscription ` 600
Rotary News, October 2026, Chennai

அக்டோபர் 2026

@NewsRotary /RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

இந்தியா

www.rotarynewsonline.org



Rotary


Rotary
District 3212
CREATE LASTING IMPACT
அறம்
SERVICE THROUGH INTEGRITY
Olayinka Hakeem Babalola
RI President 2026 - 2027
Rtn. AKS Er. Muruganandam M
Rotary International Director
2025 - 2027
ROTARY DISTRICT 3212
DISTRICT CONFERENCE
SANGAMITHRAM
2.0
January 29, 30 & 31, 2027
Hotel Kodai International, Kodaikanal
REGISTRATIONS OPEN!
Reserve Your Spot Today! Register online:
www.sangamithram2.com
Rtn. T.N. Arunachalam @ Nandhu
DISTRICT CONFERENCE CHAIRMAN
Rtn. Gandhi Krishnan
DISTRICT GOVERNOR
Rtn. P.A. Sivakumar Raja
SECRETARY
Rtn. U.S. Ashwin
CO - CHAIRMAN
For Registration Enquiries: Rtn. P.A. Ramasubramania Raja 94420 56999
A Sangamam of Friendship | Leadership | Entertainment

# உள்ளே




36 நேபாள வெள்ள நிவாரணத்தில் களமிறங்கிய ரோட்டராக்டர்கள்



12 RI தலைவர் பொறுப்பு ஓர் உற்சாகமான வாய்ப்பு



46 வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆதரவு



56 சிறப்புக் குழந்தைகளுக்கான ரோட்டரி ஒலிம்பியாட்



24 TRF-க்காக கலகலப்பான தொப்பி ஏலம்



30 குழந்தைகளுக்காகத் துடிக்கும் இதயங்கள்



Rotary

A publication of Rotary Global Media Network


## முக்கிய அறிவிப்பு

### ஆண்டு சந்தா கட்டணத் திருத்தம்

அன்பார்ந்த சந்தாதாரர்களே,

ரோட்டரி நியூஸ் இதழின் ஆண்டு சந்தா கட்டணம் ஜூலை 1, 2026 முதல் பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது:

- அச்சுப் பதிப்பு: **₹600**
- மின்னணு பதிப்பு: **₹360**

இதற்கேற்ப உங்கள் சந்தா ரசீது அனுப்பி வைக்கப்படும்.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், தாமதமின்றி இதழை உடனுக்குடன் பெறவும், ரோட்டேரியன்கள் **மின்னணு** (e-version) **பதிப்பைத்** தேர்வு செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் தொடர்ந்த ஆதரவுக்கும் ஒத்துழைப்புக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

## இதுவல்லவா தன்னலமற்ற சேவை!



செப்டம்பர் ரோட்டரி நியூஸ் இதழில் வெளியான ‘மெண்டிங் லிட்டில் ஹார்ட்ஸ்’ நான்கு பக்கக் கட்டுரை, குழந்தைகளுக்குச் செய்யப்படும் இதய அறுவைச் சிகிச்சைகளைச் சிறப்பாக விவரிக்கிறது. பயனாளிகளின் பல படங்களும் இடம் பெற்றுள்ளன. இது தனித்துவமான, மகத்தான திட்டம். ஆனால் இத்தனை பணிகளையும் செய்யும் பாம்பே ஏர்போர்ட் சங்க ரோட்டேரியர்களின் படங்கள் இல்லாதது குறிப்பிடத்தக்கது. சங்கத்திற்கும் உங்களுக்கும் பாராட்டுகள்!

*முன்னாள் RI தலைவர் கல்யாண் பானர்ஜி*

*எங்களுக்கு அனுப்பப்பட்ட திட்ட அறிக்கையிலும் படங்களிலும் சங்க உறுப்பினர்கள் ஒருவருடைய படம்கூட இல்லை. உண்மையிலேயே அபூர்வமானது! PRIP பானர்ஜியின் கடிதத்திற்குப் பிறகு, திட்டத்தின் உந்துசக்தியான முன்னாள் சங்கத் தலைவர் நிதின் மேத்தாவிடம், பயனாளியுடன் இருக்கும் படத்தைக் கேட்டேன். அவர் அனுப்பிய படம் இப்போது வெளியிடப்படுகிறது.*

*— ஆசிரியர்*

### ஊக்கமளித்த ஃபெலோஷிப் கட்டுரை

‘குணமளிப்பதற்கான ரோட்டரி ஃபெலோஷிப்’ கட்டுரைக்கு நன்றி. சிம்லா ரோட்டரி கூட்டத்தில் ஆழ்மனதின் ஆற்றலை விளக்கிக்காட்டிய இந்த இளம் தம்பதியைச் சந்தித்தேன். பின்னர் அவர்களை அழைத்து ரோட்டரி ஃபெலோஷிப்கள் பற்றி எடுத்துரைத்தேன். 1989 முதல் ரோட்டேரியராகவும், தொடர்ந்து சர்வதேச மாநாடுகளில் பங்கேற்பவராகவும் இருக்கிறேன். ஒரு மாநாட்டில்தான் நானும் ஒரு ஃபெலோஷிப்பில் சேர்ந்தேன்.

பிரகதி சப்லோக், ஹர்சிம்ரன் சௌத்ரி, ஹர்லீன் கவுர் ஆகியோருடன் இணைந்து இந்தப் புதிய ஃபெலோஷிப்பை உருவாக்கப் பணியாற்றினேன். கட்டுரை எங்களை உற்சாகப்படுத்தியுள்ளது. உலகெங்கும் ஹிப்னாசிஸ் மற்றும் குணமளித்தலில் ஆர்வமுள்ள ரோட்டேரியர்களையும் ஊக்குவிக்கும்.

Dr சுரேஷ் குமார் சப்லோக்
RC நஹான் சிர்மோர் ஹில்ஸ் — D 3080

இக்கட்டுரை புதிய புரிதலைத் தருகிறது. பழைய மனக்காயங்களிலிருந்து விடுபட்டு, சிந்தனையை மாற்றிக்கொள்ளும்போது அன்றாட வாழ்க்கையும் முடிவுகளும் மகிழ்ச்சியும் மேம்படுகின்றன. மனநலத்தில் அக்கறை செலுத்துவது, உணர்ச்சித் தூண்டுதல்களைக் கையாள்வதிலிருந்து அமைதியை உணர்வது வரை அனைத்தையும் மாற்றுகிறது.

KMK மூர்த்தி
RC செகந்திராபாத் — D 3150

### சேவை தரும் நிறைவே விருது

‘அட்ரினலின் எழுச்சி’ ஆசிரியர் குறிப்பையொட்டி, நல்லுணர்வுடன் செய்யும் பணி எதிர்பார்த்த பலனை ஓரளவுக்காவது தருகிறது. விளையாட்டு வீரர்களுக்குப் பதக்கங்களும் கோப்பைகளும் கிடைக்கின்றன. ரோட்டேரியருக்குச் சேவை தரும் மனநிறைவே மதிப்பும் கௌரவமும் ஆகும்.

RI தலைவர் கூறுவது போல், கடந்த ஐந்து முதல் ஏழு ஆண்டுகளில் சிறந்த ஆண்டைக் கண்டறிந்து, அதைவிடச் சிறப்பாகச் செயல்பட முயல்வோம். அந்த நிறைவே நமது வெகுமதி.

நிரஞ்சன் கர்
RC புவனேஸ்வர் — D 3262

### உறுப்பினர்களே ரோட்டரியின் வலிமை

செப்டம்பர் இதழில் RI துணைத் தலைவர் M முருகானந்தம் அடிப்படை விழுமியங்களை எளிமையாக விளக்கியுள்ளார்: “நட்புறவு, பன்மைத்துவம், நேர்மை உறுப்பினர்களுடையவை; சேவை உறுப்பினர்களால் செய்யப்படுவது; தலைமை உறுப்பினர்களுக்கானது.”

உறுப்பினர்கள் இல்லாவிட்டால் திட்டமோ சங்கமோ மாவட்டமோ ரோட்டரியோ இல்லை. வலுவான உறுப்பினர்கள் வலுவான சங்கங்களையும், அவை வலுவான மாவட்டங்களையும், மாவட்டங்கள் வலிமையான ரோட்டரியையும் உருவாக்குகின்றன.

R முரளி கிருஷ்ணா
RC பெர்ஹாம்பூர் — D 3262

சாதித்த மாவட்டங்களுக்குப் பாராட்டு ‘இந்தியாவை முதலிடத்தில் நிறுத்திய RIDs 3141, 3000’ கட்டுரை, இரு மாவட்டங்களின் தலைமை, வளர்ச்சி, சேவைகளைத் தகவல்களுடனும் புள்ளிவிவரங்களுடனும் சிறப்பாகப் பதிவு செய்கிறது. திட்ட எண்ணிக்கையோ நிதிப்பங்களிப்போ மட்டுமல்ல; மாற்றப்பட்ட வாழ்க்கைகள், மேம்பட்ட சமூகங்கள், உருவான தலைவர்களே ரோட்டரியின் உண்மையான வலிமை.

IPDG-க்கள் மணீஷ் மோத்வானி, J கார்த்திக் ஆகியோரின் தொலை நோக்கும் உறுப்பினர்களின் அர்ப் பணிப்பும் இந்தச் சாதனைகளுக்குக் காரணம். சிறந்த மாவட்டத்

தலைமைக்கு முன்னுதாரணமான கார்த்திக்கிற்கும், சாதித்த RID 3141 ரோட்டேரியர்களுக்கும் பாராட்டுகள்.

U கலீஃப் அகமது, RC திண்டுக்கல் ஃபோர்ட் — D 3000

### மருத்துவச் சேவையில் சமத்துவம்

ஆகஸ்ட் இதழில் TRF அறங்காவலர் தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ், தனது தந்தையின் துயரமான அனுபவத்தைப் பகிர்ந்தது நெகிழவைத்தது. மருத்துவச் சேவையின் களநிலவரத்தை உணர்த்தியது. நாடுகளுக்கும் சமூகங்களுக்கும் இடையே மருத்துவ வசதிகள் சமமாக இல்லை. வசதியற்றவர்களுக்கும் வசதிபடைத்தவர்களுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்கும் சமூக முயற்சிகளுக்கு நாமும் பங்களிப்போம்.

D ஹரிச்சந்திர ராமா
RC அனந்தபுரமு — D 3160

### ஆடம்பரத்தைத் தவிர்ப்போம்

ஆடம்பரப் பதவியேற்பு விழாக்கள் ரோட்டரியின் அடிப்படைக் கொள்கைகளை நீர்த்துப்போகச் செய்கின்றன என்ற T D வாசுவின் கருத்தை ஆதரிக்கிறேன். மரபுகளைப் பின்பற்றாதது அமைப்பின் கண்ணியத்தைக் குலைக்கிறது; ஆடம்பரம் சங்க நிதியைக் கரைக்கிறது. RI தலையிட்டு இதைத் தடுக்கவேண்டும்.

PELS/SELS பயிற்சிகளில் வருங்காலத் தலைவர்கள் முறையாகத் தயார்படுத்தப்படுவதில்லை. DG பதவியை நாடுவோரை முன்னிறுத்துவதில் பயிற்சி உள்ளடக்கம் மறைகிறது. RI பாடத்திட்டம் புறக்கணிக்கப்படுகிறது அல்லது பத்து சதவீதமே பயன்படுத்தப்படுகிறது. மாவட்டத் தலைவர்களை முன்னிறுத்தும் மேடையாகி விட்ட பயிற்சி முறையை RI சீரமைக்க வேண்டும்.

K நாகேந்திர பாபு, RC மெட்ராஸ் நார்த் வெஸ்ட் — D 3233

### சங்கத்திலிருந்தே தொடங்குகிறது

RI இயக்குநர் K P நாகேஷின் ஆகஸ்ட் செய்தியில், “நட்புறவுக்கு முன் நட்பு; பதவிக்கு முன் நோக்கம்; கடமைக்கு முன் வாய்ப்புகள்” என்ற கருத்து ஒவ்வொரு ரோட்டேரியரும் சிந்திக்கத்தக்கது.

ரோட்டரி தங்களுக்கு ஏற்படுத்திய உணர்வையே மக்கள் நினைவில் வைத்திருப்பார்கள். எனவே சங்கங்களிலும் மாவட்டங்களிலும் எதிர்மறை நடத்தையை ஆரம்பத்திலேயே தடுக்கவேண்டும். இதற்கான கருவிகளை ரோட்டரி கற்றல் மையம் வழங்குகிறது. விழிப்புணர்வுடன் அவற்றைப் பயன்படுத்துவது ரோட்டரியின் வளர்ச்சிக்கு உதவும்.

ரன்வீர் குமார் அகர்வால், RC மொராதாபாத் மிட்டவுன் — D 3100

### ரோட்டரி ஊக்குவித்த AC உடை

1990-ல் GSE குழுவுடன் சிகாகோ சென்றபோது, 80 வயது ரோட்டேரியர் தனது வீட்டுப் பின்புறத்தில் தனியாக ஹெலிகாப்டர் கட்டிக்கொண்டிருந்ததைப் பார்த்தேன். அவரது விருந்தோம்பலைவிடப் புதுமை ஆர்வம் என்னைக் கவர்ந்தது. அந்தக் காட்சி மனதில் பதிந்துவிட்டது.

பல ஆண்டுகளுக்குப் பிறகு, ரஷீதா பகத் சிறப்பாக வழிநடத்தும் ரோட்டரி நியூஸ் கட்டுரைகளைப் படித்தபோது அந்த நினைவு உயிர்பெற்றது. “80 வயதில் அவரால் ஹெலிகாப்டர் உருவாக்க முடியுமென்றால், 74 வயதில் எனது நாற்பதாண்டுக் கனவை ஏன் நிறைவேற்றக்கூடாது?” என்று தோன்றியது.

வெயிலில் பணியாற்றும் விவசாயிகள், களப்பணியாளர்கள், தொழிலாளர்கள், காவலர்கள், ராணுவத்தினருக்கு நிவாரணமளிக்கும் ‘AC உடை’ உருவாக்குவதே கனவு. பல சோதனைகளுக்குப் பிறகு குறைந்த செலவிலான முன்மாதிரியை உருவாக்கியுள்ளேன். இது தொடக்கம்தான். கனவுகாணவும் புதுமைகளை உருவாக்கவும் எண்ணங்களைச் சமூகப் பயனாக மாற்றவும் ரோட்டரி ஊக்குவிப்பதன் சான்று இது.

அசோக் ஜிண்டால்
RC நாபா கிரேட்டர் — D 3090

**அட்டைப்படத்தில்:**
RI தலைவர் நியமனதாரர் Dr பரத் பாண்ட்யா, மனைவி Dr மாதவி.
**படம்:** ரஷீதா பகத்

**ரோட்டரியை வளர்ப்போம்**

*கடந்த இரண்டாண்டுகளில் உங்கள் சங்க உறுப்பினர் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கியுள்ளீர்களா? விவரங்களை rushbhagat@gmail.com; mailto:rushbhagat@gmail.com; அல்லது rotarynewsmagazine@gmail.com; mailto:rotarynewsmagazine@gmail.com; முகவரிக்கு அனுப்புங்கள்.*

Have you read **Rotary News Plus?**
Or does it go to your junk folder?




Every month we bring out the online publication **ROTARY NEWS PLUS** to feature your projects. This is sent to every member by e-mail by mid-month.

Read **Rotary News Plus** on our website *www.rotarynewsonline.org*

*We welcome your feedback Write to the Editor:*
**rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com.**
*Mail your project details, along with hi-res photos, to*
**rotarynewsmagazine @gmail.com.**

*Messages on your club/district projects, information and links on zoom meetings/webinar should be sent only by e-mail to the Editor at* **rushbhagat@gmail.com** *or* **rotarynewsmagazine@gmail.com.**
*WHATSAPP MESSAGES WILL NOT BE ENTERTAINED.*

# 99.9 சதவீதம் என்பது 100 சதவீதமல்ல



புகைப்படம்: ஆன்ட்ரூ எசீபோ

ஒரு குழந்தையின் வாழ்க்கையிலிருந்து போலியோ எதையெல்லாம் பறித்துவிடுகிறது என்பதை அமினு அகமது துடுன்-வாடா தனது சொந்த அனுபவத்திலிருந்து நன்கு அறிவார். நைஜீரியாவின் கானோ நகரில் சிறுவனாக இருந்தபோது இந்நோய் தாக்கியதால் அவர் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டார்.

பல பத்தாண்டுகளுக்குப் பிறகு, போலியோவை ஒழிக்க நைஜீரியா போராடிக்கொண்டிருந்தபோது, தனது அனுபவத்தைக் கொண்டு மற்ற குழந்தைகளைப் பாதுகாக்க உதவுவது என அமினு முடிவெடுத்தார்.

போலியோவால் பாதிக்கப்பட்டு மீண்டவர்களை ஒன்றிணைத்து, வீடுவீடாகச் சென்று பெற்றோரிடம் தடுப்பூசி குறித்துப் பேசத் தொடங்கினார். பெற்றோரைச் சந்தித்த அவர்கள், தங்கள் வாழ்க்கையில் நடந்தவற்றை எடுத்துரைத்தனர்; போலியோ ஏற்படுத்திய பாதிப்புகளைக் குடும்பங்களுக்கு நேரடியாகக் காட்டி, தடுப்பூசியின் அவசியத்தை உணர்த்தினர்.

அமினு நிறுவிய போலியோவிலிருந்து மீண்டோர் குழு, 2021-க்குள் 400க்கும் மேற்பட்ட உறுப்பினர்களுடன் வளர்ந்திருந்தது. ஒருகாலத்தில் சாத்தியமற்றதாகத் தோன்றிய மைல்கல்லை நைஜீரியா எட்ட இவர்களது பணி உதவியது. 2020-ல் நைஜீரியா உள்ளிட்ட ஆப்பிரிக்கப் பிராந்தியம் முழுவதும் இயற்கையாகப் பரவும் போலியோ வைரஸ் ஒழிக்கப்பட்டதாக உலக சுகாதார நிறுவனம் சான்றளித்தது.

போலியோவிற்கு முற்றுப்புள்ளி வைப்பது பற்றிப் பேசும்போதெல்லாம், அமினுவையும் அவரைப்போல் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ள மற்றவர்களையும் நான் நினைத்துக்கொள்கிறேன். நடக்கும் திறனை இழப்பதன் வேதனையை எந்தக் குழந்தையும் அறியாத எதிர்காலத்தை உருவாக்குவதே நோய் ஒழிப்பு. தடுப்பூசியால் தடுக்கக்கூடிய நோயால், ஆரோக்கியமான குழந்தை பக்கவாதத்திற்கு ஆளாவதை எந்தப் பெற்றோரும் காணக்கூடாது என்பதே அதன் பொருள்.

நாற்பதாண்டுகளுக்கும் மேலாக ரோட்டரி இப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது. கூட்டாளிகளுடன் இணைந்து 300 கோடிக்கும் மேற்பட்ட குழந்தைகளுக்குத் தடுப்பூசி வழங்க உதவியுள்ளோம். உலகளாவிய முயற்சிக்கு $3 பில்லியனுக்கும் அதிகமாகப் பங்களித்து, இயற்கையாகப் பரவும் போலியோ வைரஸ் பாதிப்புகளை 99.9 சதவீதம் குறைத்துள்ளோம்.

ஆனால் 99.9 சதவீதம் என்பது 100 சதவீதமல்ல.

ஆப்கானிஸ்தானிலும் பாகிஸ்தானிலும் இந்த வைரஸ் தொடர்ந்து நிலவுகிறது. எங்காவது அது பரவிக்கொண்டிருந்தால், எல்லா இடங்களிலுள்ள குழந்தைகளுக்கும் ஆபத்து உண்டு. ஒரு நாட்டிலிருந்து இயற்கையாகப் பரவும் போலியோ வைரஸ் மறைந்தபிறகும், மீண்டும் நுழையாதபடி வலுவான தடுப்பூசி மற்றும் நோய்க் கண்காணிப்பு அமைப்புகளைப் பராமரிக்கவேண்டும்.

எந்தவொரு நீண்ட பயணத்திலும், இலக்கை அடைவதற்கு முன்பான கடைசிக் கட்டமே மிகவும் கடினமானதாக இருக்கக்கூடும். ஆனால் இவ்வளவு தூரம் பயணித்து, கடுமையாக உழைத்து, எண்ணற்ற குழந்தைகளைப் பாதுகாத்த நாம் இந்தக் கட்டத்தில் நமது முயற்சிகளை நிறுத்திவிட்டு, பயணத்திலிருந்து பின்வாங்கிவிட முடியாது.

**யின்கா பாபலோலா**
தலைவர், ரோட்டரி இன்டர்நேஷனல்



# நேர்மை பேசுவதோடு நின்றுவிடலாமா?

RI தலைவர் நாமினி பரத் பாண்டியாவின் சுயவிவரக் கட்டுரைக்காக, அவரை நன்கறிந்த மூத்த ரோட்டேரியர்கள் இருவரிடம் அவரது தலைமைப் பண்புகள் குறித்துச் சுருக்கமான கருத்தைக் கேட்டேன். முன்னாள் RI தலைவர் K R ரவீந்திரன், முன்னாள் RI இயக்குநர் ராஜு சுப்பிரமணியன் ஆகிய இருவரின் கருத்துகளிலும் பொதுவாக வெளிப்பட்டது அவரது நேர்மை.

“தனது தலைமையின் நேர்மையால் பிறருக்கு உத்வேகமளிக்கும் ஆற்றல் கொண்டவர்” என்றார் PRID சுப்பிரமணியன். “கொள்கைகளில் அசைக்க முடியாதவர்” என்ற PRIP ரவீந்திரன், “பதவி வகிப்பதையும் பணியாற்றுவதையும் அவர் ஒருபோதும் குழப்பிக்கொண்டதில்லை” என்றும் குறிப்பிட்டார்.

இது உண்மையிலேயே என் கவனத்தை ஈர்த்தது. இரண்டு வெவ்வேறு மனிதர்கள் அளித்த, தலா நான்கு வரிகளே கொண்ட கருத்துகளில், ரோட்டரியின் வருங்கால உயர்மட்டத் தலைவரை அடையாளப்படுத்தும் முதன்மைப் பண்பாக ‘நேர்மை’ வெளிப்பட்டிருந்தது. ஒரு மனிதரை, தலைவரை, நிறுவனத்தை, ஏன் ஒரு நாட்டையே வரையறுப்பதில் நேர்மைக்கு அவ்வளவு முக்கியத்துவம் உள்ளது. ஆனால் தனிமனிதர்கள் முதல் நிறுவனங்கள், நாடுகள் வரை, அறநெறியையும் நேர்மையையும் உயர்த்திப் பிடித்துப் புகழ்ந்து பேசும்போதுகூட, அந்தப் பாராட்டு பல நேரங்களில் உதட்டளவிலேயே நின்றுவிடுகிறது. பேச்சில் வெளிப்படும் மதிப்பு, செயலிலும் பிரதிபலிப்பதில்லை.

கோட்பாட்டளவில் நேர்மையின் முக்கியத்துவத்தை உலகெங்கும் மக்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். பொது அரங்குகளில் நடைபெறும் விவாதங்களிலும் சரி, தனிப்பட்ட உரையாடல்களிலும் சரி, நேர்மை குறித்துப் பேசும்போது அதற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறார்கள். அதனால்தான் டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் ஆண்டுதோறும் வெளியிடும் ஊழல் புலனுணர்வுக் குறியீடு (CPI), சர்வதேச கவனத்தை ஈர்க்கிறது. உலக நாடுகளில் எவை மிகுந்த நேர்மையுடன் செயல்படுகின்றன, எவை இன்னும் அதிக முயற்சி எடுத்து தங்கள் செயல்பாட்டை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதை அறிய, இந்தத் தரவரிசை உற்றுநோக்கப்படுகிறது. வருத்தத்திற்குரிய வகையில், நமது நாடு ஆண்டுதோறும் இரண்டாவது பிரிவிலேயே இடம்பெறுகிறது. ஸ்காண்டிநேவிய நாடுகளோ முதலிடங்களில் பெருமையுடன் நிற்கின்றன.

2025 CPI தரவரிசையில் டென்மார்க் முதலிடம் பெற்றது. அடுத்ததாக பின்லாந்து, சிங்கப்பூர், நியூசிலாந்து, நார்வே, ஸ்வீடன், சுவிட்சர்லாந்து இடம்பெற்றன. இந்தியா, மாலத்தீவுகள், மொராக்கோ, துனிசியாவுடன் 91-வது இடத்தில் இருந்தது; எத்தியோப்பியாவைவிடச் சற்றே மேல்! ஆறுதல் தேடுவதென்றால், அமெரிக்காவும் பஹாமாஸுடன் 29-வது இடத்தில்தான் இருந்தது. ஜெர்மனி, நெதர்லாந்து, அயர்லாந்து, UK போன்ற ஐரோப்பிய நாடுகள் அதைவிடச் சிறப்பாகச் செயல்பட்டன. ஜப்பானும் பூடானும் பாராட்டத்தக்க வகையில் 18-வது இடத்தைப் பெற்றன.

ஒரு நாட்டின் நேர்மைத் தரத்தை உயர்த்துவது எளிதான காரியமல்ல. அதற்குப் பிரம்மாண்டமான, நீண்டகால, அயராத முயற்சி தேவைப்படுகிறது. இருந்தாலும், நல்ல செயல்கள் வீட்டிலிருந்து தொடங்கவேண்டும் என்பதுபோல, இந்த மாற்றமும் நம்மிடமிருந்தே தொடங்கவேண்டும். நேர்மையையும் உண்மையையும் தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடித்து, ஊழல் நடவடிக்கைகளிலிருந்து வெகுதூரம் விலகியிருக்கும் தனிமனிதர்களால் பிரம்மாண்டமான தொழில் நிறுவனங்களை உருவாக்க முடியாமல் போகலாம். ஆனால் மனதை உறுத்தும் கவலைகளின்றி, இரவில் அவர்களால் நிச்சயமாக நிம்மதியாக உறங்க முடியும்.

தனிப்பட்ட வாழ்க்கையில் நேர்மையாகவும் கொள்கைப்பிடிப்புடனும் இருப்பது அவசியம். அதேநேரம், நம்மைச் சுற்றி நடக்கும் மோசடிகளுக்கும் ஊழல் செயல்களுக்கும் கண்களை மூடிக்கொண்டு, நாம் மட்டும் நேர்மையானவர்கள் என்று இருந்துவிடுவது போதாது. அதிர்ஷ்டவசமாக, இந்திய மக்களாகிய நாம் ஊழல் அரசுகளை ஒட்டுமொத்தமாக நிராகரித்து, அவற்றை ஆட்சியிலிருந்து முற்றாக வெளியேற்றிய வரலாற்றைக் கொண்டிருக்கிறோம்.

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நாம் செலுத்தும் அந்த ஒரு வாக்கிற்கு மிகுந்த முக்கியத்துவம் உண்டு என்பதில் சந்தேகமில்லை. ஆனால் வாக்களிப்பதுடன் மட்டும் நமது கடமை முடிந்துவிடுவதில்லை. நம்மைச் சுற்றி நிகழும் அநீதி, நேர்மையின்மை, ஊழல் ஆகியவற்றைக் கண்டறிந்து, அவற்றுக்கு எதிராகக் குரல்கொடுக்கத் தொடர்ந்து விழிப்புடன் இருக்கவேண்டும்.

தங்கள் எதிர்காலத்திற்கு இன்றியமையாத கல்வி அமைப்பில் கொள்கைகள் கண்டிப்புடன் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதற்காக Gen Z இளைஞர்களால் வீதியில் இறங்கிப் போராட முடிகிறது என்றால், மூத்த தலைமுறையினரும் தங்கள் கண்கட்டுகளை அகற்றி, சுற்றிலும் நடப்பவற்றைப் பார்க்கக் கண்களைத் திறந்து, நீதிக்காகவும் உண்மைக்காகவும் போராட முன்வர முடியாதா?

ரோட்டரியின் நான்குவழிச் சோதனையில் இடம்பெற்றுள்ள வாசகங்களை வாயளவில் திரும்பத் திரும்பச் சொல்வதன் மூலம் மட்டுமே எதையும் சாதித்துவிட முடியாது. அந்த வார்த்தைகள் உணர்த்தும் பொருளை நாம் ஆழமாகப் புரிந்துகொள்ள வேண்டும். அவற்றை நமது உள்ளத்தில் ஏற்றுக்கொண்டு, அன்றாடச் செயல்களில் நடைமுறைப்படுத்த வேண்டும். அப்போதுதான் எதிர்காலத்தில் நாம் ‘ஜெய் ஹிந்த்’ என்று முழங்கும்போது, அது வெற்றுக் கோஷமாக இல்லாமல், அதன் உண்மையான பொருளும் உணர்வும் நமது எல்லைகளைக் கடந்தும் ஒலிக்கும்.



ரஷீதா பகத்

ADVT.


SHIKHAR
TRAVELS
ROTARIAN
Your Trusted Travel Partner
Shikhar Travels (India) Pvt Ltd
Our Service:
1
AIR TICKETING
2
LEISURE HOLIDAYS
3
CONFERENCE & EVENT
4
Across Worldwide
ADVENTURE TOURS
5
Char Dham to Kailash
PILGRIMAGE TOURS
6
CORPORATE TRAVEL
Capt. Swadesh Kumar
Past Assistant Governor, RI District 3011
Rotary Club of Delhi South Metropolitan.
+91 98100 24642
swadesh@shikhar.com
SCAN HERE
+91 9717891151
Call us for personel assistance
tours@shikhar.com
Email us for your travel needs

# RI இயக்குனர் செய்தி



## ஒன்றிணைந்து முன்னேறுவோம்; நீடித்த மாற்றம் உருவாக்குவோம்

அக்டோபர் மாதம் ரோட்டரி ஆண்டின் இரண்டாவது காலாண்டின் தொடக்கம். முதல் மூன்று மாதங்களில், நாடெங்குமுள்ள சங்கங்கள் திட்டங்களைச் செயலாக்கி, மக்களை ஒன்றிணைத்து, மாற்றத்தை ஏற்படுத்தும் பணிகளைத் தொடங்கியுள்ளன. அடுத்த காலாண்டில் அடியெடுத்து வைக்கும் இத்தருணத்தில், சற்றே நின்று, தொடங்கிய பணிகளை மதிப்பிட்டு, “இன்னும் என்ன செய்யலாம்?” என்று நம்மை நாமே கேட்டுக்கொள்வோம்.

அக்டோபர், ரோட்டரியின் பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டு மாதம். நமது பணியின் அடிப்படை நோக்கத்தை இந்தக் கவனத் துறை பிரதிபலிப்பதாகக் கருதுகிறேன். ஒருவர் தற்சார்பு பெற உதவும்போதும், இளைஞருக்கு வாய்ப்பளிக்கும்போதும், சமூகத்தை வலுப்படுத்தும்போதும், குடும்பம் சிறந்த எதிர்காலத்தை நோக்கி நகர உதவும் போதும், அதன் தாக்கம் பெரும்பாலும் திட்டத்தின் எல்லைகளைக் கடந்து விரிகிறது.

திறப்புவிழா முடிந்த பின்னரும் தொடர்ந்து பயனளிப்பவையே மிகவும் அர்த்தமுள்ள ரோட்டரி திட்டங்கள். அவற்றின் முழுத் தாக்கத்தை அளவிடக்கூட முடியாமல் போகலாம். உருவாக்கியவர்களின் காலத்தையும் கடந்து, ஒரு திட்டம் பல ஆண்டுகளுக்கு வாழ்க்கைகளை மாற்றலாம். அத்தகைய நீடித்த தாக்கத்தையே நாம் உருவாக்க முயலவேண்டும்.

இந்திய ரோட்டரி வலிமையானது. அர்ப்பணிப்புள்ள ரோட்டேரியர்கள் பொதுநோக்குடன் இணைந்தால் என்ன சாதிக்கலாம் என்பதை நமது சங்கங்கள் நிரூபித்துள்ளன. ஆனால் நமது லட்சியம் உள்ளூர் சமூகங்களையும் நாட்டையும் தாண்டி விரியவேண்டும். பரந்த ரோட்டரி உலகில் இந்திய ரோட்டரியின் பங்களிப்பு தெளிவாகத் தெரியவும் குறிப்பிடத்தக்கதாக அமையவும் செய்வோம்.

இதற்கு வலுவான, துடிப்பான சங்கங்கள் தேவை. அங்கேதான் உறுப்பினர் வளர்ச்சி முக்கியமாகிறது. புதியவர்களைச் சேர்ப்பது மட்டுமே உறுப்பினர் வளர்ச்சியல்ல. ஏற்கெனவே உள்ள உறுப்பினர்களைத் தக்கவைப்பதில்தான் அது தொடங்குகிறது. சங்கங்கள் செயலூக்கத்துடனும் அனைவரையும் அரவணைத்தும் சமூகத் தேவைகளுக்குப் பொருத்தமாகவும் இயங்க வேண்டும். உறுப்பினர்களுக்கு அர்த்தமுள்ள சேவை வாய்ப்புகள் கிடைக்கவேண்டும். நல்ல நடைமுறைகள் சங்கத்தின் அன்றாடச் செயல்பாட்டில் இடம்பெறவேண்டும். அப்போது தொடர்ந்து ஈடுபடுவ தற்கான காரணங்கள் வலுப்படும். உறுப்பினர் வளர்ச்சிக் கான சூழலை வலுவான சங்கங்கள் இயல்பாகவே உருவாக்குகின்றன.

சங்கத்தின் செயல்பாடுகளில் தங்களுக்கான இடமும், சேவையில் அர்த்தமுள்ள பங்கும் இருப்பதை உறுப்பினர்கள் உணரும்போது, அவர்கள் தொடர்ந்து இணைந்திருக்க விரும்புவார்கள். எனவே, உறுப்பினர் வளர்ச்சிக்கான நமது முயற்சிகள், அவர்கள் பெறும் சங்க அனுபவத்திலும் கவனம் செலுத்த வேண்டும்.

எதிர்காலத்தை நோக்கும்போது இளைஞர்களை நமது சிந்தனையின் மையத்தில் வைப்போம். நாட்டின் எதிர்காலம் இளமையானது; ரோட்டரியின் எதிர்காலமும் இளமையாக இருக்கவேண்டும். இன்டராக்ட், ரோட்டராக்ட் மூலம் ரோட்டரியின் விழுமியங்களையும் சேவை உணர்வையும் இளையோருக்கு அறிமுகப்படுத்தலாம். அந்தத் தொடர்பை வலுப்படுத்தி, அடுத்த தலைமுறை ரோட்டேரியர்களாக உருவாக இயல்பான பாதையை ஏற்படுத்துவோம்.

முதல் காலாண்டைக் கடந்துவிட்டோம். முன்னுள்ள பாதையில் வாய்ப்புகள் நிறைந்துள்ளன. தொடங்கிய பணிகளை மேலும் வளர்த்தெடுப்போம். நமது சேவைக்கு அதிக ஆற்றலையும், சங்கங்களுக்கு மேலும் தெளிவான நோக்கத்தையும், கூட்டுப் பங்களிப்புக்கு உயர்ந்த லட்சியத்தையும் அளிப்போம்.

சாதிக்க வேண்டியவை ஏராளம். ஒன்றிணைந்து முன்னேறுவோம்!

**KP நாகேஷ்**
RI இயக்குநர், 2025–27

2027
மாநாடு

# மேடையேறும் இளம் தலைவர்கள்










ரோட்டரி சர்வதேச மாநாட்டில் அடுத்த தலைமுறை உலக, சமூகத் தலைவர்களுடன் இணையுங்கள். மாநாட்டுக்கு முந்தைய ரோட்டரி இளைஞர் பரிமாற்ற நிகழ்விலிருந்து, ரோட்டராக்டர்களும் இளம் ரோட்டேரியர்களும் வழிநடத்தும் கலந்துரையாடல் அமர்வுகள்வரை, தலைமுறைகளிடையே கருத்துப் பரிமாற்றத்தை ஊக்குவிக்கும் அருமையான வாய்ப்புகள் காத்திருக்கின்றன. ஜூன் 26–30, பார்சிலோனாவில் சந்திப்போம்!

செப்டம்பர் 17 முதல் பதிவு நடைபெறுகிறது. *convention.rotary.org* தளத்தில் உங்கள் வருகையைப் பதிவுசெய்யுங்கள்.


B Ñ |º SÊ

RID 2981 வைத்தியநாதன் K
RID 2982 செந்தில்குமார் C
RID 3000 R B S மணி
RID 3011 அஜீத் ஜலான்
RID 3012 அமித் குப்தா
RID 3020 ஸ்ரீராம் குட்டிகொண்டா
RID 3030 ராஜேஷ் V பாட்டீல்
RID 3040 சன்ஸ்கர் கோத்தாரி
RID 3053 பிரிஜ் மோகன் அகர்வால்
RID 3055 நைமிஷ் N ராவணி
RID 3056 அருண் பகாடியா
RID 3060 நிலேஷ் R ஷா
RID 3070 அனில் குமார் சிங்கல்
RID 3080 ரீட்டா கல்ரா
RID 3090 அமித் குமார்
RID 3100 பாயல் கௌர்
RID 3110 ஜஸ்பீர் சிங் பாட்டியா
RID 3120 பூனம் குலாட்டி
RID 3131 நிதின் S தாமலே
RID 3132 ஜெயேஷ் R படேல்
RID 3141 ராஜன் துவா
RID 3142 நிலேஷ் V ஜாவந்த்
RID 3150 உதய் சுதிர் பிலானி
RID 3160 கேசவ் ரெட்டி P
RID 3170 லென்னி டா கோஸ்டா
RID 3181 சதீஷ் போலார்
RID 3182 B M பட்
RID 3191 அனில் குப்தா
RID 3192 ரவிசங்கர் டகோஜு
RID 3203 K பூபதி
RID 3204 M V மோகன்தாஸ் மேனன்
RID 3205 ஜோஷி சாக்கோ
RID 3206 R S மாருதி
RID 3211 K G நாயர்
RID 3212 காந்தி கிருஷ்ணன்
RID 3231 T S ரவிக்குமார்
RID 3233 ஸ்ரீராம் துவ்வுரி
RID 3234 சுரேஷ் D ஜெயின்
RID 3240 அசிம் காந்தி A
RID 3250 அனு நரங்
RID 3261 ஆலம் S ரூப்ரா
RID 3262 அனில் குமார் சமல்
RID 3291 தபஸ் பட்டாச்சார்யா



அச்சு மற்றும் பதிப்பாளர் P T **பிரபாகர்** (முகவரி: 15 சிவசாமி சாலை, மைலாப்பூர் சென்னை-4). துகார் டவர்ஸ், 3-வது தளம், 34, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008-யில் இயங்கும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சார்பில் ராசி கிராபிக்ஸ் பி லிட், 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை- 14 என்ற முகவரியில் அச்சிடப்படுகிறது.

ஆசிரியர்: **ரஷீதா பகத்.**



கட்டுரைகளை திருத்தவோ/ சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.



This periodical is published by **PT Prabhakar** from Dugar Towers 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008, on behalf of **Rotary News Trust**, edited by **Rasheeda Bhagat** and printed by **Rasi Graphics** at 40 Peters Road, Royapettah, Chennai 600 014, India.

**அறங்காவலர் குழுவினர்**

| | |
|---|---|
| KP நாகேஷ்<br>RI இயக்குனர் மற்றும்<br>RNT தலைவர் | RID 3191 |
| M முருகானந்தம்<br>RI துணைத்தலைவர்<br>மற்றும் இயக்குநர் | RID 3000 |
| Dr பரத் பாண்ட்யா<br>RI தலைவர் நியமனதாரர் | RID 3141 |
| A S வெங்கடேஷ்<br>TRF அறங்காவலர் | RID 3234 |
| ராஜேந்திர K சாபூ | RID 3080 |
| கல்யாண் பானர்ஜி | RID 3060 |
| சேகர் மேத்தா | RID 3291 |
| அசோக் மகாஜன் | RID 3141 |
| P T பிரபாகர் | RID 3234 |
| Dr மனோஜ் D தேசாய் | RID 3060 |
| C பாஸ்கர் | RID 3000 |
| கமல் சங்வி | RID 3250 |
| Dr மகேஷ் கோட்பாகி | RID 3131 |
| ராஜு சுப்ரமணியன் | RID 3141 |
| அனிருதா ராய்சௌத்ரி | RID 3291 |
| குர்ஜீத் சிங் சேகோன் | RID 3070 |
| குலாம் A வஹன்வதி | RID 3141 |

**செயற்குழு**
**உறுப்பினர்கள்** (2026–27)

| | |
|---|---|
| பாயல் கௌர்<br>தலைவர், ஆளுநர் குழு | RID 3100 |
| லென்னி டா கோஸ்டா<br>துணைத்தலைவர்,<br>ஆளுநர் குழு | RID 3170 |
| R சுப்ரமணி<br>செயலாளர், ஆளுநர் குழு | RID 3000 |
| அஜீத் ஜலான்<br>பொருளாளர், ஆளுநர் குழு | RID 3011 |

B ] › ¯o
ரஷீதா பகத்

x ø n B ] › ¯o
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும்**
**விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

Contributions are welcome but will be edited. Content can be reproduced with permission and attributed to RNT.

**TRF**
**தலைவரிடமிருந்து...**



# பாறைபோல் உறுதியாக நிற்போம்

பாறைபோல் உறுதியாக இருப்பதே ரோட்டரியின் அமைதியான பேராற்றல். இந்த ஆண்டின் நிலையற்ற சூழல், அதன் முக்கியத்துவத்தை மீண்டும் உணர்த்தியுள்ளது.

குடும்பங்கள் இடம்பெயர்கின்றன; சமூகங்கள் காலநிலைப் பேரிடர்களை எதிர்கொள்கின்றன. நமக்கு அருகிலும், நாம் சேவையாற்றும் தொலை தூரப்பகுதிகளிலும் மனிதநேய உதவிகள் தேவைப் படுகின்றன. இவை நம்மையும் பாதிக்கின்றன. உலகம் மாறினாலும், ரோட்டரியின் செயல்பாடு உறுதியுடனும் கருணையுடனும் பயனளிப்பதாகவும் தொடர்கிறது. நிச்சயமற்ற சூழலிலிருந்து விலகாமல், தெளிவான நோக்கத்துடன் எதிர்கொள்கிறோம்.

ஆண்டு நிதி, நிரந்தர நிதி, போலியோபிளஸ் நிதி ஆகியவற்றுக்காக மொத்தம் $500 மில்லியன் திரட்டும் இலக்கு, உயர்வானது மட்டுமல்ல; அடையக் கூடியதும்கூட.

உலகின் கவனம் அடுத்தடுத்த நெருக்கடிகளுக்குத் திரும்பும்போதும், ரோட்டரி தொடர்ந்து களத்தில் நிற்கிறது. வேறு சூழலில் இணைந்திருக்க வாய்ப்பில்லாத கூட்டாளிகளை ஒன்றிணைக்கிறோம். பல்லாண்டு நம்பிக்கையில் உருவான தொடர்புகளால் வளங்களை விரைவாகத் திரட்டுகிறோம். ஒருமுறை உதவுவதுடன் நிறுத்தாமல், தொடர்ந்த பங்களிப்பாலும் பகிர்ந்த பொறுப்புணர்வாலும் சமூகங்களை வலுப்படுத்துகிறோம்.

போலியோ ஒழிப்புப் பணியே இந்த அர்ப்பணிப்பின் சிறந்த சான்று. இவ்வரலாற்று முயற்சியில் உங்கள் சங்கத்தின் பங்கைச் சிந்திக்குமாறு கடந்த மாதம் கேட்டிருந்தேன். பலரும் புதுப்பித்த உற்சாகத்துடனும் தாராளத்துடனும் செயல்பட்டீர்கள்.

ரோட்டரி இப்போராட்டத்தைத் தொடங்கியதிலிருந்து போலியோ பாதிப்புகள் 99 சதவீதத்திற்கும் மேல் குறைந்துள்ளன. போர்கள், எல்லை மூடல்கள், எண்ணற்ற தடைகளுக்கு மத்தியிலும் குழந்தைகளுக்குத் தடுப்பூசி வழங்கிய சுகாதாரப் பணியாளர்கள், தன்னார்வலர்கள், உறுப்பினர்களின் உழைப்பிற்கு இது சான்று. முடிவு எப்படியிருக்கும் என்று அவர்களுக்குத் தெரியாது. தாங்கள் யார் என்பதை அறிந்திருந்தார்கள்; தொடர்ந்து செயல்பட்டார்கள்.

இப்போது அதுவே நமது உத்வேகம். நிலம் தடுமாறும்போது ரோட்டரி உறுதியான அடித்தளமாகிறது. திட்டங்கள் மாறும்போது உதவும் கூட்டாளி யாகிறோம். முன்னேறும் பாதை தெளிவற்றிருக்கும்போது, நமது அடையாளத்தின் வலிமையே வழிகாட்டுகிறது.

நீங்கள் இந்தச் செய்தியை வாசிக்கும் நேரத்தில், எனது சொந்த உறுதியையும் நிலைத்தன்மையையும் சோதனைக்கு உட்படுத்திய ஓரிடத்தில் நான் இருப்பேன். அந்த அனுபவத்தின் முழுக் கதையையும் இணையத்தில் உங்களுடன் பகிர்ந்துகொள்வேன். நீங்கள் தவறவிட விரும்பாத கதையாக அது இருக்கும்.

உலகம் நம்பக்கூடிய அமைப்பாகத் தொடர்ந்து இருப்போம். ஒவ்வொரு சவாலுக்கும் எப்படித் தீர்வு காண்போம் என்பது எப்போதும் தெரியாமல் இருக்கலாம். ஆனால் நாம் யார் என்பதை அறிவோம். நமது பணியைத் தொடங்குவதற்கு அந்தத் தெளிவே எப்போதும் போதுமானதாக இருந்து வந்துள்ளது.

**ஜெனிபர் ஜோன்ஸ்**
TRF அறங்காவலர் தலைவர்

# RI தலைவர் பொறுப்பு ஓர் உற்சாகமான வாய்ப்பு: பரத் பாண்ட்யா

ரஷீதா பகத்






RI *தலைவர் நியமனதாரர்*
Dr *பரத் பாண்ட்யா.*

1989-ல், 30 வயது இளம் அறுவைச் சிகிச்சை நிபுணராக இருந்த பரத் பாண்ட்யா, "தற்செயலாகத்தான்" ரோட்டேரியரானார். அவரது தந்தையிடம் சிகிச்சை பெற்றுவந்த J P சக்சேனா, போரிவலியில் புதிய ரோட்டரி சங்கத்தைத் தொடங்கிக்கொண்டிருந்தார். அதில் சேருமாறு பாண்ட்யாவை அழைத்தார். அப்போதுதான் அறுவைச் சிகிச்சைப் பணியைத் தொடங்கியிருந்ததால் பாண்ட்யா தயங்கினார். ஆனால் சக்சேனா அவரைச் சம்மதிக்க வைத்தார். இப்படித்தான் இன்றைய RI தலைவர் நியமனதாரர் பரத் பாண்ட்யா, RC போரிவலியின் பட்டய உறுப்பினரானார்.

விரைவிலேயே சங்கத்தலைவர் பொறுப்பையும் ஏற்கும்படி ஊக்குவிக்கப்பட்டார். பொறுப்பை ஏற்றதும் தன்னால் முடிந்த சிறந்த பங்களிப்பை வழங்கினார். குறிப்பிடத்தக்க பல திட்டங்களைச் செயல்படுத்தியதுடன், 19 புதிய உறுப்பினர்களையும் 12 பால் ஹாரிஸ் ஃபெலோக்களையும் சேர்த்தார். "அந்தக் காலத்தில் அது பெரிய சாதனை" என்கிறார்.

தலைவராகப் பணியாற்றிய ஆண்டுக்குப் பிறகு, "எனது உடனடிச் சுற்றத்தைத் தாண்டி, பார்வையை விரிவுபடுத்த ரோட்டரி உண்மையிலேயே உதவுகிறது என்பதை உணர்ந்தேன்."

2028-ல் RI தலைவராகப் பொறுப் பேற்கும்போது, அந்தப் பார்வை உலகம் முழுவதையும் உள்ளடக்குமே என்று நான் குறிப்பிடுகிறேன். மும்பையில் அவரது இல்லத்தில் இந்த உரையாடல் நடைபெறுகிறது. அதே கட்டடத்தில்தான் பாண்ட்யா அறுவைச் சிகிச்சை மற்றும் மகப்பேறு மருத்துவமனையும் இயங்குகிறது.



*RIPN பாண்ட்யா, மனைவி Dr மாதவி, மகள்கள் Dr நிதி, Dr சாஷ்மி, மருமகன் பார்த், பேத்தி த்ரிதி ஆகியோருடன்.*

அவரது மனைவி மாதவி அங்கே மகப்பேறு மருத்துவராகப் பணியாற்றுகிறார்.

மென்மையாகப் பேசும் பாண்ட்யா புன்னகைக்கிறார். “37 ஆண்டுகளுக்கு முன்பு ரோட்டரியில் சேர்ந்த போது, உலகம் முழுவதையும் எனது பார்வைக்குள் கொண்டுவரும் வாய்ப்பு ஒருநாள் கிடைக்கும் என்று நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.”

இந்தப் பொறுப்பை வாய்ப்பாகப் பார்க்கிறாரா, சவாலாகக் கருதுகிறாரா? ஒரு வேளை மலைக்க வைக்கும் சவாலாக இருக்குமோ?

“இதை உற்சாகமான வாய்ப்பாகவே கருதுகிறேன். ஐக்கிய நாடுகள் சபையில் இடம் பெற்றுள்ள நாடுகளை விட அதிகமான நாடுகளில் ரோட்டரி செயல்படுகிறது. அதன் பரப்பையும் சென்றடையும் மக்களையும் பார்க்கும்போது, பொறுப்பின் கனத்தை உணர முடிகிறது. ஆனால் அதை மலைக்க வைப்பதாகச் சொல்லமாட்டேன்; உற்சாக மூட்டுவதாகவே சொல்வேன்.”

அடித்தளத்தில்

பணியாற்றும் அதிகமான ரோட்டேரியர்களைச் சந்தித்து உரையாடவும், உலகின் பல்வேறு பகுதிகளில் ரோட்டரி எப்படிச் செயல்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ளவும் இந்தப் பொறுப்பு வாய்ப்பளிக்கும் என்பதில் மகிழ்ச்சி அடைகிறார்.

“நான் சந்திக்கப் போகும் மனிதர்கள், கேட்கப்போகும் மாறுபட்ட பார்வைகள், நாம் ஒன்றிணைந்து சாதிக்கக்கூடியவை ஆகியவை என்னை உற்சாகப்படுத்துகின்றன. எல்லாக் கேள்விகளுக்கும் பதில் வைத்திருப்பது எனது பணி அல்ல. செவிமடுப்பது, கற்றுக்கொள்வது, மக்களை ஒன்றிணைப்பது, ரோட்டரிக்குத் தெளிவான திசையைக் காட்டுவது ஆகியவையே எனது பணி. ஒன்றிணைந்து ரோட்டரியை இன்னும் கொஞ்சம் முன்னேற்ற முடியும் என்று நம்புகிறேன்.”

### உறுப்பினர்களே மையம்

ரோட்டரியில் உறுப்பினர் சேர்க்கையா, திட்டங்களா, வேறு ஏதேனுமா – எது முக்கியம் என்று கேட்டேன்.

“அனைத்திற்கும் மையமாக இருப்பது உறுப்பினர்கள்தான். அவர்கள் இருந்தால் எல்லாமே சாத்தியம். இல்லாவிட்டால் செயல்படுவது கடினம். ரோட்டரியை உறுப்பினர்களை மையமாகக் கொண்டதாகவும், எளிதில் அணுகக்கூடியதாகவும், அவர்களின் தேவைகளுக்குப் பொருத்தமானதாகவும், ஈடுபாட்டை வளர்ப்பதாகவும் மாற்ற விரும்புகிறேன். மிக முக்கியமாக, உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் பங்கேற்கும் அமைப்பாக அது இருக்கவேண்டும்.

“உறுப்பினர்களை நன்றாகக் கவனித்து, சிறந்த சங்க அனுபவத்தையும் அர்த்தமுள்ள பணியையும் வழங்கினால், ரோட்டரியின் வளர்ச்சியை அவர்கள் பார்த்துக்கொள்வார்கள். உறுப்பினர்கள் அதிகமாக விலகுவது முதல் மூன்று ஆண்டுகளில்தான். முதல் மூன்று மாதங்கள் மிகவும் முக்கியமானவை. ஏனெனில் முதல் அனுபவமே சில நேரங்களில் இறுதி அனுபவமாகவும் அமைந்துவிடுகிறது.”

புதிய உறுப்பினரைச் சேர்க்கும் போது, தரமான அறிமுகமும் வரவேற்பும் அளிக்கவேண்டும்

## ஒரு பார்வையில்



*இசை:* பழைய இந்திப் பாடல்கள் பிடிக்கும். மேற்கத்திய இசையும் ரசிப்பேன். ABBA இன்றும் எனது விருப்பக் குழு!

*வாசிப்பு:* முன்பு நிறைய வாசிப்பேன். இப்போது விரும்பும் அளவிற்கு நேரமில்லை. விருப்ப எழுத்தாளர் P G வுட்ஹவுஸ். பொழுது போக்கிற்காக ஜெஃப்ரி ஆர்ச்சரின் நாவல்களைப் படித்துள்ளேன். அண்மையில் வாசித்தது மைக்கேல் ஷெல்ட்ரிக்கின் ‘ஃப்ரம் ஐடியாஸ் டு இம்பாக்ட்’.

*சமூக ஊடகங்கள்:* WhatsApp, LinkedIn பயன்படுத்துகிறேன். சமூக ஊடகங்களில் இன்னும் அதிகமாக ஈடுபடவேண்டும்.

*உணவு:* இந்தியச் சைவ உணவும் இத்தாலிய, சீன உணவுகளும் பிடிக்கும்.

*சமையல்:* சாண்ட்விச், தேநீர், காபி தயாரிப்பதோடு எனது திறன் முடிந்துவிடுகிறது. எவன்ஸ்டனில் மாதவி உடனில்லாத நேரங்களில் சமாளிக்க, அவர் கொஞ்சம் சமையல் கற்றுத்தருவார்!

*விருப்பச் சுற்றுலாத்தலம்:* இயற்கை அழகும் தூய காற்றும் நிறைந்த நியூசிலாந்து. அங்குள்ள புத்துணர்வூட்டும் காற்றைச் சுவைக்கவே முடியும்!

*உடற்தகுதி:* முன்பு டிரெட்மில்லில் அதிகம் நடப்பேன். கோவிடுக்குப் பிறகு தினமும் குறைந்தது 12,000 அடிகள் நடக்கிறேன்.

*ஓய்வு:* இசை கேட்பதும் அவ்வப்போது வாசிப்பதும். பழைய நூல்களை மீண்டும் படிக்கப் பிடிக்கும்.

*இறைநம்பிக்கை:* கடவுளை நம்பு கிறேன்; சடங்குகளில் ஈடுபாடில்லை. பூஜை உள்ளிட்டவற்றை மாதவி கவனித்துக்கொள்கிறார்.

என்கிறார் பாண்ட்யா. அவரது ஆர்வத்திற்கேற்ப முதல் மூன்று மாதங்களுக்குள் அர்த்தமுள்ள பொறுப்பை வழங்கவேண்டும். ரோட்டரி பற்றிய போதிய புரிதலையும், சங்கத்தின் ஓர் அங்கம் என்ற உணர்வையும் உருவாக்கவேண்டும்.

"பல நேரங்களில் புதிய உறுப்பினர்களைச் சேர்த்துவிட்டு, அவர்களாகவே செயல்படட்டும் என்று விட்டுவிடுகிறோம். அவர்களிடம் கவனம் செலுத்தி, ஈடுபாட்டை வளர்க்கவேண்டும்."

புதிதாகக் குடும்பத்திற்கு வரும் மணப்பெண்ணுக்குக் கூடுதல் கவனம் அளித்து, வரவேற்கப்படுவதை உணரச் செய்வதை இதற்கு ஒப்பிடுகிறார்.

"முதல் 1,000 நாட்களில் உறுப்பினருக்குத் தொடர்ச்சியான ரோட்டரி கல்வியும், தலைமைப் பொறுப்பேற்கும் வாய்ப்பும், சங்க முடிவுகளில் கருத்துத் தெரிவிக்கும் உரிமையும் கிடைக்கவேண்டும். அப்போதுதான் ஈடுபாடும் பங்கேற்பும் அதிகரிக்கும்; தான் மதிக்கப்படுவதை உணர்வார். தனது கருத்துக்கும் முக்கியத்துவம் இருப்பதை அறிந்து, சங்கத்துடன் ஒன்றிப்போவார். அடுத்து, உண்மையான தாக்கத்தை ஏற்படுத்தும் சேவைத் திட்டத்தில் அவரைப் பங்கேற்கச் செய்யவேண்டும்."

அடுத்த ஆண்டில், மற்றொரு புதிய உறுப்பினருக்கு வழிகாட்டும் பொறுப்பை அவரிடம் வழங்கவேண்டும். "ஏனெனில் மற்றவர்களுக்குக் கற்றுத்தருவதே மிகச் சிறந்த கற்றல் முறை."

ஒவ்வொருவருக்கும் ஏற்ற ரோட்டரி அனுபவத்தை வழங்குவதும் அவசியம். "ரோட்டரியிடமிருந்து அனைவரும் ஒரே விஷயத்தை எதிர்பார்ப்பதில்லை. எனக்கு நட்புறவு முக்கியமாக இருக்கலாம்; உங்களுக்குச் சேவை முக்கியமாக இருக்கலாம். மற்றொருவருக்கு ரோட்டரியின் மதிப்பும் அதன் சின்னத்தை அணிவதும் முக்கியமாக இருக்கலாம். இன்னொருவருக்கு, புதிய நாடுகளிலும் வரவேற்பைப் பெற உதவும் அதன் சர்வதேசத் தன்மை பிடித்திருக்கலாம். இவை புதிய கருத்துகள் அல்ல; வெவ்வேறு அம்சங்களைப் பொருத்தமாக இணைப்பதுதான்."

சேவைக்காகச் செலவிடும் பணத்தைவிட, சமூகங்களில் ஏற்படும் மாற்றமும் மக்களின் நடத்தையில் உருவாகும் முன்னேற்றமுமே கவனிக்கப்படவேண்டும் என்கிறார்.

"நமது தலைமைப் பொறுப்பு ஓராண்டில் முடிந்துவிடும். ஆனால் நமது பணியின் தாக்கம் பல ஆண்டுகளுக்கும் பல பத்தாண்டுகளுக்கும் நீடிக்கவேண்டும். எனவே உறுப்பினர்களும் நமது சேவையின் தாக்கமுமே எனது முக்கியக் கவனமாக இருக்கும்."

**இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் அதிக வாய்ப்புகள்**

இந்தியாவைத் தவிர, ஆப்பிரிக்காவிலும் குறைந்தது அடுத்த





*2018-ல் சென்னை மண்டல இன்ஸ்டிடியூட்டில் பாண்ட்யா.*







RIPN *பாண்ட்யாவும் மாதவியும்.*

## *அவரது கனவுகள்*

*“முதலில் போலியோ முற்றிலும் ஒழிக்கப் படுவதைப் பார்க்க விரும்புகிறேன். அப்போது ரோட்டரிக்கு அமைதிக்கான நோபல் பரிசு கிடைக்கவும் வாய்ப்புள்ளது. அது நமக்குப் பெருமையான தருணமாக இருக்கும்.*

*“சமூகத்தில் தேவைகள் எழும்போது, குறைந்தபட்சம் நமது கவனத் துறைகளிலாவது, மக்கள் முதலில் நாடும் பங்காளியாக ரோட்டரி இருக்கவேண்டும் என்பது நீண்டகாலக் கனவு. கூட்டாளியைத் தேடும் பிற அமைப்புகளுக்கும் ரோட்டரியே முதல் தேர்வாகவேண்டும்.*

*“*TRF *மீது மிகுந்த ஈடுபாடுள்ளது. அது சிறந்த அறக்கட்டளை என நம்புகிறேன். அதன் வழியாகச் செய்யும் பணிகளை எடுத்துக்காட்டி, ரோட்டேரியர் அல்லாதவர்களிடமிருந்து இன்னும் அதிக நிதியை ஈர்க்கவேண்டும்.*

*“*AI *நிறுவனங்கள் ஏற்கெனவே பில்லியன் டாலர் மதிப்புகளை எட்டியுள்ளன. இன்னும் இரண்டு, ஐந்து அல்லது பத்து ஆண்டுகளில் அவற்றின் நிறுவனர்கள் பலர் பில் கேட்ஸைப்போல் கொடையாளர்களாக மாறுவார்கள். அப்போது அவர்களிடமிருந்து நிதியைப் பெற ரோட்டரி தயாராக இருக்கவேண்டும். அதிக நிதியால் இன்னும் அதிகச் சேவையாற்ற முடியும்.*

*“ஆனால் அவர்களின் எதிர்பார்ப்பு களுக்கேற்ப நமது திட்டங்களையும் செயல்பாடுகளையும் அமைக்கவேண்டும். அவர்களது முன்னுரிமைகள் பில் கேட்ஸின் முன்னுரிமைகளிலிருந்து வேறுபடலாம். நிதியளிப்பவர்தான் எந்தப் பணி நடைபெறவேண்டும் என்பதை முடிவுசெய்கிறார்.”*

*தனிப்பட்ட கனவு? “வரவிருக்கும் புதிய பொறுப்பில் என்னால் முடிந்த சிறந்த பங்களிப்பை வழங்குவதே உடனடிக் கனவு. அது முடிந்ததும் திரும்பிவந்து குடும்பத்துடன் ஓய்வெடுத்து, அவர்களுக்கும் எனது சங்க உறுப்பினர்களுக்கும் நேரம் ஒதுக்கவேண்டும்.”*



*இடது:* 2019-*ல் இந்தூர் மண்டல இன்ஸ்டிடியூட்டில்* PRIP K R *ரவீந்திரன்,* PRID *ராஜு சுப்ரமணியன், வித்யா ஆகியோருடன் பாண்ட்யா.*



ஐந்து முதல் ஏழு ஆண்டுகளுக்கு ரோட்டரி வளர்வதற்குப் பெரிய வாய்ப்புள்ளது என்கிறார் பாண்ட்யா.

“தலைவர் யிங்கா ஏற்கெனவே அதற்காகப் பணியாற்றுகிறார். தேர்வுத் தலைவர் லாரியும் தொடர்வார் என்று நம்புகிறேன்; நானும் தொடர்வேன். தற்போது ஆப்பிரிக்காவில் சுமார் 50,000 உறுப்பினர்கள் உள்ளனர். உரிய கவனம் செலுத்தினால், அடுத்த ஐந்து ஆண்டுகளில் அந்தக் கண்டத்தில் உறுப்பினர் எண்ணிக்கையை 1,50,000 ஆக உயர்த்த முடியும்.”

ஜெர்மனி, இத்தாலி, ஸ்காண்டிநேவிய நாடுகளில் ரோட்டரி மெதுவாகவும் உறுதியாகவும் வளர்வது மகிழ்ச்சியளிக்கிறது. ஆனால் சில பகுதிகளில் வளர்ச்சி இல்லை. அங்கே உறுப்பினர்கள் விலகுவதைத் தடுத்து, நிலையை மாற்றவேண்டும். மாற்றங்களை எதிர்க்கும் சங்கங்கள், மேலும் நெகிழ்வுடனும் புதுமையுடனும் செயல்பட ஊக்குவிக்கப்படவேண்டும்.

உறுப்பினர் வளர்ச்சியில் பெண் களையும் இளைஞர்களையும் அதிகமாகச் சேர்ப்பதும் அடங்கும். “அடுத்த 30–50 ஆண்டுகளுக்கு ரோட்டரி உயிர்ப்புடனும் காலத்திற்குப் பொருத்தமாகவும் ஆற்றலுடனும் செயல்திறனுடனும் இருக்கவேண்டுமானால், இளைய தலைமுறையினர் வரவேண்டும்.”

இந்தியாவில் அண்மையில் Gen Z தலைமுறையினரிடம் கண்டதைப்போல, இளைஞர்கள் ஒரு நோக்கத்தைத் தேடுகிறார்கள் என்கிறார்.

“பணியாற்றுவதற்கான காரணமும் நோக்கமும் அவர்களுக்குத் தேவை. அதிகமானவர்களுடன் தொடர்பு கொள்ளவும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தவும் விரும்புகிறார்கள். அதேநேரம் தங்களது தலைமைத் திறன்களை வளர்த்துக்கொள்வதிலும் ஆர்வமாக இருக்கிறார்கள்.” இவற்றை வழங்கினால், இளைஞர்களைக் கவர்வதற்கு ரோட்டரி சிறந்த இடத்தில் இருக்கும்.

சமூகத்தில் 50 சதவீதத்தினர் பெண்கள் என்றால், ரோட்டரியிலும் அவர்களுக்குச் சமமான பிரதி நிதித்துவம் தேவை. பெண்



உறுப்பினர்கள் அதிகரித்தாலும், அனைத்து நிலைகளிலும் அதிகமான பெண்கள் தலைமைப் பொறுப்புகளில் இடம் பெறவேண்டும் என்று RIPN கருதுகிறார்.

“பெண்கள் நேரடியாக RI தலைவராகவோ RI இயக்குநராகவோ, ஏன் DG-யாகவோ கூட ஆகிவிட முடியாது. சங்கம், மாவட்டம், மண்டலம், பின்னர் RI எனப் படிப்படியாகத் தலைமைப் பொறுப்புகளை ஏற்க ஊக்குவிக்க வேண்டும்.” இந்த மாற்றம் நிகழ்ந்தாலும், போதிய வேகத்தில் நடைபெறவில்லை. ரோட்டரியில் முன்னதாகவே சேர்ந்த ஆண்கள், பதவிகள் மீதான விருப்பத்தால் அவற்றைத் தங்களிடமே வைத்துக்கொள்ள முனைவதும் காரணம் என்கிறார்.

பெண்கள் என்பதற்காக அல்லாமல், திறமையும் தகுதியும் ஆற்றலும் இருப்பதாலேயே அவர்களுக்கு அதிகத் தலைமை வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்று தெளிவுபடுத்துகிறார். “இன்னும் பத்து ஆண்டுகளில் ‘பெண்களின் தலைமை’ என்று பேசுவதை நிறுத்திவிடுவோம் என்று நம்புகிறேன். அது வெறுமனே ‘தலைமை’ என்றே இருக்கும்!”

அதுவரை, மேலும் பல பெண் தலைவர்கள் உருவாக வழிகளை ஏற்படுத்தவேண்டும். இது சலுகை காட்டுவதற்காக அல்ல; அதிக வரவேற்பையும் ஊக்கத்தையும் அளிப்பதற்காக.



### ஆரோக்கியமான சமூகங்கள்

ஆழ்ந்த அறிவும் சிந்தனையும் அக்கறையும் கொண்ட தலைவராகப் பார்க்கப்படுவதால், RI தலைவராக அவர்மீதான எதிர்பார்ப்புகள் அதிகமாக இருக்குமே? மாற்றத்திற்கான என்ன புதிய கருத்துகளை முன்வைப்பார் என்று கேட்கிறேன்.

“என்னைப் பேறறிஞராகச் சொல்லிக் கொள்ளமாட்டேன். ஆனால் சிந்தித்துச் செயல் படுபவன், அக்கறை கொண்டவன் என்பேன். நல்ல தலைவருக்கு இவை இரண்டும் முக்கியப் பண்புகள். ரோட்டரியில் நான் வளர்ந்துவந்த விதத்தால் எதிர்பார்ப்புகள் அதிகமாக இருக்கும் என்பதை ஏற்கிறேன். அவற்றை நிறைவேற்ற எனது ரோட்டரி அனுபவம் உதவும்.”

RI இயக்குநராக இருந்த போது உடல் நலத்தில் கவனம் செலுத்தியதை நினைவு கூர்கிறார். இப்போது அதை ஆரோக்கியமான சமூகங்கள் என்ற பரந்த நோக்கமாக விரிவுபடுத்த விரும்புகிறார்.

## நல்ல தலைவரின் பண்புகள்

“வரவிருக்கும் பொறுப்பு எனக்கு உற்சாகமான காலமாகவும் சிறந்த வாய்ப்பாகவும் இருக்கும். தலைமை என்பது மக்களுக்கு முன்னால் நின்று வழிநடத்துவது மட்டுமல்ல; அவர்களுடன் நின்று அனைவரையும் ஒன்றிணைப்பது. அதையே செய்ய முயல்வேன்” என்கிறார் RIPN பரத் பாண்ட்யா.

“நல்ல தலைவர் அதிகமான ஆதரவாளர்களை அல்ல, அதிகமான தலைவர்களை உருவாக்குபவர். ஆதரவாளர்களை மட்டுமே உருவாக்கினால், எனது பொறுப்பு முடிந்ததும் அந்த இடத்தை யார் நிரப்புவார்கள்?”

தொலைநோக்கு, எதிர்காலத்தைச் சிந்திக்கும் திறன், கூட்டுப்பணியைச் சாத்தியமாக்கும் அணுகுமுறை ஆகியவை தலைவருக்குத் தேவை. “அனைத்தையும் தனியாகச் செய்ய முடியாது. மற்றவர்களுக்கு அதிகாரமளிக்க, நம்மீது நம்பிக்கையும் உறுதியும் வேண்டும். என்மீதே நம்பிக்கையில்லாவிட்டால் மற்றவர்களை எப்படி வலுப்படுத்துவேன்?”

செயல்படுத்தும் திறனும் அவசியம். தொலைநோக்கும் அதிகாரப் பகிர்வும் மட்டும் போதாது. “சிறப்பாகச் சொல்வதைவிடச் சிறப்பாகச் செய்வதே மேல். அனைத்தின் மையத்திலும் இருப்பது நேர்மை.”

அறுவைச் சிகிச்சை நிபுணராக இருப்பது தனது வாழ்க்கை முறையில் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறுகிறார். “அறுவைச் சிகிச்சையில் ஒவ்வொரு முடிவும் முக்கியம். அறிவு, திறன், மதிப்பீடு, ஆதாரம், கூட்டுப்பணி ஆகியவற்றின் அடிப்படையில்தான் முடிவெடுக்கிறோம். வெற்றியளிப்பது நிரூபிக்கப்பட்ட சிகிச்சைமுறையையே பின்பற்றுகிறோம்.

“மயக்கமருந்து நிபுணர், அறுவை அரங்கச் செவிலியர், தூய்மைப் பணியாளர் இல்லாமல் தனியாக அறுவைச் சிகிச்சை செய்ய முடியாது. அசுத்தமான தரைகூடத் தொற்றை ஏற்படுத்தலாம்.”




அடுத்து கருணை. “நோய்க்கு மட்டுமல்ல, நோயாளிக்குச் சிகிச்சையளிப்பதே மருத்துவத்தின் முக்கியக் கோட்பாடு. அதற்குக் கருணை தேவை. ரோட்டரியிலும் திட்டத்தைத் தொடங்கும்முன் சமூகத்தின் தேவைகளை அறிந்து, கருணையுடன் செயல்படவேண்டும். உதவி பெறுபவர்கள் நமக்குக் கடன் பட்டவர்களாக உணரச்செய்யக்கூடாது. உதவக்கூடிய நிலையில் இருப்பதே நமது பேறு என்பதை நினைவில் கொள்ளவேண்டும். அதுதான் கருணை.”

அதேநேரம் அனைத்தையும் முற்றிலும் இலவசமாக வழங்காமல், சமூகத்தின் திறன், உழைப்பு போன்ற பங்கேற்பையும் உறுதிசெய்யவேண்டும். “முற்றிலும் இலவசமாகக் கிடைப்பவற்றின் மதிப்பு குறைவதை மருத்துவராக அறிவேன். உள்ளூர் மக்களுக்கு அனுபவ அறிவுண்டு; தங்களுக்குத் தேவையானதை அவர்களே நன்கறிவார்கள்.”

தனது தலைமைப் பாணியை ‘ABC உடன் I’ என்கிறார். “சூழலை ஆராயுங்கள்; துணிவுடன் முடிவெடுங்கள்; நெருக்கடியிலும் அமைதியாக இருங்கள்; இணைந்து செயல்படுங்கள். இவை அனைத்திலும் நேர்மையைக் குறிக்கும் ‘I’ இடம்பெறவேண்டும்.”

அவரை நன்கறிந்தவர்களும் அவரது நேர்மையையே முதன்மையாகப் பாராட்டுகிறார்கள். முன்னாள் RI இயக்குநர் ராஜு சுப்ரமணியன் கூறுகிறார்: “சிலர் முன்னின்று வழிநடத்துவார்கள்; சிலர் தலைமையின் நேர்மையால் ஊக்கமளிப்பார்கள். பரத் பாண்ட்யாவிடம் இரண்டும் உள்ளன. அமைதியான அணுகுமுறையும் ஆழ்ந்த சிந்தனையும் கொண்ட அவர், ரோட்டரி தலைமையின் சிறந்த பண்புகளைப் பிரதி பலிக்கிறார்.”

முன்னாள் RI தலைவர் K R ரவீந்திரன் கூறுகிறார்: “15 ஆண்டுகளாக அவரை நெருக்கமாகவும் சில கடினமான சூழல்களிலும் கவனித்துள்ளேன். உருவத்தில் சிறியவர்; முக்கியத்துவத்தில் உயர்ந்தவர். அணுகுமுறையில் மென்மையானவர்; கொள்கையில் அசையாதவர். பதவி வகிப்பதையும் பணியாற்றுவதையும் ஒருபோதும் குழப்பிக்கொண்டதில்லை. ரோட்டரியின் தேர்வு சிறப்பானது.”

“இது உடல்நலத்தை மட்டும் பற்றியதல்ல. மருத்துவச் சேவையைப் பெறும் வாய்ப்பு, நோய்த்தடுப்பு, தாய்-சேய் நலம், சுகாதாரம், தூய நீர், சுற்றுச்சூழல் ஆகியவையும் அடங்கும். தூய நீரோ முறையான சுகாதார வசதிகளோ நல்ல சுற்றுச்சூழலோ இல்லாமல் ஆரோக்கியமான சமூகங்கள் உருவாக முடியாது.”

சங்கங்கள் தங்களுக்கு விருப்பமான துறைகளில் - நீர் மற்றும் சுகாதாரம், தாய்-சேய் நலம், சுற்றுச்சூழல் என - பணியாற்றலாம். இவை அனைத்தும் ஆரோக்கியமான சமூகங்களுக்கு உதவுகின்றன. அதேநேரம், “போலியோ ஒழிப்பே நமது முதலாவது முன்னுரிமையாகத் தொடரும்.”

இளம் இந்தியாவுக்காக ரோட்டரி என்ன செய்யலாம் என்ற கேள்விக்கு, ஏற்கெனவே நிறையச் செய்துவருவதாகக் கூறுகிறார். இளைஞர்களின் வாழ்க்கையில் கல்வி மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்துகிறது. “கல்வியில் நிறையப் பணியாற்றுகிறோம்; முயற்சிகளை இன்னும் அதிகரிக்க வேண்டும்.”

உடல்நல விழிப்புணர்வும் கவலைக்குரியதுறை. நாட்டில் 15 வயதுக்குட்பட்டவர்களில் 20 சதவீதத்தினர் உடற்பருமனுடன் இருப்பதாகவும், அவர்கள் 35–45 வயதை எட்டும்போது பிரச்னைகளை எதிர்கொள்வார்கள் என்றும் குறிப்பிடுகிறார். RYLA நிகழ்ச்சிகள் தொழில்சார் திறன் வளர்ப்புக்கான வாய்ப்புகளை வழங்குகின்றன. இவற்றை விரிவுபடுத்துவதுடன், இளைய தலை முறைக்கான வழிகாட்டுதலையும் அதிகரிக்கவேண்டும்.

### மருத்துவமும் ரோட்டரியும்

தலைவராகப் பணியாற்றும் ஆண்டிலும் அதற்கு முன்பும் நீண்டகாலம் எவன்ஸ்டனில் இருக்கவேண்டியிருக்கும். அப்போது மருத்துவமனையும் அறுவைச் சிகிச்சைப் பணியும் எப்படி நிர்வகிக்கப்படும்?

இதற்கான பொறுப்பு மாற்றுத் திட்டம் இருப்பதாகக் கூறுகிறார் பாண்ட்யா. “நிச்சயமாக எனது அறுவைச் சிகிச்சை அரங்கைப் பிரிந்திருப்பது எனக்கு ஏக்க மளிக்கும்; அந்த அரங்கும் என்னைத் தேடும்!” இவற்றையெல்லாம் அறிந்திருந்தும், தலைவர் பொறுப்புக்குத் தனது பெயரை முன்மொழிவது கடினமான முடிவாக இருந்ததா?

“கடினமான முடிவு அல்ல.



## இந்திய ரோட்டரியின் பலங்கள்

"நமது உறுப்பினர்களும் தாராள மனப்பான்மையுமே நமது பலங்கள்" என்கிறார் பாண்ட்யா.

"2022-ல் TRF அறங்காவலராகப் பொறுப்பேற்றபோது, இந்தியாவின் பங்களிப்பு 26 மில்லியன் டாலர். ஜூன் 2026-ல் பதவிக்காலம் முடிந்தபோது 45.3 மில்லியனாக உயர்ந்தது. இது குறிப்பிடத்தக்க 74 சதவீத வளர்ச்சி.

"இந்தியாவில் நமது பணிகளின் அளவு பிரமாண்டமானது. அதிகமான உலகளாவிய மானியத்திட்டங்கள் இங்குதான் நடைபெறுவதாக நினைக்கிறேன். CSR மானியங்களைப் பயன்படுத்தும் விதம் முன்னுதாரணமானது. அவை சமூகத்திற்குப் பலவகைகளில் உதவுகின்றன."

CSR விவரங்களைக் கேட்டதும் நினைவிலிருந்தே கூறுகிறார்: "2021–22-ல் தொடங்கிய போது 2.8 மில்லியன் டாலர்; அடுத்தாண்டு 6.7 மில்லியன்; பின்னர் 8.2 மில்லியன், 11 மில்லியன் என உயர்ந்து, கடந்த ரோட்டரி ஆண்டில் 15 மில்லியனை எட்டியது." இன்னும் திரட்டுவதற்கான வாய்ப்புகள் கடலளவு உள்ளன என்கிறார்.

நிறுவனங்கள் ரோட்டேரியர்களை நம்புகின்றன. தற்போது 65 சதவீத மானியங்கள் ரோட்டேரியர்களுக்குச் சொந்தமான அல்லது அவர்கள் நிர்வகிக்கும் நிறுவனங்களிலிருந்து வருகின்றன. ரோட்டேரியர்களின் நிறுவனங்களும் பிற நிறுவனங்களும் மீண்டும் மீண்டும் மானியமளிப்பது, அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறது.

அரசுகள், NGO-க்கள், அரசு சார்பு அமைப்புகள், உள்ளாட்சி அமைப்புகளுடனான வலுவான தொடர்புகளும், நாடெங்கும் பரவியுள்ள செயல்பாடும் மற்ற பலங்கள்.

மேம்படுத்த வேண்டியது என்ன? உலகின் பிற பகுதிகளுடன் ஒப்பிடுகையில் இந்திய ரோட்டரி இளமையானது; வளர்ந்துவருகிறது. தலைமைப் பொறுப்புகளை நாடுவோரும் அதிகம்.

"பதவியை அடைய விரும்புவது தவறல்ல; அந்த விருப்பத்தை எப்படிக் கையாளுகிறோம் என்பதே முக்கியம். அதை முறையாக வழிநடத்தவேண்டும். கருத்து வேறுபாடுகளும் முரண்பாடுகளும் இருக்கும்; பகைமையின்றி அவற்றைத் தீர்க்கலாம். சில நேரங்களில் விட்டுக்கொடுத்து முன்னேறத் தயாராக இருக்கவேண்டும். இன்னொரு வாய்ப்பு நிச்சயம் வரும். இந்தியாவில் நாம் மேம்படுத்திக்கொள்ள வேண்டிய அம்சம் இது" என்கிறார்.


RC போரிவலி தலைவராகப் பொறுப்பேற்கும் Dr பரத் பாண்ட்யா.

ஆனால் மிகவும் கவனமாகச் சிந்திக்க வேண்டியிருந்தது; எனது குடும்பத்தினரும் அப்படித்தான்." மனைவி மாதவி சம்மதித்ததும் முடிவு உறுதியானது. அவர்களது மகள் சாஷ்மியும் மகப்பேறு மருத்துவர். மாதவி கணவருடன் வெளியூர் செல்லும்போது, அவரது பணிகளை மகள் கவனித்துக்கொள்வார்.

ரோட்டரி தன்னை எப்படி மாற்றியிருக்கிறது என்ற கேள்விக்கு, தனது தலைமைத் திறன்களின் வளர்ச்சியில் பெரும்பங்கை ரோட்டரிக்கே அளிக்கிறார்.

"பல்வேறு தொழில்களில் இருக்கும் பலவிதமான மனிதர்களைச் சந்திக்க வைத்தது. ஒரு தலைவராகப் பக்குவமடையவும் வளரவும் உதவியது. மேடைப் பேச்சுத் திறனையும் கூர்மைப் படுத்தியது. முன்பெல்லாம் பத்துப் பேருக்கு முன்னால் நான்கைந்து வாக்கியங்களைக்கூட என்னால் சரியாகப் பேச முடியாது."

இப்போது அர்த்தமுள்ள உரைகளுக்காக அறியப்படுகிறார். அவற்றுக்குத் தயாரிப்பு தேவையா?

“முக்கியமான கூட்டங்களுக்குத் தேவை. குறைந்தபட்சம் சில குறிப்புகளையாவது எழுதி வைத்துக் கொள்வேன். நீங்கள் வின்ஸ்டன் சர்ச்சிலாக இல்லாதவரை, கொஞ்சமாவது தயாராக வேண்டும். இல்லாவிட்டால் உரை படுதோல்வியாகிவிடும்!”

### உலகெங்கும் சேவையைக்காணும் வாய்ப்பு

ரோட்டரிக்குத் தலைமை தாங்குவதில் அவரை மிகவும் உற்சாகப்படுத்துவது எது?

“வெவ்வேறு பண்பாடுகள், நாடுகள், மொழிகள், பின்னணிகளைச் சேர்ந்தவர்களைச் சந்திப்பதும், அவர்களது பணிகளைப் பார்ப்பதும்தான். இந்தியாவில் நாம் நிறையச் செய்கிறோம் என்று நினைக்கிறோம்; உண்மையிலேயே நிறையச் செய்கிறோம். ஆனால் பிலிப்பைன்ஸ், தைவான், பிரேசில், நேபாளம், ஆஸ்திரேலியா உள்ளிட்ட பகுதிகளிலும் ரோட்டேரியர்கள் பிரமாண்டமான பணிகளைச் செய்வதைப் பார்த்திருக்கிறேன்.

“உலகெங்கும் ரோட்டேரியர்களின் பணிகளைக் காணவும், தங்கள் சமூகங்களின் தேவைகளை நிறைவேற்ற அவர்கள் சேவைத் திட்டங்களில் கொண்டுவரும் புதுமைகளை அறியவும் ஆவலாக இருக்கிறேன்.”

அமைதிக்காக ரோட்டரி ஆற்றும் பணியும், ‘புரோகிராம்ஸ் ஆஃப் ஸ்கேல்’ திட்டங்களும் முக்கியமானவை. இந்தியாவின் PWABHI திட்டத்தில், நீர் கிடைப்பதையும் சிறந்த விளைச்சலையும் உறுதி செய்ய ரோட்டேரியர்கள் மயங்க் காந்தி மற்றும் குளோபல் விகாஸ் டிரஸ்டுடன் இணைந்து செயல்படுகிறார்கள். மராத்வாடாவின் மிகவும் பின்தங்கிய சில பகுதிகளில் இப்பணி நடைபெறுகிறது.

அங்குள்ள சில விவசாயிகளின் ஆண்டு வருமானம் ஐந்து, ஏழு, ஏன் பத்து மடங்குகூட உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. ஏக்கருக்கு ரூ.40,000–50,000-ஆக இருந்த வருமானம் ரூ.3–5 லட்சமாக உயர்ந்துள்ளது.



“சிம்பயோசிஸில் உள்ள நமது ரோட்டரி அமைதி மையம் மற்றும் பிற ரோட்டரி அமைதி மையங்கள் வழியாக, மக்களிடம் அமைதிக்கான மனப்பாங்கை உருவாக்கி நிச்சயமாக மாற்றத்தை ஏற்படுத்த முடியும். மக்களை நல்லிணக்கத்திலும் அமைதியிலும் ஒன்றிணைத்து, மோதல்களை எப்படித் தவிர்ப்பது என்பதில் கவனம் செலுத்தலாம்.”

### குடும்பத்தின் உறுதுணை

ரோட்டரிக்கு அதிக நேரம் அளித்ததால் குடும்பத்தினர் எத்தகைய இழப்புகளை எதிர்கொண்டனர்? குடும்பத்துடன் செலவிடும் நேரத்தைப் பொறுத்தவரை, அனைவரும் சில தியாகங்களைச் செய்திருப்பதை பாண்ட்யா ஏற்கிறார்.

“ஆனால் சமநிலையைப் பேண என்னால் முடிந்தவரை முயன்றிருக்கிறேன். ரோட்டரி நிகழ்ச்சிக்குச் செல்லும்போது, எனது நேரத்தை அந்தப் பணிக்கே முழுமையாக அளிப்பேன். கவனத்தைத் திசைதிருப்பும் வேறு எதிலும் ஈடுபடமாட்டேன். அந்தப் பணி முடிந்ததும் வீட்டிற்குத் திரும்பி விடுவேன் – குடும்பத்திற்காகவும் எனது மருத்துவப் பணிக்காகவும்.”

மேலும் கூறுகிறார்: “மாதவி சில நேரங்களில் வருத்தப்படுவது உண்மைதான். ஆனால் அவரும் எனது இரு மகள்களும் எப்போதும் உறுதுணையாக இருந்திருக்கிறார்கள். கடந்த ஓரிரு ஆண்டுகளில் மகள்கள் மும்பைக்கு வெளியே படித்துவருவதாலும், எனது ரோட்டரி பணிகள் அதிகரித்திருப்பதாலும், குடும்பமாக ஒன்றாக நேரம் செலவிடுவது மிகவும் சவாலாகியுள்ளது.”

தனது மருத்துவப் பணியையும் ரோட்டரி சேவையையும் இணைக்கும் வாழ்க்கைப் பார்வையை இறுதியாகப் பகிர்கிறார்:

“அறுவைச் சிகிச்சை நிபுணராக, எனது வாழ்க்கையின் பெரும்பகுதியை மக்களைக் குணப்படுத்துவதற்காகச் செலவிட்டுள்ளேன். ரோட்டரி வழியாகப் பல ஆண்டுகளைச் சமூகங்களுக்குச் சேவை செய்வதில் செலவிட்டுள்ளேன். இரண்டும் எனக்கு ஓர் உண்மையை உணர்த்தியுள்ளன: உலகம் முழுவதையும் உங்களால் மாற்ற முடியாமல் இருக்கலாம். ஆனால் ஒருவரின் உலகத்தை உங்களால் மாற்ற முடியும்.

“ஒவ்வொரு ரோட்டேரியரும் இதை இன்னும் அடிக்கடி செய்வதற்கு நம்மால் உதவ முடிந்தால், ரோட்டரிக்கு மேலும் சிறந்த, துணிவான, அர்த்தமுள்ள எதிர்காலம் அமையும். அதுவே தன்னலம் கருதாத சேவை.”

படங்கள்: ரஷீதா பகத்

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

PROUD BNI MEMBER

## Pankaj Shah

COL Representative District 3131 2026-28
RI Convention Promotion Chair : Taipei, 2025-26
DRFC RID 3131 RY 2025-26
ARRFC ZONE 7 RY 2023-25
District Membership Chair 2022-25
District Learning Facilitator 2024-25
District Governor 2021-22
Charter Member : Rotary Club of Pune Sarasbaug



+91 98220 57299
rotary.pankajshah@gmail.com

Personal Secretary : 81490 57299 | Email : secretary.pankajshah@gmail.com

GDM RRFM

Shree Ganesh Dal & Besan Mills - Shirwal
Ramtilak Roller Flour Mills (p) Ltd. - Chakan
Mandar Health And Hygiene Pvt. Ltd. - Phaltan
M/s. Arun Narayandas Shah - Lonand
Shree Ganesh Shelters - Pune
M/s Deepchand Venichand Shah, Pune.

www.ramtilak.com | www.ganeshdal.com
• ISO 9000:2015 • ISO 22000:2015

**Head Office**
Tel : +91 20 24404900 (30 lines)
Call Center : 7888039303.
admin@ramtilak.com

SCAN for the Location

**Corporate Office:**
Shop No. 243,
Chatrapati Shivaji Market Yard,
Gultekadi, Pune,
Maharashtra-411037

CRESCO HEALTHCARE
**Multibrand Pathology**
www.crescohealthcare.com

PATHOLOGY HOME COLLECTION
MEDICAL STORE - CHEMIST AND DRUGGIST

To avail the services
**89564 66801/2/3/4/5**
Download Cresco app

**PATHOLOGY PARTNERS**

Grant Medical Foundation Ruby Hall Clinic | DMH | Bharati Vidyapeeth's Bharati Hospital and Research Centre Pune | Sahyadri Speciality Labs | Trutest Laboratories | Metropolis The Pathology Specialist




*சுனாலி சலூஜாவுக்குத் தனது தொப்பியை அணிவிக்கிறார் RI தலைவர் யின்கா பாபலோலா. உடன் உற்சாகப்படுத்துவோர் (வலமிருந்து): RI துணைத் தலைவர் M முருகானந்தம், TRF அறங்காவலர் A S வெங்கடேஷ், Rtn சுதீர் ரெட்டி, RID 3150 DG உதய் பிலானி, RI இயக்குநர் K P நாகேஷ்.*

# TRF-க்காக கலகலப்பான தொப்பி ஏலம்

**ரஷீதா பகத்**

அண்மையில் RI தலைவர் யின்கா பாபலோலா ஹைதராபாத் வந்தபோது நடைபெற்ற TRF நிகழ்ச்சியில், அவர் அணிந்திருந்த சிவப்புத் தொப்பி அனைவரையும் மகிழ்வித்த ஓர் ஏலத்திற்கு வித்திட்டது. அந்த நிகழ்ச்சியின் மிகவும் ரசிக்கத்தக்க தருணங்களில் ஒன்றாக அது அமைந்தது. அழகிய பூவேலைப் பாடுகளுடன் அணிந்திருந்த தொப்பியைச் சுட்டிக்காட்டி, "இது சாதாரணத் துணித் தொப்பிதான். ஆனால் கையால் செய்யப்பட்டு, கையாலேயே பூவேலைப்பாடும் செய்யப்பட்டது" என்று மிகவும் இயல்பாகவும் மனதைக் கவரும் விதத்திலும் கூறினார். அதில் ரோட்டரி இலச்சினை மஞ்சளிலும், ஆண்டின் தலைமைத்துவக் கருப்பொருளான 'நீடித்த தாக்கத்தை உருவாக்குவோம்' இண்டிகோ நிறத்திலும் எம்பிராய்டரி செய்யப்பட்டிருந்தன.

அரங்கிலுள்ள எந்த ரோட்டேரியரும் உரிய தொகை கொடுத்தால் தொப்பியை வழங்க தயார் என்றும், அந்தத் தொகை ரோட்டரி அறக்கட்டளைக்குச் சேரும் என்றும் அறிவித்தார். இந்த வாய்ப்பை உடனடியாகப் பயன் படுத்திக்கொண்ட RID 3150 DG உதய் பிலானி, தொப்பிக்குத் தாம் $5,000 வழங்குவதாக அறிவித்து ஏலத்தை உற்சாகமாகத் தொடங்கிவைத்தார். அதைத் தொடர்ந்து, ஒவ்வொரு முறையும் $500 முதல் $1,000 வரை கூடுதலாக அறிவிக்கப்பட்டு, ஏலத்தொகை படிப்படியாக உயர்ந்துகொண்டே சென்றது. பிலானியின் உதவி ஆளுநரும் AKS உறுப்பினருமான (நிலை 3) சிரஞ்சீவ் சலூஜாவும் மனைவி சுனாலியும் முக்கியப் போட்டியாளர்களாக இருந்தனர்.

இதற்கிடையில், அரங்கிலிருந்த RI துணைத்தலைவர் M முருகானந்தமும் தமது பங்கிற்கு ஏலத்தொகைகளை அறிவித்துப் போட்டியில் குதித்தார். அவர் களமிறங்கியதும் ஏலப் போட்டி மேலும் சூடுபிடித்தது. தொகை வேகமாக $10,000, $15,000, $25,000 என உயர்ந்தது. இறுதியில், "$30,000... இதுதான் எனது கடைசி ஏலத்தொகை" என்றார் முருகானந்தம்.

RI தலைவரின் தொப்பி தங்கள் மாவட்டத்திலேயே, குறிப்பாக ஹைதராபாத்திலேயே



இடமிருந்து: RI இயக்குநர் நாகேஷ், DG பிலானி, சுனாலி, சிரஞ்சீவ் சலூஜா, தலைவர் பாபலோலா, அறங்காவலர் வெங்கடேஷ், RI VP முருகானந்தம்.

இருக்கவேண்டும் என்று ரோட்டேரியர்களை ஊக்குவித்தார் பிலானி. இறுதியாக, சலூஜா $31,000 வழங்குவதாக அறிவித்து, பரபரப்பாக நடைபெற்ற அந்தத் தொப்பி ஏலத்தை வெற்றிகரமாக முடித்துவைத்தார். ஆரவாரமும் கைதட்டலும் எழ, சுனாலியின் தலையில் தொப்பியை அணிவித்தார் பாபலோலா.

பின்னர் 'ரோட்டரி நியூஸ்' இதழிடம் பிலானி கூறினார்: "நிகழ்ச்சி அரங்கிற்கு நடந்துசெல்லும்போதுதான் பாபலோலாவிடம் இந்த யோசனையைச் சொன்னேன். இதனால் TRF-க்கு ரூ.30 லட்சம் கிடைத் திருப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி!"

இதுபோன்ற மற்றொரு அனுபவமாக, ஹாம்பர்க் மாநாட்டில் நான்கு ஓவியங்கள் ஏலமிடப்பட்டபோது தமக்கும் மனைவிக்கும் இடையே ஏற்பட்ட வேடிக்கையான புரிதலையும் அவர் நினைவுகூர்ந்தார். "ஓர் ஓவியம் வாங்கலாம் என்று மனைவியிடம் கூறிவிட்டு, ஒன்றை ஏலத்தில் எடுத்தேன். அதற்குப் பணம் செலுத்தச் செல்வதற்குள், எல்லா ஓவியங்களையும் வாங்கலாம் என்று நான் சொன்னதாக நினைத்த என் மனைவி, மற்ற மூன்றையும் ஏலத்தில் வாங்கிவிட்டார்! மொத்தம் 35,000 யூரோக்கள் செலுத்தியது நினைவிருக்கிறது."

எப்படியிருந்தாலும், அனைத்தும் நல்ல நோக்கத்திற்காகத்தானே! வாழ்க TRF!■

# ரோட்டரியை அறிய கையடக்க வழிகாட்டி




நூல் : உள்ளங்கையில் உங்கள் ரோட்டரி
ஆசிரியர் : PDG ஜார்ஜ் சுந்தரராஜ், RID 3203
விலை : ரூ.100
மின்னஞ்சல் : geopris12@gmail.com

ரோட்டரியின் அடிப்படைத் தகவல்களைத் தொகுத்துள்ள இந்நூல், புதிய உறுப்பினர்களுக்கு வழிகாட்டியாகவும் அனுபவமிக்கவர்களின் அறிவைப் புதுப்பிக்கும் கையேடாகவும் விளங்குகிறது.

ஜூலையில் வெளியான ஆங்கிலப் பதிப்பின் 5,500 பிரதிகள் விரைவிலேயே விற்றன என்கிறார் RID 3233 PDG A சுப்ரமணியன். ஆகஸ்டில் வெளியான 'உள்ளங்கையில் உங்கள் ரோட்டரி' தமிழ்ப் பதிப்பு, பத்தே நாட்களில் 2,000 பிரதிகள் விற்றது. இந்தி மொழிபெயர்ப்பு நடைபெறுகிறது.

RLI சர்வதேசத் துணைத் தலைவரான ஆசிரியர், விற்பனை வருவாயை TRF-க்கு வழங்க உறுதியளித்துள்ளார். மூன்றாண்டுகளுக்கு முன் சாலை விபத்தில் மறைந்த மனைவி Rtn பிரிசில்லாவின் நினைவாக $25,000 மதிப்பிலான பெயரிடப்பட்ட நிரந்தர நிதியைத் தொடங்கியுள்ளார். நூல் விற்பனையிலிருந்து மேலும் $1,000 இந்நிதியில் சேர்ந்துள்ளது.

RI போலியோபிளஸ் தலைவரும் முன்னாள் RLI சர்வதேசத் தலைவருமான மைக்கேல் மெக்கவர்ன், RI தலைவர் பதவியின் ஆதரவுடன் ஃபிராங்க் டெவ்லின் வெளியிட்ட 'Frank Talk' நூல்களுக்குப் பிறகு, மிகவும் வெற்றிகரமான ரோட்டரி நூல் வெளியீடு இதுவெனப் பாராட்டியுள்ளார்.

மாவட்ட, சங்கத் தலைவர்களும் இதன் நடைமுறைப் பயனைப் பாராட்டுகின்றனர். RC காலிகட் கல்ச்சுரல் சிட்டி தலைவர் சுபிஷா மது, "தகவல்செறிவுடன் எளிதில் புரிகிறது. எப்போதும் என் பையில் வைத்திருக்கிறேன்; ஓய்வு நேரத்தில் வாசிக்கிறேன். பயனுள்ள நூலை உருவாக்கியதற்கு நன்றி" என்கிறார்.

# உடனடிப் பலன்களைக் கடந்து நீடித்த தாக்கத்தை உருவாக்குங்கள்: பாபலோலா

ஜெய்ஸ்ரீ

ஆகஸ்டில் இந்தியப் பயணத்தின் ஒரு பகுதியாக கோவா வந்த RI தலைவர் யிங்கா பாபலோலா முன்னிலையில், RID 3170-ல் 35 புதிய ரோட்டராக்ட் சங்கங்களுக்குப் பட்டயம் வழங்கப்பட்டது. RC போர்வோரிம் நடத்திய கூட்டத்தில் ரோட்டராக்டர்களிடம் உரையாற்றிய அவர், புதிய சங்கங்களை வாழ்த்தி யதுடன், பட்டயம் வழங்குவது தொடக்கம்தான் என்பதை ரோட்டேரியர் களுக்கு நினைவூட்டினார்.

“ஆற்றல் பெறும் உறுப்பினர் வாழ்நாள் உறுப்பினராக இருப்பார்” என்ற பாபலோலா, ஆதரவு வழங்கும் ரோட்டரி சங்கங்கள் ரோட்டராக்டர்களுக்கு ரோட்டரியை அறிமுகப்படுத்தி, வழிகாட்டி, வளர்த்தெடுக்கவேண்டும் என்றார். தனது ரோட்டராக்ட் பயணத்தை நினைவுகூர்ந்து, “ரோட்டரி என்னைக் கண்டறிந்து, எனது வளர்ச்சியில் முதலீடு செய்தது” என்றார். அந்த முதலீடே இன்றைய நிலைக்கு அவரைக் கொண்டுவந்துள்ளது.

“இந்த அமைப்பால் நாம் அனைவரும் பயனடைந்துள்ளோம். இப்போது ரோட்டரிக்குத் திருப்பியளிக்க வேண்டிய நேரம். ரோட்டரியின் பயணம் தொடர, அடுத்த தலைமுறை பொறுப்பேற்க அவர்களைத் தயார்படுத்துவோம்.” ரோட்டராக்டர்களிடம், “அனுமதிக்காகக் காத்திருக்காதீர்கள். முன்வாருங்கள்; உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்; முன்முயற்சி எடுங்கள். தலைமை என்பது செயல்படுவதுதான்” என்றார்.

பின்னர் TRF நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியில், “நமது ரோட்டரி அறக்கட்டளைக்கு” தாராளமாகப் பங்களித்தவர்களுக்கு நன்றி தெரிவித்தார். “‘ரோட்டரி அறக்கட்டளை’ என்று மட்டுமே சொன்னால், அது எங்கோ இருக்கும் வேறு யாருக்கோ சொந்தமானது; நாம் உதவுமாறு கேட்கப்படுகிறோம் என்பதுபோல் தோன்றுகிறது. ஆனால் அது நமது அறக்கட்டளை” என்று வலியுறுத்தினார்.

### மாற்றத்தைத் தாண்டிய தாக்கம்

உடனடிப் பலன்களைக் கடந்து நீடித்த தாக்கத்தில் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொண்டார். “மாற்றம் தொடக்கம்தான்; நிலைத்திருப்பதே தாக்கம்” என்ற அவர், 2022 TRF புரோகிராம்ஸ் ஆஃப் ஸ்கேல் முயற்சியான ‘நைஜீரியாவில் ஆரோக்கியமான குடும்பங்களுக்காக ஒன்றிணைவோம்’ திட்டத்தை எடுத்துக்காட்டினார்.

கேமரூன் எல்லையருகே வடக்கு நைஜீரியாவில் செயல்படுத்தப்பட்ட முன்னோடித் திட்டம், தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் இறப்பை 25 சதவீதம் குறைக்க இலக்கு நிர்ணயித்தது. இரண்டாண்டுகளில் தாய்மார் இறப்பு சுமார் 35 சதவீதமும் குழந்தை இறப்பு சுமார் 50 சதவீதமும் குறைந்தன.

ஒரு சுகாதார மையத்திற்குச் சென்றபோது, சுமார் 17 மாதங்களுக்கு முன்புதான் ரோட்டரி அங்கு பணியைத் தொடங்கியதாகவும், முந்தைய 12 மாதங்களில் ஒரு தாயோ குழந்தையோகூட அங்கே இறக்கவில்லை என்றும் தலைமை மருத்துவ அதிகாரி தெரிவித்தார்.



*இடமிருந்து: DG லென்னி டா கோஸ்டா, RI தலைவர் யிங்கா பாபலோலா, கோவா முதல்வர் பிரமோத் சாவந்த், RI இயக்குநர் K P நாகேஷ்.*




டெல்லியில் இடமிருந்து: RI இயக்குநர் நாகேஷ், RID 3011 DG அஜித் ஜாலன், பாபலோலா, RID 3012 DG அமித் குப்தா, மனைவி ஸ்வாதி, RI VP முருகானந்தம்.

"இதுதான் தாக்கம்" என்றார் பாபலோலா.

தனது சங்கத்தின் அனுபவத்தையும் பகிர்ந்தார். ஆரம்பத்தில் கொசுவலைகள், பிரசவப் பொருள்கள், ரத்தச்சோகைக்கான மாத்திரைகள் வழங்கப்பட்டன. ஆனால் பெற்றவர்களில் பலருக்கு அவை தேவையில்லை என்பதை உணர்ந்ததும் அணுகுமுறை மாறியது. கர்ப்பகாலப் பராமரிப்புக்கான பதிவுக் கட்டணத்தைக்கூடச் செலுத்த முடியாத பெண்களை அடையாளம் கண்டு, கட்டணத்தைச் செலுத்தி, கொசுவலைகள் வழங்கினர். பிறக்கும் குழந்தைகளுக்குத் தேவையான பொருள்களையும் வழங்குவதாக உறுதியளித்தனர்.

அடுத்த தடுப்பூசி நிகழ்ச்சியில் சுகாதாரப் பணியாளர்கள் குழந்தைகளைச் சுட்டிக்காட்டி, "ரோட்டரி, இதோ உங்கள் குழந்தை" என்றார்கள். "அவை 'ரோட்டரி குழந்தைகள்' ஆகிவிட்டன. கூடுதல் செலவின்றி, சற்றுக் கூடுதலாகச் சிந்தித்ததால் தாக்கத்தை உருவாக்கினோம்."

### வளர்ச்சிக்கு இளைய தலைமுறை

விரைவில் இரண்டாகப் பிரியவுள்ள RID 3170-ஐ வாழ்த்திய பாபலோலா, அதன் வளர்ச்சி ஆரோக்கியமான அமைப்பின் அடையாளம் என்றார். புதிய உறுப்பினர்களைச் சேர்க்காத சங்கங்கள் அழிவையும், புதிய சங்கங்களை உருவாக்காத மாவட்டங்கள் இணைப்பையும் எதிர்கொள்ளும் என்று எச்சரித்தார். இணைப்புகள் தொடர்ந்தால், மாவட்ட மாநாடுகள் அண்டை நாடுகளான பாகிஸ்தானிலோ வங்கதேசத்திலோகூட நடைபெறலாம் என்று நகைச்சுவையாகக் குறிப்பிட்டார்.

RI இயக்குநர் K P நாகேஷ், விளையாட்டு, கலைநிகழ்ச்சிகள், RYLA, சுற்றுலா, தொழிற்சாலைப் பார்வையிடல் மூலம் ரோட்டராக்டர்களுடன் தொடர்பைப் பேணி, ரோட்டரியில் அவர்களது ஆர்வத்தை நிலைநிறுத்தவேண்டும் என்றார். "ரோட்டரி வழங்கும் வாய்ப்புகளுடனும் வாழ்நாள் பாடங்களுடனும் ஒப்பிட்டால் ஆண்டுச் சந்தாவான 5 டாலர் சிறிய தொகையே" என்றும் விளக்கினார்.

சக இயக்குநர் M முருகானந்தத்துடன் இணைந்து, செப்டம்பர் 30-க்குள் இந்தியாவில் 1,000 புதிய ரோட்டராக்ட் சங்கங்களையும் ஒரு லட்சம் ரோட்டராக்டர்களையும் உருவாக்க உறுதியேற்றுள்ளதாக அறிவித்தார். ஆப்பிரிக்காவுக்குக் குறைந்தது பத்து மருத்துவச் சேவைக் குழுக்களை அனுப்பவும் திட்டமிடப்பட்டுள்ளது. "மாதந்தோறும் ஒன்று அல்லது இரண்டு இந்திய மருத்துவக் குழுக்கள் ஆப்பிரிக்க நாடுகளுக்குச் செல்ல உதவுமாறு பிரதமரின் ஆதரவைக் கோரியுள்ளோம்" என்றார்.

TRF அறங்காவலர் A S வெங்கடேஷ், ஆறு அல்லது ஏழு ஆண்டுகளுக்கு முன்பு 20 மில்லியன் டாலருக்கும் குறைவாக இருந்த இந்தியாவின் அறக்கட்டளைப் பங்களிப்பு, கடந்தாண்டு 45 மில்லியன் டாலரைக் கடந்ததாகக் குறிப்பிட்டார். உலகின் இரண்டாவது பெரிய நன்கொடை நாடான இந்தியா, 100 மில்லியன் டாலரை இலக்காகக் கொள்ளவேண்டும் என்றார்.

நைஜீரியாவின் கானோ மருத்துவமனையில் பச்சிளங் குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சைப் பிரிவை (NICU) அமைத்து, அவசரநிலைகளை எதிர்கொள்ள மருத்துவர்களுக்குப் பயிற்சியளித்த RC பனாஜி ரிவேராவைப் பாராட்டினார். "நிதி பெறும் நாடாக இருந்த இந்தியா, வழங்கும் நாடாக மாறுவது மகிழ்ச்சியளிக்கிறது. முன்பெல்லாம் சர்வதேசப் பயிற்சி மாநாட்டிற்கு, திட்ட விவரக் கையேடுகளை எடுத்துச்சென்று வளர்ந்த நாடுகளிடம் நிதியுதவி கோரிய நாட்கள் நினைவிருக்கின்றன" என்றார்.





*கொல்கத்தாவில் பாபலோலா, மனைவி பிரெஸி, RI VP M முருகானந்தத்துடன் PRIP சேகர் மேத்தா (பிரெஸிக்கு அருகில்), PRID அனிருத்த ராய்சௌதுரி, DG தபஸ் பட்டாச்சார்யா. PDGs ஷியாமஸ்ரீ சென், அஜய் அகர்வால், முகுல் சின்ஹா, உத்பல் மஜும்தாரும் உள்ளனர்.*

**தன்யவாத் முயற்சி**

RID 3192 DG ரவிசங்கர் டகோஜு, நாடு தழுவிய சுற்றுச்சூழல் மற்றும் கல்வித் திட்டமான 'தன்யவாத்' பற்றி ரோட்டராக்டர்களுக்கு அறிமுகப்படுத்தினார். பத்து லட்சம் மரக்கன்றுகள், விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் ஒரு லட்சம் தண்ணீர்க் கிண்ணங்கள், பழங்குடிப் பகுதிகளில் 5,000 பள்ளிகளுக்கு ஆதரவு ஆகியவை இதில் அடங்கும். "உங்கள் தலைமுறை தேவைகளைக் குறைத்து எளிமையாக வாழப் பழகவேண்டும்" என்ற அவர், மனைவி பவுலாவுடன் தங்களது சொத்தில் 85 சதவீதத்தை TRF-க்கு வழங்க உறுதியளித்துள்ளதாகக் கூறினார்.

DG லென்னி டா கோஸ்டா, RID 3170-ல் 100 புதிய ரோட்டராக்ட் சங்கங்கள், 52 ரோட்டரி சங்கங்கள், 300-க்கும் மேற்பட்ட இன்டராக்ட் சங்கங்களை உருவாக்க உறுதி யளித்தார். கோவா முதல்வர் பிரமோத் சாவந்தின் அழைப்பின்பேரில் ரோட்டரி தலைவர்கள் சுதந்திர தின நிகழ்ச்சியிலும் பங்கேற்றனர்.

**பிற நகரங்களில்**

கொல்கத்தாவில், RID 3291 ரோட்டரி சதன், குழந்தைகள் நூலகம், பண்பாட்டுச் செயல்பாட்டு மையம், அமைதிக் கம்பம் (Peace Pole) ஆகியவற்றைப் பார்வையிட்ட பாபலோலா, RI துணைத்தலைவர் M முருகானந்தத்துடன் 150 மாற்றுத்திறனாளிகளுக்குச் சக்கர நாற்காலிகளை வழங்கினார். DG தபஸ் பட்டாச்சார்யா தலைவர்களை வரவேற்றார்.

டெல்லியில் பாபலோலா, முருகானந்தம், நாகேஷ் முன்னிலையில், டகோஜுவுக்கும் DGக்கள் அஜித் ஜாலன், அமித் குப்தா தலைமையிலான RID 3011, 3012-க்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

TRF கொள்கைகளின்படி, இரு மாவட்டங்களிலும் தன்யவாத் திட்டத்தை நீண்டகாலம் ஆதரிப்பதற்கான கட்டமைப்பை இது உருவாக்குகிறது. தலைவர்களின் பதவிக்காலங்களைத் தாண்டிய தொடர்ச்சி, மாவட்டங்களின் கூட்டுச் செயல்பாடு, ஒருங்கிணைப்புக் குழு, அடுத்தடுத்த தலைமைகளின் பங்கேற்பு ஆகியவை வலியுறுத்தப் படுகின்றன. திட்டங்களை முறையாகத் தேர்ந்தெடுத்தல், கண்காணித்தல், பொறுப்புடன் நிர்வகித்தல் ஆகியவற்றை உறுதிசெய்வதே நோக்கம்.

வாரணாசியில் முருகானந்தம், மற்றும் RIDE பாசு தேவ் கோல்யானுடன் பங்கேற்ற பாபலோலா, RID 3100, 3110, 3120, 3250, 3261 ரோட்டேரியர்களுக்கான பல்மாவட்ட உறுப்பினர் மாநாட்டில் உரையாற்றி, அவர்களது TRF பங்களிப்புகளைப் பாராட்டினார். ■





*வாரணாசியில் இடமிருந்து: RIDE பாசு தேவ் கோல்யான், RID 3120 DG பூனம் குலாட்டி, பாபலோலா, பிரெஸி, RI VP முருகானந்தம், மனைவி சுமதி.*




# வண்ணச்சுவர்களில் விழிப்புணர்வு

ஜெயஸ்ரீ

பெங்களூரு பையப்பனஹள்ளி காவல்நிலையத்தின் வெளிச்சுவர்கள், போதைப்பொருள் எதிர்ப்புச் செய்தியைச் சொல்லும் வண்ணமயமான கிராஃபிட்டி ஓவியங்களால் புதுப்பொலிவு பெற்றுள்ளன. கன்னடமும் ஆங்கிலமும் கலந்த ‘பேடா ப்ரோ’ – ‘வேண்டாம் நண்பா’ என்பதே வாசகம். வழிப்போக்கர்கள், குறிப்பாக இளைஞர்கள், நின்று செல்ஃபி எடுக்குமளவிற்கு ஓவியங்கள் கவனத்தை ஈர்க்கின்றன.

ரோட்டரி இ-சங்கம் ஆஃப் பெங்களூர், RID 3191 மேற் கொண்டுள்ள இரண்டாவது முயற்சி இது. அடுகோடி காவல்நிலையச் சுவர்களில் உருவாக்கப்பட்ட முதல் ஓவியங்கள் பெண்கள் பாதுகாப்பு, போதைப்பொருள் பயன்பாடு, சைபர் குற்றங்கள் குறித்துப் பேசின. கொல்கத்தா, மும்பை, பெங்களூருவைச் சேர்ந்த தொழில்முறை ஓவியர்கள் பணியாற்றினர்.

“நகரில் பெண்கள் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்த விரும்பிய கர்நாடகக் காவல்துறையினரைச் சந்தித்தபின், 2024-ல் முதல் ஓவியத்தை உருவாக்கினோம். கடந்துசென்ற பின்னரும் நினைவில் நிற்கும் வலிமையான ஓவியங்களால் கதைகளைச் சொல்லத் திட்டமிட்டோம்” என்கிறார் சங்க இயக்குநர் நிவேதிதா தத்.

சில ஆண்டுகளுக்கு முன் பெல்ஜியத்தின் கென்ட் நகரில் மகனைச் சந்திக்கச் சென்றபோது, கிராஃபிட்டியால் அலங்கரிக்கப்பட்ட ஒரு குறுகிய தெருவைப் பார்த்ததே அவருக்கு உந்துதல். “அற்புதமாக இருந்தது. இந்தியாவிலும் முக்கியச் செய்தியைச் சொல்ல இதைப் பயன்படுத்தலாம் என்று உடனே தோன்றியது” என்கிறார்.

அண்மையில் மற்றொரு சமூக விழிப்புணர்வுத் திட்டத்திற்காக பையப்பனஹள்ளி காவல்நிலையச் சுவர்களைப் பயன்படுத்த அனுமதி கேட்டார். “2028-க்குள் போதையற்ற நகரை உருவாக்கச் செயல்படும் காவல்துறையினர், போதைப்பொருள் எதிர்ப்பில் கவனம் செலுத்தச் சொன்னார்கள். அவர்களது வாசகமே ‘பேடா ப்ரோ’.”

முந்தைய திட்டத்தில் பணியாற்றிய கொல்கத்தா ஓவியர் சயாம் போரே மீண்டும் அழைக்கப்பட்டார். போதைப்பொருளின் விளைவுகளைப் பல காட்சிகள் இணைந்த ஓவியமாக வடித்துள்ளார். “ஒவ்வொரு படமும் வேதனையின் கதையைத் தெளிவாகச் சொல்கிறது” என்கிறார் நிவேதிதா.

கிளர்ச்சியுடனும் சில சூழல்களில் அனுமதியற்ற சுவரோவியங்களுடனும் தொடர்புடைய கிராஃபிட்டியைத் தேர்ந்தெடுத்தது ஏன்? “அது கிளர்ச்சியாளர்களின் கலைமொழி; இளைஞர்களை எளிதில் ஈர்க்கும். அதன் வலிமையான காட்சி ஈர்ப்பை, முக்கியமான சமூகப் பிரச்னைகளின்மீது இளைஞர்களின் கவனத்தைத் திருப்புவதற்காக நாங்கள் பயன்படுத்துகிறோம்.”

பெங்களூருவில் மேலும் ஓவியங்களை உருவாக்கச் சங்கம் திட்டமிட்டுள்ளது. “அடுத்த ஆண்டு 60–100 சுவர்களுக்கு இம்முயற்சியை விரிவுபடுத்த DGE ஹரிணி ரவீந்திரநாத் ஆர்வமாக உள்ளார்” என்கிறார் நிவேதிதா. ■



# குழந்தைகளுக்காகத் துடிக்கும் இதயங்கள்

ரஷீதா பகத்

ரோட்டரி என்றால் என்ன, அதன் நம்பிக்கைகள் என்ன, ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் வாழ்பவர்களின் உதவியுடன் உலகின் பல பகுதிகளில் அது எப்படி வாழ்க்கையை மாற்றுகிறது என்பதை விளக்கும் ஒரு திட்டத்தைக் குறிப்பிடச் சொன்னால், 'சேவ் லிட்டில் ஹார்ட்ஸ்' திட்டத்தையே தேர்ந்தெடுப்பேன். RC தானே பிரீமியம், RID 3142 செயல்படுத்தும் இத்திட்டத்திற்கு, அமெரிக்காவின் மினியாபொலிஸ் பகுதியைச் சேர்ந்த RC மேப்பிள் குரோவ், RID 5950 தொடர்ந்து உறுதுணையாக உள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இவ்விரு சங்கங்களும் இணைந்து உலகளாவிய மானியத்திற்கு விண்ணப்பித்தன. மகாராஷ்டிராவில் பச்சிளங்குழந்தைகள் மற்றும் பிற குழந்தைகளின் இதய அறுவைச் சிகிச்சைகளுக்கு நிதியளிப்பதே நோக்கம். இந்தியாவின் வளமான மாநிலங்களில் ஒன்றாக மகாராஷ்டிரா இருந்தாலும், மற்ற மாநிலங்களைப்போலவே இங்கும் ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்குத் தேவையான இதயச் சிகிச்சை கிடைப்பதில்லை. குழந்தைகளுக்கான அறுவைச் சிகிச்சையின் பெரும் செலவைப் பெற்றோரால் ஏற்க முடியாததால், அவர்கள் உடல்நலம் குன்றி, இயல்பான வாழ்க்கையை இழந்து தவிக்கிறார்கள்.

இந்த மானியத்திற்காக TRF-க்கு விண்ணப்பித்த அதே காலகட்டத்தில், வடக்கு மகாராஷ்டிராவின் நந்துர்பார் மாவட்டத்தில் ஒரு விவசாயத் தம்பதிக்குப் பெண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தையின் வருகைக்காக அவர்கள் 15 ஆண்டுகள் காத்திருந்தனர். தாய் கருவுறுவதற்காக மேற்கொண்ட தொடர்ச்சியான IVF சிகிச்சைகள் அவரது உடலுக்கு வலியையும் மனஅழுத்தத்தையும் ஏற்படுத்தியதுடன், குடும்பத்தின் பணத்தையும் கரைத்திருந்தன.

ஆனால் குழந்தை பிறந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. அதன் சிறிய இதயத்தில் பிறவியிலேயே துளை இருந்தது. அதைச் சரிசெய்ய அறுவைச் சிகிச்சை தேவைப்பட்டது. ஏற்கெனவே சேமிப்பை இழந்திருந்த பெற்றோரிடம் அதற்குப் பணமில்லை.

அப்போது அவர்களுக்குத் தெரியாத ஒன்று: இதுபோன்ற குழந்தைகளுக்கு உதவுவதற்காக RC தானே பிரீமியத்தின் முன்னாள் தலைவர் ராம் பட்நாகர், குழந்தைகளின் இதயச் சிகிச்சைக்கான தீவிர முயற்சியைத் தொடங்கியிருந்தார். வசதியற்ற குடும்பங்களில் இதய நோயுடன் பிறக்கும் குழந்தைகளைக் காப்பாற்றுவதே 'சேவ் லிட்டில் ஹார்ட்ஸ்' திட்டத்தின் நோக்கம்.

"இத்தகைய பிறவி இதய



*அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு நலம் பெறும் குழந்தை.*

நோயுள்ள குழந்தைகளுக்கு விரைவில் சிகிச்சையளிக்காவிட்டால், பலர் முதல் பிறந்தநாளைக்கூடக் காணமாட்டார்கள். நீண்டகாலம் ஏங்கிப் பெற்ற குழந்தையை இழந்துவிடுவோமோ என்ற வேதனையில் பெற்றோர் இருந்தனர். இந்தக் குழந்தையைப் பற்றி எங்களுக்குத் தெரியவந்தபோது, அவளுக்கு ஏற்கெனவே இரண்டு வயதாகிவிட்டது" என்கிறார் பட்நாகர்.

இதயத்திலிருந்த துளையால் நுரையீரலுக்கு அதிக அழுத்தம் ஏற்பட்டு, மூச்சுவிடுவது சிரமமாக இருந்தபோதும் குழந்தை உயிர்வாழ்ந்திருந்தது. ஆனால் அடிக்கடி சளித்தொல்லை ஏற்பட்டது.

"சாப்பிடுவதே அவளைச் சோர்வடையச் செய்தது. விளையாடுவது கிட்டத்தட்ட இயலாதது. துளையை மூடாவிட்டால், குறுகியதும் வலிநிறைந்ததுமான வாழ்க்கையே அவளுக்குக் கிடைத்திருக்கும். அருமை மகளை இழந்துவிடுவோமோ என்ற எண்ணம் பெற்றோரைத் தொடர்ந்து வாட்டியது."

இதற்குள் 1,46,000 டாலர் உலகளாவிய மானியம் கிடைத்து விட்டது. ஏப்ரல் 2026-ல் தானேயிலுள்ள

*குழந்தைகளுக்கான அறுவைச் சிகிச்சையின் பெரும் செலவைப் பெற்றோரால் ஏற்க முடியாததால், அவர்கள் உடல்நலம் குன்றி, இயல்பான வாழ்க்கையை இழந்து தவிக்கிறார்கள்.*





*இடமிருந்து:* Dr *ஸ்ரீனிவாஸ்* L, Dr *ராஜ் கன்காரி,* RC *தானே பிரீமியம் முன்னாள் தலைவர் ராம் பட்நாகர், சங்கத் தலைவர் சோனாலி காந்த்ரே ஆகியோர் சிகிச்சைக்குப் பிறகு நலம்பெறும் குழந்தையுடன்.*

KIMS மருத்துவமனையில் குழந்தைக்கு உயிர்காக்கும் சிகிச்சை நடைபெற்றது.

"அதிகாலையில் நடந்த நுட்பமான சிகிச்சையில், KIMS தலைமை குழந்தைகள் இதயநோய் நிபுணர் Dr L ஸ்ரீனிவாஸ், குழந்தையின் ரத்தநாளங்கள் வழியாக மிகச் சிறிய சாதனத்தைச் செலுத்தி இதயத் துளையை மூடினார். சில மில்லிமீட்டர் அளவுதான் என்றாலும், அந்தத் துளை உயிருக்கு ஆபத்தாக இருந்தது" என்கிறார் பட்நாகர்.

## 141 குழந்தைகளுக்கான நிதியில் 420 சிகிச்சைகள்

இந்தக் குறிப்பிட்ட உலகளாவிய மானியம் 141 குழந்தைகளுக்கு உதவுவதற்காகப் பெறப்பட்டது. ஆனால் தானேயிலுள்ள KIMS, ஜூபிடர் மருத்துவமனைகளில் அதன்மூலம் 420 இதயச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. வசதியற்ற குடும்பங்களுக்காக இரு மருத்துவமனைகளும் கட்டணத்தின் கணிசமான பகுதியைத் தள்ளுபடி செய்ததால், கூடுதல் குழந்தைகளுக்கு உதவ முடிந்தது.

ஒட்டுமொத்தமாக இத்திட்டம் இதுவரை சுமார் 1,200 குழந்தைகளுக்கு இதய அறுவைச் சிகிச்சை கிடைக்க உதவியுள்ளது. RC தானே பிரீமியம், RC மேப்பிள் குரோவ் உறுப்பினர்கள் மட்டுமல்லாமல், பிற ரோட்டரி சங்கங்களின் உறுப்பினர்களும் நிறுவனங்களின் CSR மானியங்களும் இதைச் சாத்தியமாக்கின.

> சாப்பிடுவதே அவளைச் சோர்வடையச் செய்தது. விளையாடுவது கிட்டத்தட்ட இயலாதது. அருமை மகளை இழந்துவிடுவோமோ என்ற எண்ணம் பெற்றோரைத் தொடர்ந்து வாட்டியது.

சிறு குழந்தைகளுக்கான இந்த மருத்துவச் சேவையில் தானே சங்கம் பணத்தையும் உணர்வுகளையும் பெருமளவில் முதலீடு செய்ததற்குப் பின்னணி உள்ளது. 2014-ல் சங்கம் தொடங்கப்பட்டபோது பட்டய உறுப்பினர்களில் பலர் மருத்துவர்கள். குழந்தைகளின் இதயச் சிகிச்சைக்கு அவசர முன்னுரிமையுடன் நிதி திரட்டுவது இயல்பாகவே சங்கத்தின் முக்கியப் பணியானது.

இதுவரையிலான சிகிச்சைகளின் வெற்றி விகிதம் 100 சதவீதம் என்கிறார் பட்நாகர். சுமார் 1,200 குழந்தைகளுக்கு ஆரோக்கியமான இதயத்தையும் எதிர்காலத்தையும் வழங்க மொத்தம் ரூ.21 கோடி செலவிடப்பட்டுள்ளது.

பட்நாகர் உயரதிகாரியாகப் பணியாற்றிய ரேமண்ட் நிறுவனம், PRID அசோக் மகாஜன் உதவியுடன் ஆதித்ய பிர்லா குழுமம், ஜப்பானின் தோஷோ நிறுவனம் ஆகியவை CSR நிதியளித்துள்ளன. பல்வேறு சங்கங்களின் உறுப்பினர்களும்




ரூ.2,000 முதல் ரூ.50,000 வரை வழங்கியுள்ளனர்.

**எல்லைகளைக் கடந்த கூட்டணி**

ஆரம்பத்தில் போதிய நிதி கிடைக்க வில்லை. 2023-ல் அமெரிக்காவின் RC மேப்பிள் குரோவ் உறுப்பினர் Dr ராஜ் கன்காரியுடன் அறிமுகம் ஏற்பட்டதும் நிலை மாறியது. மகாராஷ்டிராவின் மாலேகான் நகரைப் பூர்வீகமாகக் கொண்ட அவரது மறைந்த சகோதரருக்கு ரோட்டரியுடன் 50 ஆண்டுகாலத் தொடர்பு இருந்தது.

2019-ல் தனது சங்கத்தின் தேர்வுத்தலைவராக இருந்தபோதே உலகளாவிய மானியங்கள் பற்றி கன்காரி ஆராயத் தொடங்கினார். இந்தியாவுக்குத் திருப்பியளிக்க வேண்டும் என்ற ஆவல் அவருக்கு இருந்தது; சரியான பங்காளிகளைக் கண்டறிவதுதான் தேவைப்பட்டது.

இந்தியப் பயணமொன்றில் பட்நாகரைச் சந்தித்தார். இதுவரை தானேயிலுள்ள ரோட்டரி சங்கங்களுடன் 12 திட்டங்களில் இணைந்து பணியாற்றி, உலகளாவிய மானியங் களாகச் சுமார் ஒரு மில்லியன் டாலர் திரட்டியுள்ளார். தாய்நாட்டிற்கான சேவையில் மிகுந்த ஈடுபாடுள்ள அவர், திரட்டும் நிதி களத்தில் என்ன மாற்றத்தை ஏற்படுத்துகிறது என்பதை நேரில் அறிய ஆண்டுதோறும் இந்தியா வருகிறார்.

அத்தகைய பயணமொன்றின் போது, ரேமண்டின் சமூக முயற்சியான தானே J K டிரஸ்டின் CEO பட்நாகர், அவரை ஜூபிடர் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அங்கே குழந்தைகளின் உயிர்காக்கும் முயற்சியின் மூன்றாவது முக்கிய நபரான Dr ஸ்ரீனிவாஸ் பணியாற்றினார்.

“இதயப் பிரச்னையுள்ள குழந்தைகளைக் காப்பாற்றுவதில் அவருக்குத் தீவிர ஈடுபாடு உண்டு. உடனடி உதவி தேவைப்படும் குழந்தைகளின் நெஞ்சை உருக்கும் கதைகளை அவர் பகிர்ந்தபோது, கன்காரி மிகவும் நெகிழ்ந்தார். எங்களது பணிக்கு உதவ விருப்பம் தெரிவித்தார்” என்கிறார் பட்நாகர்.

பின்னர் RC மேப்பிள் குரோவிடம் தனது சங்கத்தின் இதயச் சிகிச்சைப் பணிகளை விரிவாக விளக்கினார். மருத்துவமனைப் படுக்கைகளில் உயிர்வாழப் போராடும், ஊட்டச்சத்துக் குறைவான, குறைப்பிரசவக் குழந்தைகளின் படங்கள் அமெரிக்க ரோட்டேரியர்களின் கண்களைத் திறந்தன. உடனடியாகத் திட்டத்தில் இணைந்து, நிதியளிக்கவும் திரட்டவும் முன்வந்தனர்.

பெரிய மருந்து நிறுவனத்தின் உயரதிகாரியான கன்காரி கூறுகிறார்: “இந்தத் திட்டம் பற்றிய எனது தகவல்களைச் சங்க உறுப்பினர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள். ஒவ்வொரு மாதமும் 30 அல்லது 40 குழந்தைகளுக்குச் சிகிச்சை முடிந்ததாகத் தெரிவிக்கும் போது பெரும் பாராட்டு கிடைக்கிறது.”

அண்மைய உலகளாவிய மானியம் அனுமதிக்கப்பட்டபோது RID 3142 DG-யாக இருந்த தினேஷ் மேத்தா, அவசரச் சிகிச்சை தேவைப்படும் குழந்தைகளை மருத்துவ முகாம்கள் மூலம் கண்டறிவதில் ரோட்டேரியர்கள் மேற்கொண்ட உழைப்பைச் சுட்டிக்காட்டுகிறார்.

“சிகிச்சை முடிந்ததும் பெரும் தொகைக்கான ரசீது கொடுத்து விடுவார்களோ என்ற அச்சத்தால், வசதியற்ற பெற்றோர் பலர் தானே வரவே தயங்குகிறார்கள். தங்கள் குழந்தைக்கு முழுச் சிகிச்சையும் இலவசம் என்பதை அவர்களால் நம்ப முடியவில்லை.”



*நடைபெறவுள்ள சிகிச்சை குறித்து Dr கன்காரிக்கும் பட்நாகருக்கும் விளக்கும் Dr ஸ்ரீனிவாஸ்.*

தானே வருவதற்கான பயணம், மருத்துவமனையில் தங்குமிடம், உணவு, அறுவைச் சிகிச்சை என ஒவ்வொரு செலவையும் திரட்டப்பட்ட நிதி ஏற்கிறது. மகாராஷ்டிராவின் தொலைதூரப் பகுதிகளில் குறைப் பிரசவத்தில் பிறந்த, 700 கிராமுக்கும் குறைவான எடையுள்ள குழந்தைகளும் உயிர் பிழைத்துள்ளன.

“141 குழந்தைகளுக்கான மானியம் 420 குழந்தைகளை நலமுடன் திருப்பியனுப்பியது. ரோட்டரி நம்பும் கூட்டுச் செயல்பாட்டின் வலிமை இதுதான்” என்கிறார் மேத்தா.

“கடந்தாண்டு தானேயின் முர்பாத் பழங்குடிப் பகுதியில், ஐந்து வயதுச் சிறுவன் வீட்டிற்கு வெளியே விளையாடுவதைப் பார்த்தேன். சிறுவயதில் அவனால் நன்றாகச் சாப்பிடவோ தூங்கவோ முடியவில்லை; விளையாட ஆற்றலும் இல்லை என்று பெற்றோர் கூறினர். ரோட்டரி அவனது சிகிச்சைக்கு உதவியது. உலகில் பிறந்த ஒவ்வொரு குழந்தைக்கும் வாழும் உரிமை உள்ளது.”

இத்தகைய நெகிழ்ச்சியான கதைகள் பல உள்ளன. ஏழு மாதக் குழந்தையாக இருந்தபோது Dr ஸ்ரீனிவாஸ் சிகிச்சையளித்த சிறுமி, இப்போது எட்டு வயதில் மாநில அளவிலான ஜிம்னாஸ்டிக்ஸ் வீராங்கனையாக இருக்கிறார்.

“இத்திட்டம் இல்லாவிட்டால் அவள் ஓராண்டைக் கடந்திருக்காமல் போயிருக்கலாம். இந்தாண்டு மட்டும் 300 சிகிச்சைகள் மேற்கொள்ள வுள்ளோம். சிலருக்கு உடனடியாகச் சிகிச்சை தேவை; சிலர் மூன்று, நான்கு மாதங்கள் காத்திருக்கலாம். ஆனால் யாரிடமும் பாகுபாடு காட்டுவதில்லை” என்கிறார் பட்நாகர்.

மேலும் பல சங்கங்களும் நிறுவனங்களும் இணைவது இத்திட்டத்தின் நல்ல விளைவு. “உயர்ந்த நோக்கம் இருந்தால், அதைச் சுற்றி மக்களை ஒன்றிணைக்க முடியும் என்பதற்கு இது சான்று.”

RC மேப்பிள் குரோவின் உலகளாவிய சேவையையும் குறிப்பிட வேண்டும். மினியாபொலிஸில் சுற்றுச்சூழல், கல்வித் திட்டங்களுக்கு நிதியளிக்கும் இச்சங்கத்தில், இந்தியா, ஆப்பிரிக்காவைப் பூர்வீகமாகக் கொண்ட பலர் உள்ளனர். இயல்பாகவே சர்வதேசச் சவால்களிலும் அதன் கவனம் திரும்பியது.

நைஜீரியாவில் மலேரியா தடுப்புத் திட்டம், உகாண்டாவில் பெண்களுக்குத் தையல் இயந்திரங்கள், மாதவிடாய்ச் சுகாதார வசதியற்ற உலகின் பல பகுதிகளைச் சேர்ந்த பெண்களுக்கு




*இதய அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு நலம்பெறும் குழந்தையைத் தூக்கிவைத்திருக்கும் PRID அசோக் மகாஜன். உடன் பட்நாகர், Dr ஸ்ரீனிவாஸ்.*

மீண்டும் பயன்படுத்தக்கூடிய சானிட்டரி நாப்கின்கள் எனச் சங்கம் உதவியுள்ளது.

“மற்றொரு சங்கத்துடன் இணைந்து செயல்படும் போது அற்புதமான மனிதர்களை அறிகிறோம். மற்றவர்களுக்கு உதவ ஒன்றிணைவதே ரோட்டேரியர்களின் பொதுவான நோக்கம். இத்தகைய திட்டங்கள் சங்கங்களுக்கிடையே வாழ்நாள் நல்லுறவையும் நட்பையும் உருவாக்குகின்றன” என்கிறார் கன்காரி.

ஆனால் பணி இன்னும் நிறைவடையவில்லை. தங்கள் மாவட்டங்களில் மேலும் பல சங்கங்கள் முன்வந்து, குழந்தைகளின் இதயச் சிகிச்சைக்காக உலகளாவிய மானியங்களுக்கு விண்ணப்பிக்கவேண்டும் என்று பட்நாகரும் கன்காரியும் விரும்புகிறார்கள்.

“உதவ ஆர்வமுள்ளவர்கள் ஏராளம். உலகில் எங்கே உதவி மிகவும் தேவைப்படுகிறது என்பதை அவர்களுக்குக் காட்டினால் போதும். ஒவ்வொரு வெற்றிகரமான சிகிச்சையையும் சங்க உறுப்பினர்களிடம் சொல்லும்போது அளவற்ற நிறைவு கிடைக்கிறது. குழந்தை உயிர்வாழும் என்ற நம்பிக்கையையே இழந்திருந்த பெற்றோருடன் பேசும்போது கண்கள் கலங்குகின்றன. அது புதிய ஆற்றலையும் மேலும் பணியாற்றும் ஊக்கத்தையும் தருகிறது” என்கிறார் கன்காரி.



இந்தத் திட்டம் பற்றிய எனது தகவல்களைச் சங்க உறுப்பினர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள். ஒவ்வொரு மாதமும் 30 அல்லது 40 குழந்தைகளுக்குச் சிகிச்சை முடிந்ததாகத் தெரிவிக்கும்போது பெரும் பாராட்டு கிடைக்கிறது.

**Dr ராஜ் கன்காரி**
**RC** *மேப்பிள் குரோவ்*

பட்நாகரைப் பொறுத்தவரை, கூட்டணியின் வலிமை என்ற ரோட்டரியின் முக்கிய நம்பிக்கையை இத்திட்டம் நிரூபிக்கிறது.

“உலகளாவிய மானியத்துடன் நிறுவனங்கள், தனிநபர்களின் ஆதரவை இணைத்ததால்தான் இந்தச் சாதனை சாத்தியமானது. நிலைத்த, ஆழ்ந்த தாக்கமுள்ள மருத்துவச் சேவையை அவர்கள் ஆதரித்தனர். மானியங்களின் பயனைப் பெருக்குவதற்கான செயல்முறை இது என்பதை மற்ற சங்கங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறோம். பெரிய கனவுகளுடன் தங்கள் சமூகங்களில் இதுபோன்ற திட்டங்களைச் செயல்படுத்த மற்ற மாவட்டங்களையும் ஊக்குவிக்கவேண்டும்.”

### தொடரும் தேவை

இரு மருத்துவமனைகளும் குறைந்த கட்டணத்தில் உதவுவதால், சராசரியாக ஒரு சிகிச்சைக்கு ரூ.1.5-2 லட்சம் செலவாகிறது. வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்களுக்கான அரசு மருத்துவ உதவிகள் பற்றிக் கேட்டபோது, பலரிடம் தேவையான ஆவணங்கள் இல்லை என்கிறார் பட்நாகர்.

“குறிப்பாக வெளிமாநிலத் தொழிலாளர்களால் இந்த உதவிகளைப் பெற முடியவில்லை. தங்கள் குழந்தைகளைக் காப்பாற்ற வழியின்றித் தவிப்பதால்தான் அவர்களைத் தேர்ந்தெடுக்கிறோம்.”

2025–26-ல் RID 3142 CSR இணை இயக்குநராக இருந்த அவர், 25,000 டாலர் CSR மானியம் இறுதிசெய்யப்படுவதாகவும், இரு சங்கங்களும் மற்றொரு உலகளாவிய மானியத்திற்கு விண்ணபித்துள்ளதாகவும் கூறுகிறார்.

“திட்டக் குழுவினர் மட்டுமல்ல, இந்தியா, அமெரிக்காவிலுள்ள இரு சங்கங்களின் உறுப்பினர்களும் தொடர்ந்து நிதி திரட்ட உறுதியாக உள்ளனர். தேவை அவ்வளவு அதிகம். எங்கள் மதிப்பீட்டின்படி, மகாராஷ்டிராவில் மட்டும் ஆண்டுதோறும் சுமார் 8,000–10,000 குழந்தைகளுக்கு இந்தச் சிகிச்சை தேவைப்படுகிறது.” ■

# நேபாள வெள்ள நிவாரணத்தில் களமிறங்கிய ரோட்டராக்டர்கள்

ஜெய்ஸ்ரீ

நேபாளத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளம் சுராஜ் பண்டாரிக்கு எங்கோ நிகழ்ந்த பேரிடர் அல்ல. பாதிக்கப்பட்ட சித்வான் பகுதியைச் சேர்ந்த அவர், திரிசூலியின் துணைநதியான நாராயணியில் வெள்ளம் பெருக்கெடுத்து, பயிர்களையும் சொத்துகளையும் சேதப்படுத்துவதை வேதனையுடன் பார்த்தார்.

நேபாளம், பூடானை உள்ளடக்கிய RID 3292 ரோட்டராக்ட் செயலாளரான பண்டாரி, நிவாரணப் பணிகளிலும் தீவிரமாக ஈடுபட்டார். நேபாளப் பிரதமர் அலுவலகத்தின் அவசர வேண்டுகோளைத் தொடர்ந்து, DRR பிரகாஷ் சர்மாவின் வழிகாட்டுதலில் ரோட்டராக்டர்கள் உதவிகளைத் திரட்டினர்.

“செயல்திட்டத்தை வகுக்க மாவட்ட ரோட்டராக்ட் சங்கத் தலைவர்களின் கூட்டத்தை சர்மா கூட்டினார்” என்கிறார் பண்டாரி. மாவட்டத்தின் 192 சங்கங்களில் சுமார் 6,000 ரோட்டராக்டர்கள் உள்ளனர்.

காத்மாண்டு, சித்வான், பைரஹவா, கிழக்கு நேபாளத்தில் சேகரிப்பு மையங்கள் அமைக்கப்பட்டன. மருந்துகள், குழந்தை உணவு, தனிநபர் சுகாதாரப் பொருள்கள், மளிகை, பழங்கள், நூடுல்ஸ், பிஸ்கட்கள் சேகரிக்கப்பட்டு, நேபாள ராணுவம் மூலம் ரசுவா, சித்வான், நுவாகோட் அரசு நிவாரண முகாம்களுக்கு அனுப்பப்பட்டன.

ஆகஸ்ட் 26-ல் இமயமலையின் லாங்டாங் லிருங் சிகரத்தில் பனிப்பாறைகளும் பாறைகளும் சரிந்ததால், கீழ்ப்பகுதிகளில் திடீரென நீர்வரத்து அதிகரித்தது. லெண்டே கோலா, திரிசூலி நதிப் பகுதிகளில் வெள்ளம் தாக்கியது. ரசுவா, நுவாகோட், தாடிங், சித்வான், கோர்கா, தனஹுன் மாவட்டங்கள் பாதிக்கப் பட்டன. சாலைகளும் பாலங்களும் அடித்துச் செல்லப்பட்டதால் மீட்பும் நிவாரணமும் கடினமாயின.

“கிராமங்கள் முழுவதும் அழிந்ததைப் பார்த்து மனமுடைந்தோம். பல இடங்களில் இடிபாடுகளையும்




*பாதிக்கப்பட்ட மக்களுடன் DRR பிரகாஷ் சர்மா கைரே, மாவட்ட ரோட்டராக்ட் செயலாளர் சுராஜ் பண்டாரி.*



*வெள்ளத்தில் இடிந்த வீட்டின் முன்பு ரோட்டேரியருடன் DG விஷ்ணு கார்க்கி (வலது).*








பேரிடர் பகுதியில் வீட்டுப் பயன்பாட்டுப் பொருள்கள் விநியோகம்.



சிதைந்த வீடுகளையும் கடந்து நடந்தே மக்களுக்குப் பொருள்களை வழங்கினோம்" என்கிறார் பண்டாரி.

பேரிடர் நிகழ்ந்து ஒருவாரத்திற்குப் பிறகு ரோட்டரி நியூஸிடம் பேசிய போது, இரண்டு கட்ட விநியோகம் முடிந்து மூன்றாவது நடந்துகொண்டிருந்தது. இதில் நுவாகோட் குடும்பங்களுக்குக் கூடாரங்கள், எரிவாயு அடுப்புகள், குப்பைத்தொட்டிகள், கொசுவலைகள், போர்வைகள், துண்டுகள், படுக்கை விரிப்புகள் வழங்கப்பட்டன.

"வீட்டையும் உடைமைகளையும் முழுமையாக இழந்தவர்களுக்கு எங்கிருந்து உதவுவது, எப்படி ஆறுதல் சொல்வது என்றே புரிய வில்லை. பலர் காணாமற்போன அன்புக்குரியவர்களிடமிருந்து தகவல் வரும் அல்லது அவர்களைப் பற்றி ஏதாவது தெரியவரும் என்ற நம்பிக்கையில் இன்னும் தேடிக்கொண்டிருக்கிறார்கள்."

ரோட்டரி உறுப்பினர்களிடையே Google Forms பகிரப்பட்டுத் தன்னார்வலர்கள் சேர்க்கப்பட்டனர். போக்குவரத்து, விநியோகம், ரத்த தானம், மனநல ஆலோசனைக் கான குழுக்கள் அமைக்கப்பட்டன. ரோட்டேரியர்களும் ரோட்டராக்டர் களும் அரசு மருத்துவமனைகளில் ரத்ததானம் செய்தனர். அவசரத் தேவைக்குத் தங்கள் பகுதியில் ரத்த மளிக்கத் தயாரான உறுப்பினர்களின் தகவல்களும் தொகுக்கப்பட்டன.

வெள்ளத்தில் அடித்துவரப்பட்ட உடல்களை மீட்கவும் உதவினர். திரிசூலி கரைகளிலும் சித்வானின் நாராயணி நதியிலும் உடல்கள் கிடைத்தன. "சுமார் 300 உடல்கள் மீட்கப்பட்டுப் பிணவறைகளுக்கு அனுப்பப்பட்டன" என்கிறார் பண்டாரி.

சாலைகள் சேதமடைந்த பகுதி களுக்கு நிவாரணப் பொருள்களைக் கொண்டுசெல்ல ராணுவம் முக்கியப் பங்காற்றியது. வேறுவழியில் சென்றடைய முடியாத இடங்களுக்கு ஹெலிகாப்டர்கள் பயன்படுத்தப்பட்டன.

**மறுவாழ்வுக்கான முயற்சிகள்**

உடனடி நிவாரணம் தொடர்ந்தபோதே, DRR சர்மா தலைமையிலான ரோட்டராக்ட் அலுவலகம் நிவாரணம், மறுவாழ்வுக்கான நிதியையும் திரட்டத் தொடங்கியது. இந்தியா உள்ளிட்ட வெளிநாட்டு ரோட்டேரியர்களும் பங்களித்தனர். மின்னணுப் பரிவர்த் தனைக்காக QR குறியீடுகளுடன் பிரசுரங்கள் பகிரப்பட்டன. திரட்டப் படும் தொகையைப் பிரதமரின் பேரிடர் நிவாரண நிதிக்கு வழங்கத் திட்டமிடப்பட்டது.



*ஹெலிகாப்டரில் நிவாரணப் பொருள்களை ஏற்றும் நேபாள ராணுவத்தினர்.*

நேபாளத்தின் RC பிராட்நகர் உறுப்பினர் RIDE பாசு தேவ் கோல்யானுடன் ஒருங்கிணைந்து, திட்டப் பங்காளியான ஷெல்டர்பாக்ஸுடன் ரோட்டரி பணியாற்றுகிறது. பாதிக்கப் பட்ட பகுதிகளில் கூடாரங்கள், தார்ப்பாய்கள், நீர் வடிகட்டிகள், கொசு வலைகள், சமையல் பாத்திரங்கள் வழங்கப்படுகின்றன.

காத்மாண்டுவில் ஷெல்டர்பாக்ஸ் குழுவினர் DG விஷ்ணு கார்க்கி, தினேஷ் ராஜ் மனந்தர், ரோட்டரி நேபாள மாவட்டப் பேரிடர் நிவாரணக் குழு உறுப்பினர்களைச் சந்தித்துத் தேவைகளை மதிப்பிட்டனர். "பயனாளிகளை அடையாளம் கண்டு, பொருள்களை வழங்க எங்கள் ரோட்டராக்டர்களும் ரோட்டேரியர்களும் குழுவினருடன் பணியாற்றுகிறார்கள்" என்றார் பண்டாரி.

வெள்ளத்தின் மூன்றாவது நாளிலேயே உள்ளாட்சி அதிகாரிகள், ராணுவம், காவல்துறை தெரிவித்த தேவைகளுடன் ரோட்டேரியர்கள் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்றதாக கார்க்கி கூறினார். உடல்களை எடுத்துச்செல்லும் பைகள், PPE உபகரணங்கள், முகக்கவசங்கள், கையுறைகள், மருத்துவப் பொருள்கள், மெத்தைகள், உறங்கும் பைகள், சூரிய விளக்குகள் கொண்டுசெல்லப்பட்டன.

"மக்களின் தேவைகளை அறிய ரோட்டேரியர் குழுக்கள் தினமும் செல்கின்றன" என்றார். ஒரு மருத்துவர், இரண்டு செவிலியர்களுடன் தற்காலிக மருத்துவ மையங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நீர் வசதியுடன் 20 எடுத்துச்செல்லக்கூடிய கழிப்பறைகளும் நீர் வடிகட்டும் அமைப்புகளும் நிறுவப்படவுள்ளன. மலைப்பகுதிகளிலும் சாலை வழியாக அணுக முடியாத இடங்களிலும் சிக்கியவர்களுக்கு உதவ ஆறு மோட்டார்சைக்கிள் ஆம்புலன்ஸ்கள் வழங்கப்படும்.

"மறுகுடியமர்வுப் பகுதிகளை அரசு முடிவுசெய்ததும் மறுவாழ்வு, மறுகட்டமைப்புப் பணிகளில் ஈடுபடுவோம். அரசுடன் இணைந்து பள்ளிகள், கழிப்பறைகள் கட்டுதல், குடிநீர் அமைப்புகள், தேவையுள்ளவர்களுக்கு வருமானமளிக்கும் திட்டங்களை வழங்குதல் ஆகியவற்றை மேற்கொள்வோம்" என்றார் கார்க்கி. ■

# ரோட்டேரியர்களின் வடிவில் இறைவனைக் கண்டேன்

**V முத்துக்குமரன்**

ஆகஸ்ட் 19, இரவு 10 மணிக்கு வந்த தொலைபேசி அழைப்பு, RID 3080 PDG பிரவீண் கோயலைப் படுக்கையிலிருந்து எழுப்பியது.

பெங்களூருவிலிருந்து அழைத்த PDG ஜிதேந்திர அனேஜா, RC விஜயநகரம் உறுப்பினர் ஸ்ரீராம் மஞ்சுகொண்டாவின் பெற்றோரும் அத்தையும் ரிஷிகேஷ் புனிதப் பயணத்தின்போது விபத்தில் படுகாயமடைந்ததாகத் தெரிவித்தார். அவர்கள் சென்றுகொண்டிருந்த கார்மீது, எதிர்த்திசையில் வந்த தனியார் பேருந்து நேருக்குநேர் மோதியதில் இந்தக் கோர விபத்து நிகழ்ந்திருந்தது.

RID 3020 PDG M வெங்கடேஸ்வர ராவ், தனது மாவட்ட ரோட்டேரியருக்காக அவசர உதவி கோரி அனேஜாவைத் தொலைபேசியில் அழைத்திருந்தார். அவரிடமிருந்து பெற்ற விபத்து விவரங்கள், பாதிக்கப்பட்டவர்களின் பெயர்கள், காணொலி ஆகியவற்றை ரோட்டேரியர்களின் வாட்ஸ்அப் குழுவில் கோயலுக்கு அனுப்பினார் அனேஜா.

"AIIMS ரிஷிகேஷ் இயக்குநர் Dr மீனு சிங் எங்கள் RC சண்டிகர் உறுப்பினர் என்பதால், அனைத்து உதவிகளும் கிடைக்கும் என்று உறுதியளித்தேன்" என்கிறார் கோயல்.

ஸ்ரீனிவாச மஞ்சுகொண்டா (80), மனைவி நாதம்மா (74), ஸ்ரீராமின் அத்தை ராஜ்யலட்சுமி (75) ஆகியோரை ஒரு கார் ஓட்டுநர் மருத்துவமனைக்குக் கொண்டுசேர்த்தார். ஸ்ரீராமை அழைத்து விபத்தைத் தெரிவித்ததுடன், உருக் குலைந்த காரில் அதிர்ச்சியில் உறைந் திருந்த பெற்றோரின் காணொலியையும் அனுப்பினார். ஆம்புலன்ஸ் ஏற்பாடு செய்து மூவரையும் AIIMS மருத்துவ மனையில் சேர்த்ததும் அவர்தான்.

கோயலின் இரவுநேர அழைப்பை ஏற்ற குழந்தைநல மருத்துவரான Dr மீனு, அவசர மற்றும் விபத்துச் சிகிச்சைப் பிரிவிலுள்ள மருத்துவரை அனுப்பி, படுகாயமடைந்தவர்களைப் பரிசோதித்து அறிக்கைகளை அளிக்கச் சொன்னார். "Dr மீனுவின் உதவியால், சில மணிநேரங்களுக்குள்ளாகவே அவர்களது உடல்நிலை குறித்த மருத்துவ அறிக்கைகள் எனக்குக் கிடைத்துவிட்டன. துல்லியமாகச் சொல்வதென்றால், மறுநாள் அதிகாலை 12.30 மணிக்கு எனக்கு அனுப்பப்பட்டிருந்த அந்த அறிக்கைகளைப் பார்த்தேன்" என்று நினைவுகூர்கிறார் கோயல்.

மூவரையும் ICU-வில் சேர்க்க மருத்துவர் பரிந்துரைத்தபோது, கோயல் மீண்டும் மீனுவை அழைத்தார். நிலைமையை அறிந்த Dr மீனு சிங், அவர்களைத் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிப்பதற்கு உடனடியாக ஒப்புதல் அளித்தார். விபத்து நிகழ்ந்த எட்டு மணிநேரத்தில் ஸ்ரீராமின் தாயார் நாதம்மா மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார். கார் ஓட்டுநர் லேசான காயங்களுடன் தப்பினார்.

"என் பெற்றோருக்கும் அத்தைக்கும் உரிய நேரத்தில் சிகிச்சை கிடைக்க உதவிய PDG பிரவீண் கோயல், RID 3020 PDG-க்கள் வெங்கடேஸ்வர ராவ், ராம ராவ், Dr மீனு சிங் மற்றும் நல்லுள்ளங்களுக்கு வாழ்நாள் முழுவதும் நன்றிக்கடன்பட்டுள்ளேன்" என்று நெகிழ்ச்சியுடன் கூறினார் ஸ்ரீராம்.

விபத்து பற்றிய தகவல் கிடைத்ததும், மறுநாள் காலை ஸ்ரீராம் AIIMS ரிஷிகேஷ் மருத்துவமனைக்கு விரைந்தார். "வேதனைமிக்க அந்தப் பயணம் முழுவதும், மகப்பேறு மருத்துவரான RID 3080 DG ரீட்டா கல்ராவும் PDG அஜய் மதனும் தொடர்ந்து தொடர்பிலிருந்து பெற்றோரின் உடல்நிலை குறித்து தகவல் அளித்தனர்" என்கிறார்.

இதற்கிடையில், ரூர்க்கியில் வசிக்கும் IPDG ரவி பிரகாஷும் உதவிக்கரம் நீட்டினார். ரிஷிகேஷிலேயே வசிக்கும் மூன்று ரோட்டேரியர்கள் கொண்ட குழுவை மருத்துவமனைக்கு அனுப்பினார். நோயாளிகளின் அவசரத் தேவை களைக் கவனிப்பதுடன், ஸ்ரீராமுக்கு எந்த வகையில் முடியுமோ அந்த வகையில் உதவுமாறும் கேட்டுக்கொண்டார்.

இவ்வளவு முயற்சிகளுக்கு மத்தியில், விபத்து நடந்த ஆறாவது நாளான ஆகஸ்ட் 25-ல் ஸ்ரீனிவாசா உயிரிழந்தார்.

"விபத்து நேர்ந்ததிலிருந்து விஜயநகரத்தில் அப்பாவின் உடல் தகனம் செய்யப்பட்ட இறுதிச் சடங்குவரை, ரோட்டேரியர்களின் வடிவில்தான் இறைவனைக் கண்டேன். அவர்களது விலைமதிப்பற்ற சேவைக்கு நன்றிக்கடன்பட்டுள்ளேன்" என்கிறார். தற்போது அவரது தாயார் பாதுகாப்பாக வீடு திரும்பியுள்ளார். ஆனால் அத்தை ராஜ்யலட்சுமி இன்னும் மருத்துவமனையின் ICU-வில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார். ■





*பெங்களூரு லீலா பேலஸில் தேநீர் பிரியர்களின் ரோட்டரி நட்புறவுக் குழுவினருடன் RID 3192 DG ரவிசங்கர் டாகோஜு (இடமிருந்து நான்காவது), மனைவி பவோலா, குழுத் தலைவர் சேத்தன் நவீன் கமானி.*

# சிறப்பான மனிதருக்குச் சிறப்புத் தேநீர்

**ரஷீதா பகத்**

இப்போது ரோட்டரி நட்புறவுக் குழுக்களின் பருவம் வந்து விட்டது போலும்! சில வார இடைவெளிக்குள், இந்தக் குழுவைப் பற்றி எழுதுங்கள், அந்தக் குழுவின் செயல்பாடுகளை வெளியிடுங்கள் என்று 'ரோட்டரி நியூஸ்' இதழுக்குப் பல கோரிக்கைகள் வந்துவிட்டன. முதலில் மோட்டார் சைக்கிள் ஆர்வலர்கள்; அடுத்து ஹிப்னாசிஸ் மற்றும் குணப் படுத்துதல் சார்ந்த குழு. இந்த மாதம் நாம் பேசப்போவது பெங்களூருவில் உள்ள தேநீர் பிரியர்களின் குழுவைப் பற்றி. தேநீர் அருந்துவதை மையமாகக் கொண்ட தங்கள் நட்புறவை இவர்கள் மிகவும் அக்கறையுடன் வளர்க்கிறார்கள். இவர்களது சந்திப்பில் தேநீரின் சுவைகளை விளக்கும் சிறப்பு நிபுணர்கூட இடம்பெறுகிறார்!

மூன்று ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட இந்த நட்புறவுக் குழுவின் தலைவராக, சேத்தன் நவீன் கமானி அண்மையில் பொறுப் பேற்றுள்ளார். பெங்களூரு லீலா பேலஸில் நடைபெற்ற சந்திப்பிற்காக, அந்த ஹோட்டலின் தேநீர் சுவை நிபுணர் பிரத்யேகக் கலவையை உருவாக்கியதாகச் சொன்னார். "தேநீருக்கும்கூட சுவை நிபுணர்கள் இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாதே!" என்று நகைச்சுவையாகக் குறிப்பிட்டேன். "இப்போது தண்ணீருக்கும் சுவை நிபுணர்கள் இருக்கிறார்கள்!" என்றார் அவர்.

அந்த மாலைக்காக உருவாக்கப்பட்ட கலவையின் பெயர் 'கர்மயோகி தேநீர்'. ரோட்டரிக்காக நேரம், பணம், சேவை என அளப்பரிய பங்களிப்புகளை வழங்கியுள்ள, தற்போதைய RID 3192 DG ரவிசங்கர் டாகோஜுவைக் கௌரவிப்பதற்காகவே இது தயாரிக்கப்பட்டது என்பதை ஊகிப்பது கடினமல்ல.

ஊலாங் தேநீரையும் மொராக்கோ புதினாவையும் இணைத்து, "ஒரே கோப்பையில் இணக்கத்தை உருவாக்கினோம்" என்கிறார் கமானி. "ஊலாங் ஆழத்தையும் நேர்த்தியையும் தனித்தன்மையையும் தந்தது. மொராக்கோ புதினா புத்துணர்ச்சியையும் உயிர்த்துடிப்பையும் ஆற்றலையும் வழங்கியது. இரண்டும் இணைந்தபோது, டாகோஜுவுக்கே பொருத்தமான உவமையாக அமைந்தன.

டாகோஜுவின் ஆளுமையைத் தேநீரின் தன்மைகளுடன் ஒப்பிட்டு, தாராளமான பாராட்டுகளால் இவ்வாறு விவரித்த கமானி, அந்த மாலையின் உணர்வை மேலும் விளக்கினார். "நோக்கம், சேவை, கொடை ஆகியவற்றால் வரையறுக்கப்பட்ட வாழ்க்கையைக் கொண்டாடிய அந்த நிகழ்வில், ஒரு கோப்பையில் நன்றியுணர்வைப் பரிமாறியதாக உணர்ந்தோம்" என்று

நிறைவுசெய்தார். டாகோஜுவின் பிரம்மாண்டமான ‘தன்யவாத்’ பசுமைத் திட்டத்தையே அவர் குறிப்பிட்டார்.

“இது பட்டியலிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டதோ, விற்பனைக்காக உருவாக்கப்பட்டதோ அல்ல. ஒரேயொரு மாலைக்காக மட்டுமே தயாரிக்கப்பட்டது. கடைகளில் கிடைக்காது” என்று தெளிவுபடுத்துகிறார் கமானி.

ஆனால் நிகழ்ச்சியின்போது ஒரு சுவாரசியமான திருப்பம் ஏற்பட்டது. தேநீரை விரும்பி அருந்தும் டாகோஜுவே, இந்தக் கலவையில் சில பொட்டலங்களை வாங்க விரும்புவதாகச் சொன்னார். அவ்வளவுதான், குழுவினரிடையே சிறு பரபரப்பு ஏற்பட்டுவிட்டது! ஹோட்டலின் தேநீர் நிபுணர் உதவியுடன், சிறப்பு விருந்தினர் எடுத்துச்செல்ல ஒரு பொட்டலத்தை எப்படியோ ஏற்பாடு செய்துவிட்டனர் நட்புறவுக் குழுவினர்.

தேநீர் பிரியர்களின் இந்த நட்புறவுக் குழுவில் 500-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் பெங்களூருவைச் சேர்ந்தவர்கள். ஒவ்வொரு மாதமும் ஒரு சந்திப்பு நடைபெறுகிறது. அதில் வழக்கமாகச் சுமார் 30 முதல் 40 உறுப்பினர்கள் பங்கேற்கிறார்கள். வெவ்வேறு வகைத் தேநீர்களுக்கு ஏற்றவாறு, உணவின் ஒவ்வொரு பகுதிக்கும் பொருத்தமான பதார்த்தங்கள் பரிமாறப்படுகின்றன.



*சுட்ட ஹலூமி பாலாடைக்கட்டி, இனிப்பான அத்திப்பழத் துண்டுகள் கோத்த குச்சிகளுடன் பரிமாறப்பட்ட பிரத்யேக கர்மயோகி தேநீர்.*

“இந்தச் சந்திப்புகளில் நாங்கள் எத்தனையோ வகையான தேநீர்களைச் சுவைத்திருக்கிறோம். துருக்கி தேநீர்களில் தொடங்கி, சீன மற்றும் ஜப்பானியத் தேநீர்கள்வரை பலவும் இதில் அடங்கும். ஒவ்வொரு வகைத் தேநீரைப் பற்றியும் தேநீர் சுவை நிபுணர்கள் எங்களுக்குக் கதைகள் சொல்கிறார்கள். மலைப்பகுதிகளிலிருந்து கடலோரப் பகுதிகள் வரை பலவிதமான இடங்களில் தேயிலை வளர்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். ஒவ்வொரு தேநீருக்கும் அதற்கே உரிய கதை இருக்கிறது. தேயிலை எப்படி வளர்க்கப்பட்டது, அதன் இலைகள் எவ்வாறு பறிக்கப்பட்டன, அதிலுள்ள சிறந்த சுவையை வெளிக் கொண்டுவருவதற்காக எந்தப் பிரத்யேக முறையில் தயாரிக்க வேண்டும் என்பதையெல்லாம் அறிந்துகொள்கிறோம்” என்கிறார் கமானி.

கர்மயோகி கலவையுடன் இஞ்சித் தேநீர், தென் அமெரிக்காவின் பாரம்பரிய மூலிகைப் பானமான யெர்பா மாட்டே, சுலைமானி தேநீர், ஜப்பானின் நேர்த்தியான பச்சைத் தேநீரான சென்ச்சா ஆகியவையும் பரிமாறப்பட்டன.



*நிகழ்வில் DG டாகோஜுவுக்குத் தேநீர் பரிமாறப்படுகிறது.*

**இந்த தேநீர் பிரியர்களின்அடுத்த திட்டம்:** ஃபோர் சீசன்ஸ் ஹோட்டலில் கொம்புச்சா தேநீரைச் சுவைக்க விருக்கிறார்கள்.

அவர் சொன்னதைக் கேட்டு விட்டு, அது என்னவென்று நானும் கூகுளில் தேடிப் பார்த்தேன். ஹோட்டல் வெளியிட்டிருந்த தகவல் குறிப்பில் கிடைத்த விளக்கம் இதுதான்:

“குமிழ்களும் சுவையும் நிறைந்த கொம்புச்சா உலகைக் கண்டறியுங்கள். இஞ்சி, பெர்ரி, சிட்ரஸ், மூலிகை என ஹோட்டலிலேயே தயாரிக்கப்படும் பல்வேறு சுவைகளைச் சுவையுங்கள். இனிப்பு, அமிலத்தன்மை, குமிழூட்டம் ஆகியவற்றின் நுட்பமான வேறுபாடுகளை அறிந்துகொள்வதுடன், நொதித்தலின் அடிப்படைகளையும் தெரிந்துகொள்ளுங்கள்”

ஒயின் சுவைக்கும் நிகழ்ச்சிகளுக்குத்தான் இத்தனை ஆரவாரமும் பரபரப்பும் இருக்க வேண்டும் என்று யார் சொன்னது? பெங்களூருவின் இந்தத் தேநீர் பிரியர்களைப் பார்த்தால், ஒயின் ரசிகர்களுக்குக் கடும் போட்டி கொடுப்பார்கள் என்றே தோன்றுகிறது. ■




நடமாடும் இணைப்புப் பள்ளியின் முன்பு மாணவர்கள். பின்னால் RC பெங்களூர் ராஜ்மஹால் விலாஸ் தலைவர் சாயா நவந்தர், முன்னாள் தலைவர்கள் கீர்த்தி மேத்தா, R K ஹெக்டே ஆகியோர் உள்ளனர்.

Rotary PEOPLE OF ACTION

# புலம்பெயர் குழந்தைகளின் கல்விக்குப் பாலமாகும் ரோட்டரி

ரஷீதா பகத்

இந்தியாவில் புலம்பெயர் தொழிலாளர்களின் லட்சக் கணக்கான குழந்தைகள் கல்வியைப் பெறுவதற்கே போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்பது வேதனையான உண்மை. ஒரு குழந்தையின் வாழ்க்கையையே மாற்றக்கூடிய கல்வி, அதன் அடிப்படை உரிமையும்கூட. அந்த உரிமை இவர்களுக்குக் கிடைப்பதில்லை. தரமான கல்வி நிறுவனங்கள் பலவும் அமைந்துள்ள பெருநகரங்களிலும் பெரிய நகரங்களிலுமே இந்த நிலை நீடிப்பது, அந்த வேதனையை இன்னும் அதிகரிக்கிறது.

நீண்டகாலம் நடைபெறும் பெரிய திட்டங்கள் நிறைந்த நகரங்களில், வேலைக்காக வரும் இந்தக் குடும்பங்கள் தொடர்ந்து நீண்ட நாட்கள் தங்குகின்றன. குழந்தைகளும் பெற்றோருடன் அங்கேயே வசிக்கிறார்கள். ஆனாலும், உள்ளூர் அரசுப் பள்ளிகளில் சேர்ந்து படிக்க அவர்களுக்கு எளிதில் வாய்ப்பு அமைவதில்லை. அவர்கள் பேசும் மொழிக்கும் பள்ளியின் பயிற்றுமொழிக்கும் உள்ள வேறுபாடு முக்கியத் தடையாகிறது.

“மேற்கு வங்கம், அசாம், பீகார் உள்ளிட்ட வடக்கு, வடகிழக்குப் பகுதிகளிலிருந்தும் நேபாளத்திலிருந்தும் பலர் பெங்களூருவுக்கு வேலை தேடி வருகிறார்கள். அவர்களது தாய்மொழிகள் வேறு. இங்குள்ள அரசுப் பள்ளிகளின் பயிற்றுமொழி கன்னடம் என்பதால் குழந்தைகளால் நேரடியாகச் சேர முடியவில்லை. வழக்கமான பள்ளிக் கல்விக்குத் தயாராக, குறைந்தது ஓராண்டு இணைப்புப் பயிற்சி தேவைப்படுகிறது” என்கிறார் RID 3192 PDG H ராஜேந்திர ராய்.

வசதியற்ற குழந்தைகள், குறிப்பாகப் புலம்பெயர் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குக் கல்வி அளிக்கும் சம்ரித்தி அறக்கட்டளையின் அறங்காவலராக அவர் உள்ளார். பெங்களூருவின் புறநகர்ப் பகுதிகளில் தற்காலிகக் குடிசைகளிலும் அவசரமாக அமைக்கப்பட்ட குடியிருப்புகளிலும் வசிக்கும் புலம்பெயர் தொழிலாளர்களின் குழந்தைகளுக்காக, மேலும் ஒரு ‘நடமாடும் இணைப்புப் பள்ளி’ அமைக்கும் வாய்ப்பை இந்த NGO தேடிக்கொண்டிருந்தது.

2025 இறுதியில், இதற்கான கூட்டாண்மையை உருவாக்க RC பெங்களூர் ராஜ்மஹால் விலாஸின் அப்போதைய தலைவர் தீபா சசிதரனையும் IPP R K ஹெக்டேயையும் ராய் அணுகினார். “இந்தப் பயனுள்ள திட்டத்திற்கு ஆதரவளிக்கச் சங்க நிர்வாகக்குழு உடனே ஒப்புக்கொண்டது. பல திட்டங்களை நிறைவேற்றியுள்ள முன்னாள் தலைவர் கீர்த்தி மேத்தா என்னுடன் ஒருங்கிணைந்து, லேலண்ட் வாகனத்தில் நடமாடும் பள்ளியை உருவாக்கினார்” என்கிறார்.

குழந்தைகள் இருக்கும் இடத்திற்கே கல்வியைக் கொண்டுசென்று சேர்ப்பதுதான் இந்த முயற்சியின்

அடிப்படை நோக்கம் என்று மேத்தா விளக்குகிறார். அதற்கு ஏற்றவாறு, ஒரு வாகனத்தையே குழந்தைகள் அமர்ந்து கற்கும் பள்ளியாக மாற்றும் திட்டம் உருவானது.

தகவல் தொழில்நுட்பத் தீர்வுகளை வழங்கும் V2 சொல்யூஷன் நிறுவனம், CSR நிதியாகச் சுமார் ரூ.10 லட்சம் வழங்கியது. “எழுத்தறிவை ஊக்குவிப்பதோடு, எங்கள் சங்கத் திட்டங்களுக்குத் தொடர்ந்து உதவும் நிறுவனம் அது” என்கிறார் அவர். சங்க உறுப்பினர்கள் மேலும் சுமார் ரூ.2 லட்சம் திரட்டினர்.

இந்த நிதியில் லேலண்ட் வாகனம் மறுவடிவமைக்கப்பட்டு, பள்ளிக்குத் தேவையான வசதிகளுடன் மாற்றப்பட்டது. RC பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் முன்னாள் தலைவர் கிரித் மொர்சாரியாவுக்குச் சொந்தமான KHT ஏஜென்சி இதற்கு உதவியது. வாகனத்தின் உள்ளமைப்பு நடமாடும் வகுப்பறையின் தேவைகளுக்கு ஏற்ப உருவாக்கப்பட்டது.

பள்ளிக்குச் செல்லாமல் இருக்கும் குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வியளிப்பதிலும், பின்னர் வழக்கமான பள்ளிகளில் சேர்வதற்கு அவர்களைத் தயார்படுத்துவதிலும் சம்ரித்திக்கு ஏற்கெனவே அனுபவம் உள்ளது. இதற்காக அது இணைப்புப் பள்ளிகளை நடத்திவருகிறது. அந்த அனுபவம், இந்தப் புதிய முயற்சியைச் செயல்படுத்துவதற்கும் பெரிதும் உதவியுள்ளது. குறிப்பாக, நடமாடும் பள்ளிக்கு வரும் குழந்தைகளுக்குப் பாடம் நடத்தும் ஆசிரியர்களை வழங்குவதில் அறக்கட்டளையின் பங்கு முக்கியமானது.

வாகனத்தில் 12 நிலையான மேசைகள் பொருத்தப்பட்டுள்ளன; ஒரே நேரத்தில் 24 குழந்தைகள் அமரலாம். தற்காலிகக் கட்டமைப்பு களில் அறக்கட்டளை நடத்தும் மற்ற இரண்டு இணைப்புப் பள்ளிகளுக்குத் துணையாக இது செயல்படுகிறது. ஐந்தாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்புவரை அறிவியல், கணிதம், சமூக அறிவியல், ஆங்கில இலக்கணம் கற்பிக்கும் மென்பொருளுடன் 32 அங்குல TV திரையும் உள்ளது.

பேருந்து நிறுத்தப்படும் இடத்திலுள்ள மின்இணைப்பிலிருந்து மின்சாரம் பெறலாம். அது எளிதில் கிடைக்காதபோது பயன்படுத்த, பேருந்தின் மேற்கூரையில் சூரிய மின்தகடு பொருத்தப்பட்டு மாற்று மின்வசதியும் செய்யப்பட்டுள்ளது. வகுப்பறைக்குத் தேவையான மின்கம்பி இணைப்புகள், விளக்குகள், மின்விசிறிகள், காட்சிப்பலகையும் அமைக்கப்பட்டுள்ளன.

மகிழ்ச்சியளிக்கும் மற்றொரு அம்சம், பேருந்திலுள்ள நான்கு ‘வகுப்பறை நூலகங்கள்’. எல்லா வயதினருக்கும் ஏற்ற நூல்கள் இருப்பதால், குழந்தைகள் தங்களுக்கு விருப்பமான புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து, பள்ளியில் இருக்கும் நேரத்தில் படிக்கலாம்.

“சம்ரித்தியிடம் அனுபவமிக்க ஆசிரியர்கள் இருப்பது நல்ல வாய்ப்பு. பெற்றோர் வேலைக்குச் சென்றபின் குடிசைப்பகுதிகளில் பயனின்றிப் பொழுதைக் கழிக்கும் குழந்தைகளையும் அவர்கள் அழைத்து வருகிறார்கள். பலர் பள்ளிப்படிப்பை இடையில் நிறுத்தியவர்கள். மீண்டும் வழக்கமான பள்ளியில் சேர்க்கும் முன், குறிப்பிட்ட கல்விநிலைக்கு அவர்களைத் தயார்படுத்த வேண்டும்” என்கிறார் மேத்தா.

புலம்பெயர் தொழிலாளர்களின் குழந்தைகள் காலையில் வந்து, இந்த நடமாடும் வகுப்பறையில் சில மணிநேரம் அமர்ந்து படிக்கிறார்கள். சில குழந்தைகள் இரண்டு மணி நேரம் கற்றபின் புறப்பட்டுச் செல்கிறார்கள். மேலும் கற்பதில் ஆர்வமுள்ளவர்கள் அதிக நேரம் தங்கி வகுப்புகளில் பங்கேற்கிறார்கள். குழந்தைகள் தங்களுக்கான உணவை வீட்டிலிருந்தே கொண்டுவருகிறார்கள். படிப்பிற்கு இடையில் சிறிது நேரம் உணவு இடைவேளை எடுத்துக் கொண்டு, பின்னர் கற்றலைத் தொடர்கிறார்கள்.

பெரும்பாலோர் கன்னடம் பேசாதவர்கள் என்பதால், அன்றாடப் பயன்பாட்டிற்குத் தேவையான மொழியறிவை வழங்குவதில் தனிக்கவனம் செலுத்தப்படுகிறது. இது உள்ளூர் பள்ளிகளில் அவர்கள் இயல்பாக இணைந்துகொள்ள உதவும். “கன்னடச் சொற்களைத் தொடர்ந்து திரும்பச் சொல்லப் பயிற்சியளிக்கிறோம். இதனால் ஓரளவு தன்னம்பிக்கையுடன் அந்த மொழியைப் பேசுகிறார்கள்” என்கிறார்.

தொடக்கத்தில், குழந்தைகள் வசிக்கும் மூன்று அல்லது நான்கு வெவ்வேறு இடங்களுக்கு இந்த நடமாடும் பள்ளியைக் கொண்டுசென்று வகுப்புகளை நடத்துவதுதான் திட்டமாக இருந்தது. சம்ரித்தி ஆசிரியர்கள் பல நேரங்களில் குடிசைப்பகுதி மற்றும் புலம்பெயர் குழந்தைகளுக்குத் திறந்தவெளியில்


*நடமாடும் பள்ளியின் வகுப்பறையில் மாணவர்கள்.*




ஒரு கன்டெய்னரை வகுப்பறையாக மாற்ற யோசிக்கிறார்கள். "கன்டெய்னரை வாங்கிப் புதுப்பித்து, தேவையான மேசைகள், நாற்காலிகள், பிற வசதிகளை அமைத்து, நிரந்தர இடத்தில் வைத்துவிடலாம்" என்கிறார் மேத்தா.

இதனால் செலவையும் குறைக்கலாம். பேருந்துக்கு வாகனப் பதிவு, காப்பீடு, பராமரிப்பு, சாலைவரி, ஓட்டுநர் ஆகியவை தேவைப்படுகின்றன. கன்டெய்னர் பள்ளியில் இச்செலவுகளைத் தவிர்க்க முடியும். இருப்பினும் கன்டெய்னரும் மலிவானதல்ல; மேலும் ரூ.10 முதல் ரூ.12 லட்சம்வரை தேவைப்படும்.

வகுப்புகள் நடத்தினர். இதனால் வானிலையின் பாதிப்புகளை எதிர் கொள்ள வேண்டியிருந்தது. தற்போது சில பள்ளிகள் இடமளித்துள்ளதால், ரோட்டரி பேருந்து அதிகமாகச் சுற்றிச்செல்ல வேண்டியதில்லை.

இந்த முறையில் பத்து மாதப் பயிற்சிக்குப் பிறகு, குழந்தை வழக்கமான பள்ளியில் சேர உதவப்படுகிறது. அத்துடன் ஆதரவு நின்றுவிடுவதில்லை. புதிய பள்ளியில் கல்விக்கான உறுதியான அடித்தளம் கிடைக்கும்வரை, இணைப்புப் பள்ளி ஆசிரியர்கள் தினமும் மாலையில் சில கூடுதல் மணிநேரம் பயிற்சியளிக்கிறார்கள்.

பெற்றோர் ரோட்டரிக்கு நன்றி தெரிவிக்கிறார்களா, குழந்தைகளை அனுப்புவதில் ஒத்துழைக்கிறார்களா என்று மேத்தாவிடம் கேட்டபோது, "பெற்றோரை நாங்கள் சந்திப்பது அரிது. அவர்களுடனான தொடர்பைச் சம்ரித்தி பணியாளர்களே கவனிக் கிறார்கள். ஆனால் குழந்தைகள் எங்கள் பள்ளிக்கு மிகுந்த மகிழ்ச்சியுடன் வருவதையும் பாடங்களை விரும்பிக் கற்பதையும் உறுதியாகச் சொல்லமுடியும்" என்கிறார்.

"முன்பு இத்திட்டம் மூலம் வழக்கமான பள்ளிகளில் சேர்ந்தவர்கள் சிறப்பாகப் படித்ததாக அறிகிறோம். உயர்நிலைப்பள்ளிப் படிப்பை முடித்ததோடு, சிலர் பொறியாளர்களாகவும் பிற தொழில்துறை வல்லுநர்களாகவும் உயர்ந்திருக்கிறார்கள்."

தான் அறங்காவலராக இருக்கும் சம்ரித்தி, ஆண்டுதோறும் சுமார் 100 குழந்தைகளுக்கு இத்தகைய இணைப்புப் பயிற்சி அளிப்பதாக PDG ராய் கூறுகிறார். அதன் பிறகு, குறைந்த கட்டணத்தில் இயங்கும் ஆங்கிலவழிப் பள்ளிகளில் அவர்களைச் சேர்க்க உதவுகிறது. அங்கு குழந்தைகளின் கல்விக்காக ஆகும் செலவில் பாதியை அறக்கட்டளை ஏற்றுக்கொள்கிறது. மீதிப் பாதித் தொகையை அவர்களது பெற்றோர் செலுத்துகிறார்கள்.

RC பெங்களூர் ராஜ்மஹால் விலாஸ் வழங்கிய நடமாடும் பள்ளிக்கு ஒருமுறை சென்றபோது, "மகிழ்ச்சியுடன் பாடங்களைக் கற்றுக் கொண்டிருந்த 29 குழந்தைகளைப் பார்த்தேன். அவர்களது உற்சாகமும் புன்னகை முகங்களும் எங்கள் அனைவருக்கும் மிகுந்த மனநிறைவை அளித்தன" என்கிறார் ராய்.

அடுத்தகட்டத் திட்டம் குறித்து மேத்தா கூறுகையில், சம்ரித்தி தனது பணிகளை விரிவுபடுத்துவதால் ரோட்டரியிடமிருந்து கூடுதல் ஆதரவை எதிர்பார்ப்பதாகத் தெரிவிக்கிறார். தற்போது மாணவர்கள் இருக்கிறார்கள்; ஆசிரியர்களுக்குத்தான் பற்றாக்குறை. ஆசிரியர்கள் கிடைத்து, அறக்கட்டளை மேலும் உதவி கோரினால், இன்னொரு இணைப்புப் பள்ளியை உருவாக்க ரோட்டேரியர்கள் தயாராக உள்ளனர்.

ஆனால் அடுத்த பள்ளி பேருந்தில் இருக்காது. பள்ளிகளிடமிருந்து நிலையான இடம் கிடைத்திருப்பதால்,

கட்டுமான நிறுவனத்தைச் சேர்ந்த ஒருவர் நிரந்தர இடம் வழங்க முன்வந்துள்ளதால், தேவையான நிதியைச் சங்கத்தால் திரட்ட முடியும் என்று மேத்தா நம்புகிறார். குழந்தைகளின் கல்விக்கான இன்னொரு இடத்தை உருவாக்குவதே அடுத்த இலக்கு.

"இறுதியில் குழந்தைகள் உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்பதுதான் முக்கியம். பயனற்ற அல்லது விரும்பத்தகாத செயல்களில் நேரத்தை வீணாக்காமல், ஏதோ ஒன்றைக் கற்றுக்கொண்டு, பள்ளியில் சேரத் தயாராகிறார்கள்" என்கிறார் அவர்.

சமூகத்திற்கு இத்தகைய இணைப்புப் பள்ளிகள் நிச்சயம் தேவை. பெங்களூரு போன்ற பரபரப் பான நகரங்களுக்குக் கட்டுமானத் தொழிலாளர்கள் மட்டுமல்லாமல், பாதுகாப்புச் சேவைகள் உள்ளிட்ட பல துறைகளில் வேலை தேடியும் மக்கள் வருகிறார்கள்.

"பெற்றோருக்கு இங்கு வேலை கிடைத்ததும், முன்பு பள்ளிக்குச் சென்றுகொண்டிருந்த குழந்தைகள் படிப்பை நிறுத்த நேரிடுகிறது. இங்குள்ள பள்ளியில் சேர்வது அவர்களுக்கு மிகவும் கடினமாகிறது. ஒரு கட்டத்தில் அவர்கள் வழக்கமான பள்ளியில் சேர இந்த இணைப்புப் பள்ளி உதவும். அந்தப் பாலமாகச் செயல்படுவதில் எங்களுக்கு மகிழ்ச்சி!" ■

# குழந்தைகளைக் குதூகலப்படுத்திய வண்டலூர் உலா

**கிரண் ஜெஹரா**

RID 3234, RC மெட்ராஸ் மேக்னம் (RCMM) இணைந்து நடத்திய 'மேக்னம் கார்னிவல்' நிகழ்வில், சென்னை பள்ளிகள் மற்றும் நிறுவனங்களைச் சேர்ந்த 3,234 குழந்தைகள் 60 பேருந்துகளில் வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவுக்கு அழைத்துவரப்பட்டனர்.

வசதியற்ற குடும்பங்களின் குழந்தைகளைச் சென்னையிலும் சுற்றுப்புறங்களிலும் உள்ள பொழுது போக்கு இடங்களுக்கு அழைத்துச் செல்லும் இந்நிகழ்வைச் சங்கம் கடந்த ஏழு ஆண்டுகளாக ஆண்டுதோறும் நடத்தி வருகிறது. கடந்த ஆண்டு 1,000-க்கும் மேற்பட்டோர் பூங்காவைப் பார்வையிட்டனர். இம்முறை மாவட்ட எண்ணைக் குறிக்கும் வகையில் 3,234 குழந்தைகளைச் சேர்க்க DG D சுரேஷ் ஜெயின் ஊக்குவித்தார்.

"சுற்றுலாக்கள் புதிய அனுபவங்களையும் நட்புறவையும் கற்றலையும் அளிக்கின்றன. குழந்தைகளின் மனவளத்தை மேம்படுத்துவது, சிறந்த குடிமக்களாக அவர்களை உருவாக்குவதற்கான முதல்படி; அது நமது பொறுப்பு" என்றார் அவர்.

'மரங்களை நடுவோம்; நமது எதிர்காலத்தை விதைப்போம்' என்ற வாசகத்துடன் பச்சை நிற டி-ஷர்ட்கள் அணிந்த குழந்தைகளை ரோட்டேரியர்கள், ஆன்கள், ரோட்டராக்டர்கள் வரவேற்றனர். "அவர்களது உற்சாகத்தைக் காண மகிழ்ச்சியாக இருந்தது. குதூகலம், புதிய அனுபவங்கள், இனிய நினைவுகள் நிறைந்த நாளை வழங்க விரும்பினோம்" என்றார் RCMM தலைவர் சித்தார்த் பையா.

லோக் பவனில் தமிழக ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் நிகழ்வைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். காலை உணவுக்குப் பிறகு குழந்தைகள் பூங்காவைச் சுற்றிப் பார்த்தனர். கல்வியும் பொழுது போக்கும் இணைந்த இந்த உலாவில் வன விலங்குகளைக் கண்டு மகிழ்ந்தனர்.

RCMM-ன் 70-க்கும் மேற்பட்ட ரோட்டேரியர்களும் குடும்பத்தினரும், 60 ரோட்டராக்டர்களும், 50 மாவட்ட நிர்வாகிகளும் சங்கத்தலைவர்களும் தன்னார்வலர்களாகப் பணியாற்றினர். சிறப்புத் தேவைகளுள்ள 150 குழந்தைகள் குடும்பத்தினர் அல்லது பராமரிப்பாளர் துணையுடன் பங்கேற்றனர். அக்ஷய் சேத் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்.

அருகிலுள்ள B S அப்துர் ரஹ்மான் கிரெசன்ட் அறிவியல் தொழில்நுட்ப நிறுவனத்தில் மதிய உணவு வழங்கப்பட்டது. வளாகத் திறந்தவெளி அரங்கில் மாயாஜால நிகழ்ச்சியையும் குழந்தைகள் ரசித்தனர். கல்லூரி போக்குவரத்திற்காக 25 பேருந்துகளை வழங்கியது; அதன் 40 ரோட்டராக்டர்கள் குழந்தைகளைக் கவனித்தனர்.

மொத்தச் செலவு ரூ.40 லட்சம். ஐம்பது ரோட்டரி சங்கங்கள், தனிநபர்கள், ஆனெட்டுகள் ரூ.1,000 முதல் ரூ.2 லட்சம் வரை பங்களித்தனர். மாவட்டம் ரூ.30 லட்சம் வழங்கியது. மீதமுள்ள நிதி அரசுப் பள்ளிகளில் கழிப்பறைகள் கட்டப் பயன்படுத்தப்படும் என்றார் பையா.■



*மேலே: மாணவர்களில் ஒருவருடன் கலந்துரையாடும் தமிழக ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர். அவரது இடப்புறம் DG D சுரேஷ் ஜெயின்; பின்னால் RC மெட்ராஸ் மேக்னம் தலைவர் சித்தார்த் பையா, கீழே: உயிரியல் பூங்காவில் மாணவர்களுடன் சங்க உறுப்பினர்கள்.*



# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரோட்டரியின் ஆதரவுக்கரம்

ஜெய்ஸ்ரீ

அசாம், கேரளா, குஜராத் மாநிலங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரோட்டரி சங்கங்கள் உதவிக்கரம் நீட்டின. அவசரத் தேவைகளுக்கான உடனடி நிவாரணத்துடன், சேதமடைந்த வீடுகளை மீண்டும் அமைத்து, வாழ்க்கையை மீட்டெடுப் பதற்கான உதவிகளையும் வழங்கின.

இந்தியாவில் வெள்ள அபாயம் அதிகமுள்ள மாநிலங்களில் அசாமும் ஒன்று. அதன் நிலப்பரப்பில் ஏறத்தாழ 40 சதவீதம் வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடியது. ஜூலையில் ஏற்பட்ட வெள்ளத்தில் சுமார் 1.8 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டனர். ஆறுகளின் மேல்பகுதிகளில் பெய்த



கேரளாவின் ஆரன்முளாவில் நிவாரணப் பொருள்களை வழங்கப் படகில் செல்லும் ரோட்டேரியர்கள்.



ஆரன்முளாவில் வெள்ளம் சூழ்ந்த பகுதி.




*அசாமின் சிவசாகரில் பெண்ணொருவருக்குக் காசோலை வழங்கும் RC டெல்லி வெஸ்ட் தலைவர் பித்யுத் தமுலி (இடமிருந்து இரண்டாவது), முன்னாள் தலைவர் அருண் ரூங்டா (நடுவில்). கீழே: குஜராத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை வழங்கும் ரோட்டேரியர்கள்.*




கனமழையும் மேகவெடிப்புகளும், பிரம்மபுத்திராவின் துணையாறுகளான திக்கோ, தன்சிரி உள்ளிட்டவற்றில் திடீர் வெள்ளப்பெருக்கை ஏற்படுத்தின. சிவசாகர், சரைதேவ், ஜோர்ஹாட், கோலாகாட் மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன.

மழை தணிந்த பிறகு, ஆகஸ்ட் மாதத் தொடக்கத்தில் RC டெல்லி வெஸ்ட், RID 3011 சங்கத்தைச் சேர்ந்த குழுவினர் சிவசாகருக்குப் பயணித்தனர். வீடுகள் சேதமடைந்த 16 குடும்பங்களுக்குக் குடிசைகளை மீண்டும் கட்டத் தலா ரூ.21,000 வழங்கினர். "தகரக்கூரைக் குடிசை அமைக்க இத்தொகை உதவும். உள்ளூர் அரசு நிர்வாகம் இக்குடும்பங்களைத் தேர்ந்தெடுத்தது" என்றார் முன்னாள் தலைவர் அருண் ரூங்டா.

மளிகைப் பொருள்கள், தனிநபர் சுகாதாரப் பொருள்கள், மருந்துகளும் வழங்கப்பட்டன. நஸீரா கல்லூரியின் சிறிய பழுதுபார்ப்புப் பணிகளுக்கும் நிதியுதவி அளிக்கப்பட்டது. அசாமைப் பூர்வீகமாகக் கொண்ட சங்கத் தலைவர் பித்யுத் தமுலி, ரூங்டா, உறுப்பினர் அனில் தயாள் ஆகியோர் பணிகளை முன்னெடுத்தனர்.

கேரளாவில் பம்பை ஆற்றங்கரையிலுள்ள ஆரன்முளாவில், மூன்று நாட்களுக்கும் மேலாகப் பெய்த கனமழையால் பெரும்பாலான பகுதிகள் மூழ்கின. ஆயிரக்கணக்கானோர் பள்ளிகள், தேவாலயங்களிலிருந்த நிவாரண முகாம்களில் தஞ்சமடைந்தனர். RC காஞ்சிரப்பள்ளி, RID 3211, எருமேலி மற்றும் ஆரன்முளா சங்கங்களுடன் இணைந்து உணவும் குடிநீரும் வழங்கியது.

"வெள்ளம் அதிகமாக இருந்ததால் பல இடங்களுக்குப் படகில்தான் செல்லவேண்டியிருந்தது" என்றார் RC ஆரன்முளா தலைவர் ஸ்ரீகுமாரன் நாயர். பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிய நாயரின் சொந்த வீடும் வெள்ளத்தால் சூழப்பட்டிருந்தது. மாவட்ட உதவி ஆளுநரும் குடும்பத்தினரும் தங்கள் வீட்டின் இரண்டாவது மாடியில் மூன்று நாட்கள் தங்கியிருந்தனர்.

மழை ஓய்ந்த பின்னர் மக்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பத் தொடங்கியுள்ள நிலையில், அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசிய வீட்டுப் பொருள்களை ரோட்டரி வழங்கிவருகிறது. திருவனந்தபுரம், கொல்லம் சங்கங்களும் போர்வைகள், உடைகள், மளிகைப் பொருள்களை வழங்கி ஆரன்முளா குடும்பங்களுக்கு உதவின.

தெற்கு குஜராத்தில் சூரத், சிக்லி, கண்தேவி, நவ்சாரி, வல்சாட், உம்பர்காவ் சங்கங்கள் ஒன்றிணைந்து கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்றன. இடம் பெயர்ந்த அல்லது அடிப்படைத் தேவைகளைப் பெற முடியாமல் தவித்த குடும்பங்களுக்கு முதலில் உலர் சிற்றுண்டிகள், குடிநீர், மருந்துகள் வழங்கப்பட்டதாக PDG துஷார் ஷா தெரிவித்தார்.

வெள்ள நிலைமை படிப்படியாக மேம்படத் தொடங்கியதும், குடும்பங்களின் பிற தேவைகளையும் நிறைவேற்றும் வகையில் சங்கங்கள் தங்கள் நிவாரணப் பணிகளை விரிவுபடுத்தின. 500-க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு மளிகைப் பொருள்கள், தார்ப்பாய்கள், சமையல் பாத்திரங்கள், உடைகள், தூய்மை மற்றும் சுகாதாரப் பொருள்கள், மெத்தைகள், போர்வைகள், கொசுவலைகள் வழங்கப்பட்டன. பம்பாய் ரோட்டரி சங்கங்கள், RID 3141, லோக்மங்கலம் அறக்கட்டளை, Parab உள்ளிட்ட NGO-க்களும் இணைந்தன.

"புவியியல் எல்லைகளைக் கடந்து சங்கங்கள் ஒன்றிணைவது நிவாரணப் பொருள்களை வழங்குவது மட்டுமல்ல; துயரமான நேரத்தில் நீங்கள் தனியாக இல்லை என்ற உறுதியைப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அளிப்பதும்தான்" என்றார் ஷா. ■

# பழங்குடி மாணவிகளுக்கு டிஜிட்டல் கல்வி வாய்ப்புகள்

சுப்பாராவ் ராவூரி

ஆந்திரப் பிரதேசத்தின் தொலைதூரப் பகுதியில், வசதியற்ற 640 மாணவிகள் முதல்முறையாகக் கணினியை இயக்குகிறார்கள். சிறந்த கல்விக்கும் வாழ்க்கைக்கும் வாய்ப்புகள் நிறைந்த டிஜிட்டல் உலகம் அவர்கள்முன் விரிகிறது. அந்த அனுபவத்தைக் கற்பனை செய்துபாருங்கள்.

இன்று உயர்கல்வியைத் தொடரவும், பல்கலைக்கழகச் சேர்க்கைக்குப் போட்டியிடவும், நல்ல வேலைவாய்ப்பையும் பொருளாதாரச் சுதந்திரத்தையும் பெறவும் உதவும் டிஜிட்டல் கல்விக் கருவிகள் அவர்களுக்குக் கிடைத்துள்ளன. ரோட்டரியும் உலகளாவிய மானியங்களுமே இந்த மாற்றத்தைச் சாத்தியமாக்கியுள்ளன.

பல தலைமுறைகளாக, ஆந்திராவின் தொலைதூரப் பழங்குடிப் பகுதிகளில் வாழும் பல மாணவிகளுக்கு அடிப்படைக் கல்வி மட்டுமே கிடைத்தது. நவீன கற்றல் வளங்களும் தொழில்நுட்ப அறிமுகமும் இல்லாததால், உயர்கல்விக்கும் வருமானமளிக்கும் வேலைவாய்ப்புகளுக்கும் பெரும் தடைகள் இருந்தன. இளவயதுத் திருமணம், பொருளாதாரச் சார்பு, அடிமைத்தனமான வாழ்க்கை, சிலருக்கு வன்முறை என அதன் விளைவுகள் கடுமையாக இருந்தன.

இவற்றை உணர்ந்த மாநில அரசு, பழங்குடிக் குழந்தைகளுக்கென உண்டுறைவிடப் பள்ளிகளை நிறுவியது. கட்டடங்களுக்கும் பள்ளிகளின் செயல்பாட்டிற்கும் அரசு நிதியளித்தாலும், நவீன டிஜிட்டல் கல்வி மற்றும் STEM வளங்கள் போதுமானதாக இல்லை. உயர்கல்விச் சேர்க்கைக்கான கணினிவழிப் போட்டித் தேர்வுகளுக்கு மாணவர்களால் முறையாகத் தயாராக முடியவில்லை.

### முதல் முயற்சி

இந்த இடைவெளியை நிரப்ப ரோட்டரி முன்வந்தது. 2024-ல் RC விஜயவாடா மிட்டவுன், RID 3020, RC பர்லிங்கேம் அண்ட் ஹில்ஸ்பரோ, RID 5150 உடன் இணைந்து உலகளாவிய மானியத் திட்டத்தைச் செயல்படுத்தியது. விசன்னபேட்டாவிலுள்ள பழங்குடி



மாணவியர் பள்ளி மற்றும் ஜூனியர் கல்லூரியில் இரண்டு டிஜிட்டல் கற்றல் மையங்களும் இரண்டு STEM ஆய்வகங்களும் அமைக்கப்பட்டன.

90,000 டாலர் மதிப்புள்ள இத்திட்டத்திற்கு RID 5150 DDF நிதியிலிருந்து 35,000 டாலர் வழங்கியது. RID 3020 10,000 டாலர்; RID 5330 5,000 டாலர் வழங்கின. இந்தப் பங்களிப்புகளின் 80 சதவீதமான 40,000 டாலரை TRF இணை நிதியாக வழங்கியதால் மானியம் சாத்தியமானது.

காக்கிநாடா பொறியியல் முன்னாள் மாணவர்களின் சேவை அறக்கட்டளையான KEATS, உள்ளூர் சங்கத்துடன் இணைந்து திட்டத்தைச் செயல்படுத்தி, மாணவர்களின் கல்வித் திறனைக் கண்காணித்தது.

பழங்குடி உண்டுறைவிடப் பள்ளிகளை நிர்வகிக்கும் ஆந்திரப் பிரதேச பழங்குடி நல உண்டுறைவிடக் கல்வி நிறுவனங்களின் அமைப்பான APTWREIS-ம் பங்கேற்றது. வெளிநாடுவாழ் தெலுங்கர்களின் வளங்களைத் திட்டமிட்டுப் பயன்படுத்த ஒருங்கிணைக்கும் ஆந்திரப் பிரதேச வெளிநாடுவாழ் தெலுங்கர் அமைப்பான APNRTS-ம் இணைந்தது.

விசன்னபேட்டா பள்ளிக்கு இரண்டு சர்வர்கள், 80 ஸ்மார்ட் கணினி முனையங்கள், அவற்றுக்கான 80 மேசைகள் மற்றும் நாற்காலிகள், நான்கு டிஜிட்டல் பலகைகள், மின்னணுப் பாடப்பொருள்கள் வழங்கப்பட்டன. இயற்பியல், வேதியியல், உயிரியல் செய்முறைக் கருவிகளுடன் இரண்டு STEM ஆய்வகங்கள் அமைக்கப் பட்டதுடன் ஆசிரியர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட்டது.

கணினிகளையும் ஆய்வகங் களையும் தாண்டி, பள்ளியில் வேறு சிக்கல்களும் இருந்தன. போதிய இணைய இணைப்பும் மின்சாரமும் இல்லை; தூய குடிநீர் பற்றாக்குறை இருந்தது. குரங்குகள் அடிக்கடி வளாகத்திற்குள் நுழைந்தன.

ரெட்டி லேப்ஸின் கூடுதல் CSR நிதியான ஒரு லட்சம் டாலர் மூலம் அடிப்படைக் கட்டமைப்பை மேம்படுத்த முடிந்தது. சூரிய மின்சாரம், தூய குடிநீர், குரங்குகள் நுழைவதைத் தடுக்கும் பாதுகாப்புக் கம்பிகள் ஆகியவை ஏற்படுத்தப்பட்டன.



*பழங்குடிப் பள்ளியின் கணினி ஆய்வகத்தில் மாணவிகள்.*

### விரிவடைந்த கல்விப்பணி

முதல் திட்டம் முன்னேறியபோது, இதே முறையில் மேலும் ஆயிரக்கணக்கான பழங்குடி மாணவர்களுக்குக் கல்வி வாய்ப்பளிக்க முடியும் என்பதை ரோட்டரி குழுவினர் உணர்ந்தனர்.

2025-ல் RID 3020, 5150 ஆகியவை KEATS, APNRTS, APTWREIS உடன் இணைந்து இரண்டாவது முயற்சியைத் தொடங்கின. 1,17,000 டாலர் உலகளாவிய மானியத்தில் புசராஜுபல்லே பழங்குடி மாணவியர் பள்ளி மற்றும் ஜூனியர் கல்லூரிக்கு இரண்டு டிஜிட்டல் கற்றல் மையங்கள், இரண்டு STEM ஆய்வகங்கள், ஒன்பது டிஜிட்டல் பலகைகள், ஆசிரியர் பயிற்சி வழங்கப்பட்டன. இதனால் 779 மாணவிகள் பயனடைந்தனர். முதல் திட்டத்தின் வெற்றியே விரிவாக்கத்திற்கான முன்மாதிரியானது.

2026-ல் கூட்டணி மேலும் முன்னேறியது. பத்ரகிரி, பாடேருவிலுள்ள மேலும் இரண்டு பழங்குடிப் பள்ளிகள் மற்றும் ஜூனியர் கல்லூரிகளுக்கு இதேபோன்ற வசதிகளை வழங்க 2,50,000 டாலர் உலகளாவிய மானியம் அனுமதிக்கப்பட்டது. சுமார் 2,000 மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்தும் இத்திட்டத்தில் STEM ஆய்வகங்கள், 14 டிஜிட்டல் பலகைகள், விரிவான ஆசிரியர் பயிற்சி இடம்பெறுகின்றன.

அதே ஆண்டில், கன்னவரம் அருகிலுள்ள HEAL பள்ளியின் பெற்றோரை இழந்த 1,000 மாணவர் களுக்காக மேலும் 2,17,000 டாலர் உலகளாவிய மானியத்திற்கும் இரு மாவட்ட ரோட்டேரியர்கள் அனுமதி பெற்றனர்.

ஒரே பழங்குடி மாணவியர் பள்ளிக்காகத் தொடங்கிய முயற்சி, ஆயிரக்கணக்கான வசதியற்ற மாணவர்களைச் சென்றடையும் டிஜிட்டல் கல்வி இயக்கமாக வளர்ந்துள்ளது.

### கூட்டணியின் பலன்

நான்கு உலகளாவிய மானியங்களின்



STEM *ஆய்வகத்தில் மாணவர்கள்.*

மொத்த மதிப்பு 6,74,000 டாலர். ரெட்டி லேப்ஸ் வழங்கிய மொத்த CSR பங்களிப்பான 4,00,000 டாலர், ரோட்டரியின் முதலீட்டிற்கு மேலும் வலுசேர்த்துள்ளது. சூரிய மின்சாரம், கழிப்பறைகள் மற்றும் உணவுக்கூடங்கள் புதுப்பித்தல், தூய குடிநீர் வசதிகள், பிற வளாக மேம்பாடுகளுக்கு இது உதவியது.

திட்டமிட்ட கூட்டணிகள் மூலம் முதலீடு செய்யப்படும் ஒவ்வொரு டாலரின் பயனையும் ரோட்டரியின் உலகளாவிய மானிய முறை எப்படிப் பெருக்குகிறது என்பதற்கு இது எடுத்துக்காட்டு.

இந்த முயற்சிகள் இணைந்து 4,400க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு டிஜிட்டல் கல்வி வாய்ப்புகளை வழங்கியுள்ளன. கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியலில் அவர்களது செயல்திறன் மேம்பட்டுள்ளது. மாணவிகள் கணினி மற்றும் STEM ஆய்வகங்களைத் தொடர்ந்து பயன் படுத்துகிறார்கள். எதிர்காலம் குறித்த உற்சாகமும் தன்னம்பிக்கையும் அதிகரித்துள்ளன; உயர்கல்விக்கான கதவுகளும் திறந்துள்ளன.

உலகளாவிய மானியங்களின் துணையுடன், ஆந்திரப் பிரதேசத்தின் ஆயிரக்கணக்கான இளையோருக்குக் கல்வி, வாய்ப்புகள், சிறந்த எதிர்காலத்தை ரோட்டரி உருவாக்கிவருகிறது.

கட்டுரையாளர்
RID 3020 முன்னாள் ஆளுநர்.

# ராணிப்பேட்டையில் மண்டையோடு-முகச்சிகிச்சை மையம்

ரோட்டரி நியூஸ் குழு




*மையத்தைத் திறந்துவைக்கும் முருகானந்தத்துடன்* DG T S *ரவிகுமார் (இடமிருந்து மூன்றாவது),* DGE T *சிவகுமார் (வலது),* PDG J K N *பழனி,* IPDG V *சுரேஷ்.*

RC ஆர்க்காடு ஃபோர்ட், RID 3231-ன் ரூ.1.5 கோடி உலகளாவிய மானியத் திட்டத்தில், ராணிப்பேட்டை ஸ்கடர் நினைவு மருத்துவமனையில் மண்டையோடு-முகச் சிகிச்சை மையத்தை RI துணைத்தலைவரும் இயக்குநருமான M முருகானந்தம் திறந்து வைத்தார்.

அமெரிக்காவின் ஃபுளோரிடா விலுள்ள RC சரசோட்டா சன்ரைஸ், RID 6960 பங்காளியாகவும், மேலும் 13 சங்கங்கள் இணை ஆதரவாளர்களாகவும் பங்களித்தன. PDG ஜவாரிலால் ஜெயின் குறிப்பிட்ட நோக்கத்திற்கான அறக்கொடை நிதியளித்தார்.

தலை, மண்டையோடு, முகம், தாடையில் பிறவிக்குறைபாடுகள், காயங்கள், கட்டிகள் உள்ள குழந்தை களுக்கும் பெரியவர்களுக்கும் சிறப்புச் சிகிச்சை கிடைக்கும். “சிகிச்சையுடன் நம்பிக்கை, கண்ணியம், தன்னம்பிக்கை, மேம்பட்ட வாழ்க்கைத் தரத்தையும் வழங்கும்” என்ற முருகானந்தம், சங்கத்தையும் DG T S ரவிகுமாரையும் பாராட்டினார்.

முன்னதாக, உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் RC உசிலம்பட்டி, RID 3000 அமைத்த டயாலிசிஸ் பிரிவையும், ரோட்டரியின் பொதுமக்கள் நன்மதிப்பை உயர்த்த தேனியில் RC தேனி சென்ட்ரல் ஜெம்ஸ் அமைத்த வரவேற்புப் பலகையையும் திறந்துவைத்தார்.■

Rotary PEOPLE OF ACTION

# தையல் இயந்திரங்களால் தன்னம்பிக்கை பெறும் பெண்கள்

V முத்துக்குமரன்

கிராமப்புறப் பெண்களை வலுப்படுத்துவதே RID 3212 DG காந்தி கிருஷ்ணனின் முதன்மை நோக்கம். DGE-யாக இருந்தபோது, பிப்ரவரி 2026-ல் 120 வருங்காலச் சங்கத் தலைவர்கள் பங்கேற்ற PELS பயிற்சியில், 1,000-க்கும் மேற்பட்ட தையல் இயந்திரங்களை வழங்கும் திட்டத்தை அறிவித்தார்.

இந்த அறிவிப்பு, தலைவர்கள் பொறுப்பேற்பதற்கு முன்பே, பெண்களின் வாழ்வாதார மேம்பாட்டில் சங்கங்கள் இணைந்து செயல் படுவதற்கான வழியை வகுத்தது.

“வடக்கே ராமநாதபுரம் முதல் தெற்கே கன்னியாகுமரிவரை ஏழு வருவாய் மாவட்டங்களிலுள்ள 124 சங்கங்களும் இதில் ஈடுபட்டுள்ளன. ரோட்டேரியர்கள் களப்பணிமூலம் பயனாளிகளைத் தேர்ந்தெடுத்து, பட்டியலை ஆளுநருக்கு அனுப்புகிறார்கள்” என்கிறார் மாவட்டச் செயலாளர் பிஜு ஃபிடெலிஸ்.

சங்கங்கள் தையல் பயிற்சி வழங்காததால், ஏற்கெனவே தையல் தெரிந்தவர்களே தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். இயந்திரத்தைப் பயன்படுத்தி வாழ்வாதாரம் பெறக்கூடியவர்களின் தொழில், திறன், பொருளாதாரநிலை, குடும்ப விவரங் களைச் சரிபார்த்து, தகுதியானவர்களை அடையாளம் காண்பது ரோட்டேரியர்களின் பொறுப்பு.

உதவி வருமானமாக மாறவேண்டும் என்பதற்காகவே பயனாளிகளின் தையல் திறனை உறுதிசெய்வதில் சங்கங்கள் கவனம் செலுத்துகின்றன.

ரோட்டேரியர்களின் நிதியுதவியில் நடைபெறும் இத்திட்டத்தின் மதிப்பு ரூ.60 லட்சம். திருநெல்வேலியில் நடைபெற்ற TRF கருத்தரங்கில் முதல்கட்டமாக 360 இயந்திரங்கள் வழங்கப்பட்டன. “மீதமுள்ள இரு கட்டங்களையும் டிசம்பர் இறுதிக்குள் முடிப்போம்” என்கிறார் கிருஷ்ணன்.

“அடித்தட்டுப் பெண்களின் பொருளாதாரச் சுதந்திரமும் வாழ்வாதாரமும் தொடர் நன்மைகளை உருவாக்கும். ஒரு பெண்ணுக்கு நிலையான வருமானம் கிடைத்தால் குடும்பப் பொருளாதாரம் சீராகும்; குழந்தைகளின் கல்வி உறுதியாகும்; தற்சார்பு வளரும். கிராமக் குடும்பங்களை முன்னேற்றி, ஒட்டுமொத்தச் சமூகத்தையும் வலுப்படுத்துவதே நோக்கம்” என்கிறார்.

இந்த இயந்திரங்கள் பொருளுதவியாக இல்லாமல், குடும்பங்கள் தங்கள் சொந்த முயற்சியால் முன்னேறுவதற்கான வாய்ப்பாக அமையவேண்டும் என்பதே ஆளுநரின் எதிர்பார்ப்பு.

### பிங்க் ஆட்டோக்கள்

மூன்று கட்டங்களில் 124 பிங்க் ஆட்டோக்களை வழங்க, ரூ.3 கோடி உலகளாவிய மானியத்திற்கும் கிருஷ்ணன் விண்ணப்பித்துள்ளார். பயனாளிகளுக்கு ரோட்டரி சங்கங்கள் ஓட்டுநர் பயிற்சியளிக்கும்; பின்னர் ஆட்டோ ஓட்டுநர் உரிமம் வழங்கப்படும்.■

*பெண்களுக்குத் தையல் இயந்திரங்களை வழங்குகிறார் DG காந்தி கிருஷ்ணன் (இடமிருந்து நான்காவது). உடன் (இடமிருந்து இரண்டாவதாக): PDGக்கள் முத்தையா பிள்ளை, B ஆறுமுகபாண்டியன், சின்னதுரை அப்துல்லா, RID 3234 PDG J ஸ்ரீதர், DGE எபனேஷ் பென்சாம், RID 3203 PDG B தனசேகர்.*



# தலிபான்களால் சிதைக்கப்பட்டு உலகால் மறக்கப்பட்டவர்கள்




ரஷீதா பகத்

விருதுபெற்ற பத்திரிகையாளர் ஸஹ்ரா ஜோயா, ஏமி ஃபெரிஸ்-ரோட்மனுடன் எழுதிய 'தி வானிஷிங் கேர்ல் ஆஃப் காபூல்' நூலின் மையக்கருத்து இதுதான்: தலிபான்களின் அடக்குமுறை உடை, பள்ளிக்கல்வி பற்றியது மட்டுமல்ல; ஒரு பாலினத்தையே பொது வாழ்க்கையிலிருந்து அழித்து, பெண் வெறுப்பை ஆட்சிக்கொள்கையாக்குவது. அச்சத்தாலும் வாய்ப்புகளை அழிப்பதாலும் கட்டுப்படுத்துவது. பெண் வெறுப்பை இயல்பான ஒன்றாக ஏற்கச்செய்துவிட்டால், மற்ற அமைப்புகளைச் சிதைத்து அவற்றைக் கட்டுப்படுத்துவது எளிதாகிவிடும் என்பதையும் நூல் விளக்குகிறது.

2021-ல் அமெரிக்கப் படைகள் வெளியேறி, ஆப்கானிஸ்தானைத் தலிபான்களிடம் ஒப்படைத்தபின் பெண்கள்மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட கொடுமைகளின் நெஞ்சை நொறுக்கும் பதிவு இந்நூல். 'இஸ்லாமியச் சட்டத்திற்குட்பட்டு' பெண்களின் கல்விக்கும் சுதந்திரத்திற்கும் இடமளிப்பதாக இந்தியா உள்ளிட்ட சர்வதேச மேடைகளில் அளித்த வாக்குறுதிகளுக்கு நேரெதிரான களநிலவரத்தை ஸஹ்ரா காட்டுகிறார். கடத்தல், சிறைப்பிடித்தல், சித்திரவதை, கட்டாயத் திருமணம், பாலியல் வல்லுறவு எனக் கொடூரங்கள் விரவியுள்ளன.

பிரிட்டிஷ்-அமெரிக்கப் பத்திரிகையாளரும் முன்னாள் காபூல் ராய்ட்டர்ஸ் செய்தியாளருமான ஏமி, 2016-ல் தனது பயிற்சி அமர்வில் ஸஹ்ராவைச் சந்தித்தார். ஆங்கிலம் தெரியாவிட்டாலும் செய்திசேகரிப்பில் அவருக்கிருந்த ஆர்வம் தீவிரமானது.

பாமியானில் வளர்ந்த ஸஹ்ரா, சிறுபான்மை ஷியா ஹசாரா சமூகத்தைச் சேர்ந்தவர். முதல் தலிபான் ஆட்சியில், ஆண் குழந்தைபோல் உடையணியும் 'பச்சா போஷ்' முறையில் பள்ளிக்குச் சென்றார். ஆண் குழந்தை பிறக்கும்வரை அவரது குடும்பத்திலும் பெண்குழந்தைகளின் பிறப்பு துயரமாகவே கருதப்பட்டது. காபூலுக்குக் குடிபெயர்ந்ததும் படித்துக்கொண்டே பெற்றோருக்குத் தெரியாமல் செய்தி நிறுவனத்தில் பணியாற்றினார். தலிபான்கள் மீண்டுவருவதற்கு ஓராண்டுக்கு முன், 2020-ல் 'ருக்ஷானா மீடியா'வைத் தொடங்கினார்.

பத்திரிகையாளர்கள், ராணுவ மொழிபெயர்ப்பாளர்கள், அரசு ஊழியர்கள் கடத்தப்படுவதாகச் செய்திகள் வந்ததும், கலைஞர்களும் செய்தியாளர்களும் தலைமறைவாயினர். நண்பர்கள், உறவினர்களிடம் தஞ்சமடைந்த ஸஹ்ரா, முகத்தையும் உடலையும் மறைத்து, உயிராபத்திலும் செய்திகளை அனுப்பினார். 'தி கார்டியன்' உள்ளிட்ட ஊடகங்கள் வெளியிட்டன.

ஒருவாரத்தில் உயிர்பிழைக்க நாட்டைவிட்டு வெளியேறுவது அவசியமானது. உரிமைகள் பறிபோவதை எதிர்த்து நூற்றுக் கணக்கான பெண்கள் வீதிகளில் போராடியும் பலனில்லை. அவர்களைப் போன்றவர்கள் கனவுகளைத் துரத்திய ஒரு தலைமுறை; இப்போது உலகத்தால் கைவிடப்பட்டவர்கள். தங்களுக்கு நேரும் அநீதியை எதிர்த்து எழுப்பிய குரல்களால் பறிபோன சுதந்திரத்தை மீட்க முடியவில்லை.

ஸஹ்ராவின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதை பிரிட்டிஷ் தூதரிடம் ஏமி தெரிவித்தார். அவரது உதவியுடன் மூன்று சகோதரிகள், சகோதரர், உடன்பிறந்தவரின் மகளுடன், நூற்றுக்கணக்கானோர் நெருக்கியடித்த பிரிட்டிஷ் ராணுவ விமானத்தில் ஸஹ்ரா தப்பினார்.

லண்டனில் அவர்களது புதிய வாழ்க்கை எளிமையாகவும் நெகிழ்ச்சியுடனும் விவரிக்கப்படுகிறது. இளையவர்கள் கல்வியைத் தொடர, ஸஹ்ரா தாய்நாட்டுச் செய்தி ஆதாரங்களின் உதவி யுடன் பெண்கள்மீதான வன்முறை யையும் மனிதத்தன்மையற்ற நடத்தையையும் பதிவுசெய்கிறார். ஆப்கானிஸ்தானைவிட்டு வெளியேறிய பின்னரும், மூத்தவரான ஸஹ்ராவின் செய்திப்பணியின் மையமாக அங்குள்ள பெண்களே

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | The Vanishing Girl of Kabul |
| ஆசிரியர் | : | ஸஹ்ரா ஜோயா |
| இணை ஆசிரியர் | : | ஏமி ஃபெரிஸ் ரோட்மன் |
| பதிப்பகம் | : | ஹாஷெட் இந்தியா |
| பக்கங்கள் | : | 288 |
| விலை | : | ரூ.799 |

இருக்கிறார்கள். அவர்களது துயரங்களை உலகிற்குக் கொண்டுசெல்லும் பணிக்கு அங்கீகாரங்களும் விருதுகளும் கிடைக்கின்றன.

2022-ல் கேட்ஸ் ஃபவுண்டேஷன் விருதுக்காக முதல்முறையாக அமெரிக்கா சென்றவர், மலாலா யூசஃப்சாயைச் சந்தித்தார். "தலிபான்கள் எங்களின் பொதுவான எதிரி" என்கிறார். ஆப்கன் பெண்களுக்கு நம்பிக்கையிருக்கிறதா என்ற கேள்வி, நாட்டைக் கைவிட்ட அமெரிக்காவின்மீதான கோபத்தை வெளிப்படுத்துகிறது. கருகிய தூதரகத்தை விட்டுச்சென்ற தங்கள் அதிகாரிகளையும் படைவீரர்களையும் அமெரிக்கர்கள் மறந்துவிட்டதுபோல் தோன்றியதாகக் கூறுகிறார்.

ஆப்கன் அரசுக்குக் குரலில்லாத தோஹா பேச்சுவார்த்தைகளில் அமெரிக்காவின் பங்கின்மீதான கொந்தளிப்பு நூலெங்கும் தெரிகிறது. நம்பியவர்களால் துரோகமிழைக்கப்பட்டதாக ஆப்கன் பெண்கள் உணரும் கசப்பை அது பிரதிபலிக்கிறது.

ஈரானில் மேலாண்மை படிக்கும் பஹார், நவ்ரோஸுக்காகத் திரும்பும்போது எல்லையில் தலிபான்களிடம் சிக்குகிறார். அவமதிக்கப்பட்டு, தாக்கப்பட்டு, நினைவிழக்கும்வரை மீண்டும் மீண்டும் பாலியல் வல்லுறவுக் குள்ளாகிறார். முதுகெலும்பு முறிவுக்காக மூன்றுமாதச் சிகிச்சை தேவைப்படுகிறது. இந்தப் பாலியல் வன்முறைச் சாட்சியங்கள் மனதை வருத்தினாலும், அவற்றின் நேரடியான பதிவும் நம்பகத்தன்மையும் நூலைத் தவிர்க்க முடியாத வாசிப்பாக்குகின்றன.

வீடுகளில் புகுந்து தாய்மார்கள், மகள்கள், சிறுமிகள்மீதும் பாலியல் வன்முறை நிகழ்த்தப்படுவதாகப் பாதிக்கப்பட்டவர்கள் ஸஹ்ராவிடம் கூறுகிறார்கள். சாட்சியங்களைக் கேட்கும் அவரும் மனக்காயத்திற்கும் துயரக்கனவுகளுக்கும் ஆளாகிறார்.

ஆனாலும் தொடர்ந்து எழுதுகிறார். வன்முறையைத் திட்டமிட்டுக் காணொலியாகப் பதிவுசெய்து, புகாரளித்தால் சமூக ஊடகங்களில் வெளியிடுவோம் எனத் தலிபான்கள் மிரட்டுகின்றனர். அச்சுறுத்தலை மீறிப் பல பெண்கள் பேச முன்வருகிறார்கள். தங்கள்மீது நிகழ்ந்த கொடுமையை வெளியில் சொல்வதைக்கூடத் தடுக்கும் இந்த மிரட்டல்களுக்கு இடையிலும், பெண்கள் துணிச்சலுடன் மௌனத்தைக் கலைக்கிறார்கள். சர்வதேச ஊடகங்கள் செய்திகளை வெளியிடுகின்றன. அட்டூழியங்கள் தொகுக்கப்பட்டு ஹேக்கிலுள்ள சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றமான ICC முன் வைக்கப்படுகின்றன.

இறுதிப் பக்கத்தில் ஆப்கன் பெண்களின் அலறல் மனச்சாட்சியை உலுக்குகிறது: "எங்களைத் தலிபான்களின் கருணைக்கு விட்டுவிட்டு, நீங்களும் முகத்தைத் திருப்பிக்கொள்ளப் போகிறீர்களா?" இந்தக் கேள்வி வாசிப்பு முடிந்த பின்னரும் நம்மைவிட்டு அகலாமல் ஒலிக்கிறது.■

# கிரிக்கெட் களத்தில் பெண் ரோட்டேரியர்கள்

ரோட்டரி செய்திக்குழு




ஆகஸ்ட் 29 தேசிய விளையாட்டு தினத்தை முன்னிட்டு, RC ராய்ப்பூர் காஸ்மோ திவாஸ், RID 3261, இருநாள் ரோட்டரி சங்கங்களுக்கிடையிலான மகளிர் பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியை நடத்தியது. ராய்ப்பூர் குயின்ஸ், ராய்ப்பூர் எலிகன்ஸ், பிலாய் பினாக்கிள், ஏற்பாட்டுச் சங்கத்தைச் சேர்ந்த பெண்கள் பங்கேற்றனர்.

போட்டியுடன் நட்புறவும் இணைந்த இந்நிகழ்வில், வீராங்கனைகள் உறுதியையும் விளையாட்டு உணர்வையும் வெளிப்படுத்தினர். RC பிலாய் பினாக்கிள் சாம்பியனானது; RC ராய்ப்பூர் எலிகன்ஸ் இரண்டாமிடம் பெற்றது.

"ரன்கள், விக்கெட்டுகள், வெற்றிகளைக் கடந்து, வீராங்கனைகளுக்கும் பார்வையாளர்களுக்கும் கிடைத்த மகிழ்ச்சியே நினைவிலிருக்கும். இந்த இருநாட்களில் ரோட்டேரியர்களாக இருப்பதைக் கொண்டாடினோம்" என்றார் ஏற்பாட்டுச் சங்கச் செயலாளர் ஷில்பா சோப்ரா.

போட்டியைத் தொடர்ந்து RC ராய்ப்பூர் காஸ்மோ திவாஸில் புதிய உறுப்பினரும் இணைந்தார்.■

# மூன்று நாட்களில் தலைமைத்துவம் கற்க முடியுமா?

கிரண் ஜெஹரா

மகாராஷ்டிராவின் அகோலாவில் நடைபெற்ற மூன்று நாள் ரோட்டரி இளைஞர் தலைமைத்துவ விருது (RYLA) முகாமின் முதல் சவால், தலைமைத்துவத்தைப் பற்றியதல்ல. மாணவர்கள் தங்களது செல்போன்களை ஒப்படைத்துவிட்டு, மற்ற பள்ளிகளிலிருந்து வந்த மாணவர்களுடன் ஒரே அறையில் தங்க வேண்டும் என்பதுதான் அந்த முதல் சவால்!

“தங்கள் சொந்தப் பள்ளி நண்பர்களுடனேயே பழகுவதற்குப் பழக்கப் பட்டிருந்த பதின்பருவத்தினருக்கு, முகாமின் இந்தத் தொடக்கம் முற்றிலும் புதிய அனுபவமாக இருந்தது. ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்புவரை படிக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்வேறு செயல்பாடுகளில் இணைந்து பணியாற்ற வேண்டியிருந்தது. ஆரம்பத்தில் நிறைய முணுமுணுப்புகள். ஆனால் மூன்றாம் நாள் முடிவில், இன்னும் சில நாட்கள் முகாமை நீட்டிக்கக்கூடாதா என்று அவர்களே கேட்டார்கள்” என்கிறார் RID 3030, RC அகோலா மிட்டவுன் உறுப்பினரும் RYLA ஒருங்கிணைப்பாளருமான மோஹித் அகர்வால்.

அடுப்பு ஏற்றாமல் உணவு தயாரிக்கும் ‘மாஸ்டர்செஃப்’ போட்டியில் மாணவர்கள் பங்கேற்றனர். கற்பனையாக உருவாக்கிய பொருள்களை விற்பனை செய்வதற்கான அறிமுகங்களையும் முன்வைத்தனர். மேடையில் நிகழ்ச்சிகளை வழங்கியதுடன், மற்ற மாணவர்களோடு பல்வேறு செயல்பாடுகளிலும் இணைந்துகொண்டனர். தலைமைத்துவம், தகவல் பரிமாற்றம், குழுப்பணி, யோகா, மேடையில் தன்னம்பிக்கையுடன் செயல்படுதல் குறித்த அமர்வுகளும் இடம்பெற்றன. பல்வேறு சவால்களைக் குழுவாகச் சந்தித்தனர்.

மூன்றே நாட்களில் மாணவர்களின் ஆளுமையில் முழுமையான மாற்றம் ஏற்பட்டுவிட்டது என்று கூறுவதற்கு அகர்வால் தயங்குகிறார். முகாமின் நோக்கத்தை அவர் வேறுவிதமாக விளக்குகிறார். “மூன்று நாட்கள் நிச்சயம் போதாது. 72 மணிநேரத்தில் பதின்பருவத்தினரை முழுமையான தலைவர்களாக்க நாங்கள் முயலவில்லை. மாணவர்கள் பங்கேற்கவும், ஒருவருக்கொருவர் செவிசாய்க்கவும், குழுவாகச் செயல்படவும், பிரச்னைகளைத் தீர்க்கும் பொறுப்பை ஏற்கவும் உதவும் செயல்பாடுகளை வடிவமைத்தோம்” என்கிறார். இதற்காக நிகழ்ச்சியில் விளக்கவுரைகள், காணொலிகள், நேரடிச் செயல்விளக்கங்கள், மாணவர்கள் பங்கேற்கும் மேடைச் செயல்பாடுகள் ஆகிய பல்வேறு முறைகள் ஒன்றிணைத்துப் பயன்படுத்தப்பட்டன.

அனைத்து அமர்வுகளையும் ஒருங்கிணைத்த கல்வியாளரும் நிறுவனப் பயிற்சியாளருமான ஷீத்தல் காந்திக்கு, “ஒரே இரவில் ஏற்படும் பிரம்மாண்ட மாற்றத்தைவிடச் சிறிய மாற்றங்களே முக்கியம்.” முகாமின் முதல் அமர்வில் சில மாணவர்கள் பேசுவதற்கே தயங்கினார்கள் என்பதை அவர் கவனித்தார். அடுத்த அமர்வு வந்தபோது, அவர்களில் சிலர் தாங்களாகவே பங்கேற்கத் தொடங்கியிருந்தனர்.

“நூறு மாணவர்கள் இணைவதால் உருவாகும் வாய்ப்புகளை நினைத்துப் பாருங்கள். பயிற்சியாளர்களிடமிருந்து தகவல்களை மட்டும் அவர்கள் பெறவில்லை. வெவ்வேறு



*தீயில்லாச் சமையல் மாஸ்டர்செஃப் போட்டியில் பங்கேற்கும் மாணவர்கள்.*




*ரோட்டேரியர்கள் மற்றும் RYLA பங்கேற்பாளர்களுடன் RYLA கிங் ரிஷோன், RYLA குயின் கியாதி.*

கருத்துகள், அனுபவங்கள், பிரச்னைகளை அணுகும் முறைகள் கொண்ட ஏராளமான சக மாணவர்களுடன் உரையாடினார்கள்,” என்றார் ஷீத்தல்.

அப்படியானால், மூன்று நாட்கள் மட்டுமே நடைபெறும் RYLA முகாமின் தாக்கம் எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும் என்ற கேள்வியை அவரிடம் முன்வைத்தேன். “வீடு திரும்பிய பிறகு என்ன நடக்கிறது என்பதில்தான் பதில் உள்ளது. முகாமைத் தனித்த அனுபவமாகப் பார்க்கக்கூடாது. இந்த நூறு மாணவர்களையும் இன்டராக்ட் அல்லது ரோட்டராக்டில் இணைத்து, தொடர்ந்து தலைமைத்துவ நிகழ்ச்சிகளில் பங்கேற்கச் செய்தால், பள்ளியிலிருந்து கிடைத்த ஒரு சிறிய இடைவேளையைத் தாண்டிய அனுபவமாக இது அமையும்.

“முகாமில் மாணவர்களிடையே புதிய நட்புகள் உருவாகியுள்ளன. தங்கள் கருத்துகளைத் துணிந்து பேசும் தன்னம்பிக்கையும், அறிமுகமில்லாதவர்களுடன் இணைந்து செயல்படும் அனுபவமும் கிடைத்துள்ளன. இவற்றை முகாமிற்குப் பிறகும் தொடர்ந்து பயிற்சி செய்வதற்கான ஒரு தளத்தை அவர்களுக்கு வழங்கினால், அந்தத் திறன்களும் அனுபவங்களும் நீடிப்பதற்கான வாய்ப்பு அதிகரிக்கும்.”

பள்ளிகளில் தலைமைப் பொறுப்புகளை ஏற்கும் வாய்ப்பு ஒரு சில மாணவர்களுக்கு மட்டுமே கிடைக்கக்கூடும். ஆனால் RYLA முகாமில் பங்கேற்கும் ஒவ்வொரு மாணவருக்கும் ஒரு செயல்பாட்டை முன்னின்று வழிநடத்தும் வாய்ப்பு கிடைக்கிறது என்று அகர்வால் சுட்டிக்காட்டுகிறார்.

இந்த முகாம் ஆங்கிலவழிப் பள்ளி மாணவர்களுக்காகக் கட்டணத்துடன் நடத்தப்பட்டது. அடுத்து அக்டோபர் மாதத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள RYLA நிகழ்ச்சியிலோ, கிராமப்புறங்களிலிருந்து வரும் மாணவர்களுக்கும் குறைந்த வருமானமுள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும்.

ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் பயின்ற IAS அதிகாரியும் தலைமைத்துவப் பயிற்சியாளருமான ஹர்ஷ் பொத்தார் அமர்வுகளை நடத்தினார். ஹேபில்ட் நிறுவனர் சௌரப் போத்ரா தியானப் பயிற்சி அளித்தார்.

முகாமில் RYLA கிங் பட்டத்தை ரிஷோனும், RYLA குயின் பட்டத்தைக் கியாதியும் வென்றனர். அவர்களே தங்களது சொந்தப் பாட்காஸ்ட் நிகழ்ச்சியை நடத்துவதற்கான வாய்ப்பையும் முகாம் ஏற்பாட்டாளர்கள் வழங்கினர்.

“எங்கள் உரையாடலில் தலைமைத்துவம் குறித்தும், அதை இளைஞர்கள் எவ்வாறு பார்க்கிறார்கள் என்பது குறித்தும் விவாதித்தோம். ஒரே ஒருவரின் சாதனை என்பதாகக் கருதாமல், ஒரு குழுவில் உள்ள அனைவரும் இணைந்து மேற்கொள்ளும் கூட்டு முயற்சியின் விளைவாகவே தலைமைத்துவத்தை இளைஞர்கள் அதிகளவில் பார்க்கத் தொடங்கியிருக்கிறார்கள்” என்கிறார் 15 வயது கியாதி.■




*விளையாட்டில் ஈடுபட்டுள்ள மாணவர்கள்.*



Rotary PEOPLE OF ACTION

# சிறப்புக் குழந்தைகளுக்கான ரோட்டரி ஒலிம்பியாட்

**V முத்துக்குமரன்**

RI மாவட்டம் 3233 நடத்திய ரோட்டரி ஒலிம்பியாட் தடகளப் போட்டியில், சிறப்புத் தேவையுள்ள 1,000க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு அந்த ஞாயிற்றுக்கிழமை மகிழ்ச்சியாகக் கழிந்தது.

"இந்த ஒலிம்பியாடில் ஒவ்வொரு குழந்தையும் வெற்றியாளர்தான்" என்றார் மாவட்ட இளைஞர் சேவை இயக்குநர் வினோத் நாயர். உடல் வரம்புகளைத் தாண்டி, முழு ஆற்றலுடனும் உற்சாகத்துடனும் இலக்கை நோக்கிக் குழந்தைகள் ஓடினர். நூற்றுக்கணக்கான ரோட்டரி தன்னார்வலர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஓடுதளத்தின் ஓரங்களிலிருந்து அவர்களை உற்சாகப்படுத்தினர். அனைவருக்கும் பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. தனிநபர்களாக 240 வீரர்கள் பங்கேற்றனர். மற்றவர்கள் சென்னையிலுள்ள சிறப்புக் குழந்தைகளுக்கான பள்ளிகள், இல்லங்கள், NGO-க்கள் மற்றும் நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள்.

தொடக்க விழாவில் தமிழக சுகாதார அமைச்சர் K G அருண்ராஜ் பேசுகையில், "சிறப்புத் தேவையுள்ளவர்கள் இயல்பான வாழ்க்கை வாழ்வதற்கான சூழலையும் வசதிகளையும் சமூகம் ஏற்படுத்தவேண்டும். ரோட்டரி ஒலிம்பியாட் போன்ற போட்டிகள் குழந்தைகளின் கனவுகளை நிறைவேற்ற உதவும்" என்றார்.

தங்களைப் புறக்கணித்த பெற்றோரிடம் கூட அக்கறை காட்டும் சிறப்புக் குழந்தைகளின் உயர்ந்த பண்பை விளக்க, தீபக்கின் வாழ்க்கையை எடுத்துரைத்தார். மாற்றுத்திறனாளி என்பதை அறிந்த பெற்றோர், இரண்டு வயது தீபக்கை ஹரியானாவிலுள்ள சிறப்பு இல்லத்தில் விட்டுச்சென்றனர். பல ஆண்டுகளுக்குப் பிறகு, அமெரிக்க ஹேண்ட்பால் அணியில் இடம்பெற்ற தீபக், லாஸ் ஏஞ்சல்ஸில் பெரிய போட்டியில் வென்று கணிசமான பரிசுத்தொகையைப் பெற்றார். தனது பெற்றோரைப் பற்றி அறிந்ததும், இந்தியாவில் சிகிச்சை பெற்றுவந்த வயதான தந்தையின் மருத்துவச் செலவுகளை ஏற்றார்.

ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒருங்கிணைந்த சேவை மையத்

தையும், மாவட்டத்தலைமையகங்களில் ஆரம்பகால இடையீட்டு மையங்களையும் அமைக்க அரசு திட்டமிட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார். குழந்தைகளின் மாற்றுத்திறனை ஆரம்பத்திலேயே கண்டறிந்து, சிகிச்சை, ஆலோசனை, பயிற்சி உள்ளிட்ட உதவிகளை வழங்குவதே நோக்கம். வாழ்க்கையின் தொடக்கத்திலேயே சமூகத்தின் பொதுவாழ்வில் அவர்கள் இணைவதற்கு இம்மையங்கள் துணைபுரியும்.

"ஒவ்வொரு சிறப்புக் குழந்தைக்கும் திறமை இருக்கிறது. அனைவரையும் உள்ளடக்கிய சமூகம் உருவாக, அவர்களைப் பற்றிய நமது பார்வை மாறவேண்டும்" என்றார். திட்டத் தலைவராக கார்த்திக் கிருஷ்ணன் பணியாற்றினார்.


குழந்தைக்கு உதவும் தன்னார்வலர்கள்.

இதே இடத்தில் கடந்தாண்டு நடைபெற்ற 'யுனைடெட் சென்னை' நிகழ்ச்சியில் 150–200 சிறப்புக் குழந்தைகள் பங்கேற்றதாக DG ஸ்ரீராம் துவ்வூரி தெரிவித்தார். "அந்த நிகழ்ச்சியே இந்த ஒலிம்பியாடை நடத்த ஊக்கமளித்தது." வரும் மாதங்களில் இக்குழந்தைகளை ஊக்குவிக்க மாவட்டச் சங்கங்கள் பிற கலைநிகழ்ச்சிகளையும் நடத்தவுள்ளன.

மாரடைப்பு நோயாளிகளுக்கு அவசர உதவியளிக்க, 64 ஆம்புலன்ஸ்களில் தானியங்கி வெளிப்புற இதய மின்னதிர்ச்சி சாதனங்களை (AED) மாவட்டச் சங்கங்கள் விரைவில் பொருத்தவுள்ளதாகவும் கூறினார்.

## ஒன்றிணைந்த முயற்சி

RID 3233-ன் 90 சங்கங்களும் நிகழ்ச்சிக்குப் பங்களித்தன. உறுப்பினர்கள் தன்னார்வலர்களாகப் பணியாற்றினர் அல்லது செலவின் ஒரு பகுதியை ஏற்றனர் என்று நாயர் தெரிவித்தார். "தேசிய அளவிலான விளையாட்டு வீரர்களாக விரும்பும் சிறப்புக் குழந்தைகளுக்குத் தேவையான வசதிகள் இருப்பதை உறுதிசெய்யவேண்டும். அதன் அவசியத்தை அரசு அதிகாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் இந்நிகழ்ச்சி உணர்த்தும்" என்று ரோட்டரி நியூஸிடம் கூறினார்.



சிறப்புக் குழந்தையுடன் உரையாடும் தமிழக சுகாதார அமைச்சர் K G அருண்ராஜ். அவரது வலப்புறம் RID 3233 DG ஸ்ரீராம் துவ்வூரி; இடப்புறம் மாவட்ட இளைஞர் சேவை இயக்குநர் வினோத் நாயர் (பின்னால்), நிகழ்ச்சித் தலைவர் கார்த்திக் கிருஷ்ணன், இம்தியாஸ் பாஷா (வலது).

மேற்கத்திய நாடுகளில் சிறப்புக் குழந்தைகள் தங்களது முழுத் திறனையும் வெளிப்படுத்த, வாழ்நாள் முழுவதும் அவர்களின் தேவைகளையும் அன்றாடச் சவால்களையும் அரசுகள் கவனித்துக் கொள்வதாகக் குறிப்பிட்டார். "நமது நாட்டிலும் இக்குழந்தைகளுக்காக அத்தகைய ஆதரவுச் சூழலை உருவாக்கவேண்டும்" என்றார்.

2025 தேசிய சிறப்பு ஒலிம்பிக்ஸ் பேட்மிண்டனில் தங்கம் வென்ற V ஸ்ரீனிவாசன் (17), வெண்கலம் வென்ற A சந்தியா (18) ஆகியோருக்குப் பாராட்டுப் பத்திரங்கள் வழங்கப் பட்டன.

பெருமூளை வாதம், ஆட்டிசம் பாதிப்புகளுடன் வணிக வங்கியில் உதவி மேலாளராகப் பணியாற்றும் குருபிரசாத் சுவாமி, வாழ்க்கையில் சாதித்ததற்காகக் கௌரவிக்கப்பட்டார். அறிவுத்திறன் குறைபாட்டால் ஏற்பட்ட சவால்களை எதிர்கொண்டு, தனது சிறப்புக் குழந்தையை வங்கி அதிகாரியாக உயர்த்திய தாய் S பாமாவிற்கும் பாராட்டுப் பத்திரம் வழங்கப்பட்டது.■

# மாநாட்டைக் கடந்து மலர்ந்த சேவை நட்பு

**கிரண் ஜெஹரா**

2026 தைபே மாநாட்டில், RC டெல்லி சவுத் ஈஸ்ட், RID 3011 உறுப்பினர் நீரஜ் பட்நாகர் அமைத்திருந்த 635-ம் எண் அரங்கில் பல அம்சங்கள் மா யுனின் கவனத்தை ஈர்த்தன. நான்காண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட RC தைபே ட்வின் ஸ்டார், RID 3482 சங்கத்தின் வருங்காலத் தலைவரான அவர், தன்னை "ரோட்டரிக்குப் புதியவர்" என்று அறிமுகப்படுத்திக்கொள்கிறார். டெல்லி சங்கத்தின் சுற்றுச்சூழல் முயற்சிகளும் சமூகத் திட்டங்களும், குறிப்பாக *rotariansforautism.com* முயற்சியும் அவருக்கு ஆர்வமூட்டின.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, டெல்லியில் ஆட்டிசம் பற்றிய விழிப்புணர்வு அமர்வுகளையும் கருத்தரங்குகளையும் நடத்துமாறு RC மெட்ராஸ், RID 3234 விடுத்த வேண்டுகோளிலிருந்து இந்த முயற்சி உருவானது. பின்னர் சென்னை, இலங்கை, ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஐந்து ரோட்டரி சங்கங்களை இணைக்கும் தளமாக அதை பட்நாகர் விரிவுபடுத்தினார். இன்று ஆட்டிசம், மனநலம், அனைவரையும் உள்ளடக்குதல் ஆகியவற்றுக்கான ரோட்டரி வழிநடத்தும் AI தொழில் நுட்பச் சூழலாக அது வளர்ந்துள்ளது.

இந்த முயற்சியை மேலும் பல ரோட்டேரியர்களிடம் எடுத்துச்செல்லும் வாய்ப்பாக தைபே மாநாட்டை அவர் பார்த்தார். "எங்கள் சங்கம் என்ன செய்கிறது என்பதை மற்றவர்கள் அறியவேண்டும்; அதில் தாங்களும் எப்படிப் பங்கேற்கலாம் என்று பார்க்கவேண்டும் என்பதே விருப்பம்" என்கிறார்.

2023-ல் ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் RI மாநாட்டில், சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கான ரோட்டரி செயற்குழுவான ESRAG தன்னார்வலராகப் பங்கேற்றார். அடுத்த ஆண்டு சிங்கப்பூர் மாநாட்டில் ரூ.5 லட்சம் செலவில் இரண்டு அரங்குகளை அமைத்தார்.

ஒன்றில் *onemillionmindfulac-tions.com* இடம்பெற்றது. "வீட்டுச் செடிகளுக்கு நீரூற்றுவது போன்ற எளிய செயலாக இருந்தாலும்கூட, சுற்றுச்சூழலுக்கான சிறு நடவடிக் கைகளை மேற்கொண்டு, அவற்றைப் புகைப்படத்துடன் பதிவுசெய்ய மாநாட்டுப் பங்கேற்பாளர்களை ஊக்குவித்தோம்."

மற்றொன்று எரிசக்தி ஆலோசனைக்கான அரங்கு. அவரது சங்க உறுப்பினர் அஜய் குப்தா உருவாக்கிய, திடக்கழிவுகளை மின் உற்பத்தி நிலையங்களில் பயன்படுத்தக்கூடிய பசுமை நிலக்கரியாக மாற்றும் தொழில்நுட்பம் அதில் காட்சிப்படுத்தப்பட்டது.

தைபே மாநாட்டில் 'கிளைமேட் பிலாங்ஸ் டு ஆல்' குறித்த சிறப்பு



*புதிதாக நிறுவப்பட்ட குடிநீர்க் குளிர்விப்பானிலிருந்து தங்கள் பாட்டில்களில் நீர் நிரப்பும் மாணவர்கள்.*

அமர்வையும் நடத்தினார். *www.climatebelongstoall.com; http://www.climatebelongstoall.com*, என்பது 54 ரோட்டரி மாவட்டங்களின் ஆதரவுடன், பருவநிலை நடவடிக்கைகளில் சங்கங்களையும் உறுப்பினர்களையும் ஒன்றிணைக்கும் உலகளாவிய ரோட்டரி தளம். உலகின் பல பகுதிகளைச் சேர்ந்த எட்டுப் பேச்சாளர்கள் கலந்துகொண்ட அந்த அமர்வில் 400 ரோட்டேரியர்கள் பங்கேற்றனர்.

மாநாட்டு உரையாடல்கள் ஆண்டுகளுக்கேற்ப மாறிவருவதையும் கவனித்தார். "மக்கள் திட்டங்களை வெறுமனே பார்வையிடவில்லை; அவற்றைப் பற்றி விவாதித்து, தாங்களும் எப்படிப் பங்கேற்கலாம் என்று கேட்டார்கள்."

அப்படித்தான் மா யுனும் பல்வேறு ரோட்டரி முயற்சிகளில் இணைவதற்கான வழிகளை அறிய விரும்பினார். திட்டங்கள், சங்கத்தின் செயல்பாடுகள், வெவ்வேறு நாடுகளின் ரோட்டேரியர்கள் இணைந்து பணியாற்றும் வாய்ப்புகள் குறித்து பட்நாகரிடம் கேட்டறிந்தார்.

"ஐந்து மாநாடுகளில் பங்கேற்ற அனுபவமும் 14 ரோட்டரி செயற் குழுக்களில் உறுப்பினராக இருக்கும் அனுபவமும் நீரஜுக்கு உண்டு. ரோட்டரி பற்றிய அவரது அறிவு வியப்பளிக்கிறது" என்கிறார் மா யுன். மாநாட்டிற்குப் பிறகு *climatebelongstoall.com* தளத்திலும் மூன்று RAGs குழுக்களிலும் இணைந்தார்.

மாநாடு முடிந்து பட்நாகர் புறப்படத் தயாரானபோது, பிரதான வாயில்வரை மா யுன் உடன் வந்து வழியனுப்பினார். "மாநாட்டில் நூற்றுக்கணக்கானவர்கள் சந்திப்பார்கள். ஆனால் வாயில்வரை வந்து வழியனுப்புபவர்கள் சிலரே. அந்தச் செயலில் உண்மையான அன்பு இருந்தது" என்கிறார் பட்நாகர்.

**நட்பிலிருந்து கூட்டணிக்கு**

ஜூலையில், ஃபரீதாபாத் PM ஸ்ரீ கேந்திரிய வித்யாலயா முதல்வர் மம்தா சேகர், இரண்டு குடிநீர்க் குளிர் விப்பான்கள் கோரி RC டெல்லி சவுத் ஈஸ்டை அணுகினார். 1,100-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிலும் பள்ளியில் தூய குடிநீர் பெறுவதில்



*மா யுனுடன் நீரஜ் பட்நாகர்.*

சிரமம் இருந்தது. ஏற்கெனவே நீர்ப் பாதுகாப்புத் திட்டத்தில் பள்ளியுடன் இணைந்து செயல்பட்டிருந்த சங்கம், மருத்துவ அறை அமைக்கவும் உதவியிருந்தது.

இந்த முறை, மா யுனுடனான புதிய நட்பைத் திட்டத்தில் இணைக்கும் வாய்ப்பை பட்நாகர் கண்டார். தைபேக்குப் பிறகும் இருவரும் ரோட்டரி முயற்சிகள் குறித்து உரையாடிவந்தனர். அந்த உரையாடல்களைச் செயல்பாடாக மாற்ற பள்ளித் திட்டம் எளிய வாய்ப்பளித்தது.

"குடிநீர்க் குளிர்விப்பான் திட்டம் எப்படியும் நிறைவேறும் என்பது தெரியும். அதை ஏன் சர்வதேசக் கூட்டணியாக மாற்றக்கூடாது என்று நினைத்தேன்" என்கிறார். திட்டத்திற்கான துண்டுப்பிரசுரத்தைத் தயாரித்து, RC தைபே ட்வின் ஸ்டாரின் பெயரையும் சேர்க்கலாம் எனப் பரிந்துரைத்தார்.

இது உலகளாவிய மானியத் திட்டமல்ல. தைபே சங்கத்திடம் நிதிப் பங்களிப்பும் கோரப்படவில்லை. இரண்டு குளிர்விப்பான்களை நிறுவுவதற்கான ரூ.1.5 லட்சம் செலவு முழுவதையும் RC டெல்லி சவுத் ஈஸ்ட் ஏற்றது.

"நாங்கள் செலவைப் பகிரவில்லை; திட்டத்தைப் பகிர்ந்துகொண்டோம். யார் எவ்வளவு பணம் தருகிறார்கள் என்பதல்ல கூட்டணி. ஒரு திட்டத்தை நம்முடையதாக இணைந்து உணரச்செய்வதே முக்கியம்" என்கிறார்.

தலா மணிக்கு 150 லிட்டர் திறனுள்ள இரண்டு குடிநீர்க் குளிர் விப்பான்கள் நிறுவப்பட்டன. மாணவர்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள் பயன்படுத்த நான்கு குழாய்கள் கிடைத்தன. நிதிப்பரிமாற்ற மின்றியே சர்வதேசக் கூட்டணியும் உருவானது.

நட்பின் வெளிப்பாடாகவே ஓர் இந்திய ரோட்டரி சங்கம் வெளிநாட்டுச் சங்கத்தைச் சேவைத் திட்டத்தில் இணைக்க முடியும் என்பதை பட்நாகர் காட்ட விரும்பினார். சர்வதேசக் கூட்டணிகளில் அனைவரையும் அரவணைக்கும் அணுகுமுறையை ஊக்குவிக்கவும், இந்தியச் சங்கங்களின் அடையாளத்தை வலுப்படுத்தவும் இது உதவும் என்பது அவரது நம்பிக்கை.

"இதேபோன்ற நட்புச் செயலைத் தானும் மேற்கொள்வதாக மா யுன் உறுதியளித்துள்ளார். இப்போது 1,100 மாணவர்களுக்குத் தூய குடிநீர் கிடைக்கிறது; இரு சங்கங்களுக்கும் சர்வதேசக் கூட்டணி கிடைத்துள்ளது. நிதிப் பரிவர்த்தனையால் அல்லாமல், மாநாட்டிற்குப் பிறகும் தொடர்ந்த நட்பால் உருவான கூட்டணி இது."■

# விவசாயிகளுக்கு வழிகாட்டிய ரோட்டரி மாநாடு

ரோட்டரி நியூஸ் குழு

RID 3191-ன் ரோட்டரி இன்டர்சிட்டி சினர்ஜி எக்ஸ்சேஞ்ச் முயற்சியாக, ரோட்டரி பெங்களூரு மல்ஹார் சங்கம் 'ரோட்டரி ரைத்தர சம்மேளன' வேளாண் மாநாட்டை நடத்தியது. கர்நாடகம் முழுவதிலுமிருந்து சுமார் 600 விவசாயிகள் பங்கேற்று, வேளாண் விஞ்ஞானிகள், தொழில்முனைவோர், கண்டுபிடிப்பாளர்கள், புத்தாக்க நிறுவனங்கள், மேம்பாட்டுப் பணியாளர்களுடன் கலந்துரையாடினர்.

அப்போதைய DG B R ஸ்ரீதர் தொடங்கிவைத்த மாநாடு, அறிவுப் பகிர்வு, நிலையான வேளாண்மை, தொழில்நுட்பங்கள், கிராமப்புறத் தொழில்முனைவு வாய்ப்புகளில் கவனம் செலுத்தியது. பயிர்க் கண்காணிப்பு, துல்லியத் தெளிப்பு, ஊட்டச்சத்து மேலாண்மை, பண்ணைச் செயல்பாடுகளில் ட்ரோன்களின் பயன்பாடு நேரடியாகச் செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

இயற்கை விவசாயம், நுண்கீரை வளர்ப்பு, காளான் சாகுபடி, தேனீ வளர்ப்பு, மண்வளம், வேளாண் தொழில்முனைவு, கிராமப்புறப் புத்தாக்க நிறுவனங்கள், வேளாண்மையில் AI ஆகியவை விவாதிக்கப்பட்டன.

"உற்பத்தியை அதிகரித்து, செலவைக் குறைத்து, விவசாயத்தை நிலையானதாக்கும் தொழில் நுட்பங்களையும் களம்சார்ந்த நடைமுறைகளையும் விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தினோம்" என்றார் சங்கத்தலைவர் V J சஜீவ்.

ரசாயன உரங்கள், வெளிப்புற இடுபொருள்களை அதிகமாகச் சார்ந்திருப்பதைக் குறைத்து, மண்வளம், பல்லுயிர்ப் பெருக்கம், நீர்ப்பாதுகாப்பு, சுற்றுச்சூழலுக்கு உகந்த வேளாண்மையை ஊக்குவிக்க வலியுறுத்தினர். உலகப் பொருளாதார, புவிசார் அரசியல் மாற்றங்களால் விநியோகச் சங்கிலித் தடைகள், உரக் கிடைப்பில்



*RID 3191 IPDG B R ஸ்ரீதரின் மனைவி ரேகா.*



விவசாயிகளுடன் ட்ரோன் செயல்விளக்கத்தைப் பார்வையிடும் IPDG B R ஸ்ரீதர் (இடது), ரோட்டேரியர்கள். வலமிருந்து மூன்றாவது: RC பெங்களூரு மல்ஹார் தலைவர் V J சஜீவ்.

ஏற்றத்தாழ்வுகள், இடுபொருள் விலையேற்றம் ஏற்படுவதை விளக்கினர். உள்ளூர் வேளாண் அமைப்புகளையும் நிலையான நடைமுறைகளையும் வலுப்படுத்துவது வெளிப்புற நிச்சயமின்மைகளை எதிர்கொள்ள உதவும் என்றனர்.

கர்நாடக ராஜ்ய ரைத்த சங்கம், UAS முன்னாள் மாணவர் சங்கம், பெங்களூரு உப்கார், பெங்களூரு HSR, அத்திபெலே சார்ஜாபுரா, ராமநகரம், பெங்களூரு J P நகர், பெங்களூரு பாம்வில், பெங்களூரு ஸ்பந்தனா ரோட்டரி சங்கங்கள் ஆதரவளித்தன.■

# HPV விழிப்புணர்வுக்குச் சிங்கப்பெண் மாரத்தான்

ரோட்டரி நியூஸ் குழு

*மாரத்தானைத் தொடங்கிவைக்கும் சிங்கப்பெண் சிறப்புப்படைத்தலைவர் பவானீஸ்வரி உடன் DG D சுரேஷ் ஜெயின், PDG வினோத் சரோகி, நல்லம்மை, Rtr மீனாட்சி பெரியகருப்பன், PDG அபிராமி ராமநாதன், RC மெட்ராஸ் T நகர் முன்னாள் தலைவர் மீனாட்சி பெரியகருப்பன்.*




சென்னையில் 3,000க்கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்ற சிங்கப்பெண் மாரத்தான், கர்ப்பப்பைவாய்ப் புற்றுநோய்த் தடுப்பையும் பெண்கள் பாதுகாப்பையும் வலியுறுத்தியது. நல்லம்மை ராமநாதன் முன்னெடுப்பில் RC மெட்ராஸ் சென்ட்ரல், RID 3234, இன்னர்வீல் சங்கங்கள், தமிழக சிங்கப்பெண் சிறப்புப்படை இணைந்து நடத்தின.

IG K பவானீஸ்வரி 1091 உதவி எண்ணையும், PDG SVRM அபிராமி ராமநாதன் HPV தடுப்பூசியையும் வலியுறுத்தினர்.■

# ரோட்டரி ஆளுநர்களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்

## வடகிழக்கில் வலுப்பெறும் ரோட்டரி

“எட்டு வடகிழக்கு மாநிலங்களிலும் மேற்கு வங்கத்தின் வடக்குப் பகுதிகளிலும் உறுப்பினர் வளர்ச்சிக்கும் சமூகச் சேவைக்கும் ஏராளமான வாய்ப்புகள் இருப்பதை மருத்துவராகக் காண்கிறேன்” என்கிறார் Dr அசிம் அதிகாரி.

RI இயக்குநர் M முருகானந்தத்துடன் ஆலோசித்த பின்னர், வளர்ச்சி உத்திகளை வகுக்க ‘குரூப்-5’ அமைக்கப் பட்டது. இதில் அதிகாரி, IPDG காமேஸ்வர் எலாங்பாம், DGE டேனி தத்தா, DGN பல்லவி மாஜி, DGND ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். ஜூலை 1 நிலவரப்படி 97 சங்கங்களில் 3,600 உறுப்பினர்கள் இருந்தனர். பத்து சதவீத நிகர உறுப்பினர் வளர்ச்சியையும் பத்து புதிய சங்கங்களையும் இலக்காகக் கொண்டுள்ளார் அதிகாரி.

“50 சதவீதச் சங்கங்கள் ஆம்பர் பிரிவிலும், 35 சதவீதம் சிவப்புப் பிரிவிலும், 15 சதவீதம் பச்சைப் பிரிவிலும் உள்ளன.” ஆம்பர் பிரிவில் 26–50 உறுப்பினர்களும், சிவப்புப் பிரிவில் 25 அல்லது அதற்குக் குறை வானவர்களும் உள்ளனர். அடுத்த மூன்றாண்டுகளில் ஆம்பர் சங்கங்களில் 40 சதவீதத்தைப் பச்சைப் பிரிவிற்கும், அனைத்து சிவப்புச் சங்கங்களையும் ஆம்பர் பிரிவிற்கும் உயர்த்தத் திட்டமிட்டுள்ளார்.

சங்க அரங்குகளிலும் கிராம மையங்களிலும் குறைந்தது 12 ஆட்டிசம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, சிறப்புக் குழந்தைகளின் 1,000க்கும் மேற்பட்ட பெற்றோருக்கு ஆலோசனையும் பல்துறை நிபுணர்களின் உதவியும் வழங்கப்படும். ரூ.1.5 லட்சம் திட்டத்திற்கு மாவட்ட மானியமும் ரோட்டரி மாவட்டம் 3240 அறக்கட்டளையும் நிதியளிக்கின்றன.

மருத்துவமனைகளுடன் இணைந்து, 5,000 பள்ளி, கல்லூரி மாணவிகளுக்கு HPV தடுப்பூசி வழங்கப்படும். ஆண்டுதோறும் செய்வதுபோல் ஒரு லட்சத்திற்கும் அதிகமான மரக்கன்றுகளையும் சங்கங்கள் நடும். 1999-ல் ரோட்டரியில் சேர்ந்த அதிகாரியின் TRF இலக்கு 4,00,000 டாலர்.



**அசிம் காந்தி அதிகாரி**
மகப்பேறு மருத்துவர்
RC போல்பூர்-சாந்திநிகேதன்
RID 3240

## உடல் நலத் திட்டங்களில் கவனம்



**ஜோஷி சாக்கோ**
இயந்திரப் பொறியாளர்
RC பெரும்பாவூர் சென்ட்ரல்
RID 3205

பதவியேற்பின் போதே RI கவனத்துறைகளில் ரூ.8 கோடி மதிப்புள்ள பத்து உலகளாவிய மானியத் திட்டங்களைத் தொடங்கியுள்ளார் ஜோஷி சாக்கோ. அடுத்த ஜூனுக்குள் நிகரமாக 350 உறுப்பினர்களை அதிகரித்து, எண்ணிக்கையை 4,100 ஆக்க விரும்புகிறார். “இந்தாண்டு 10–15 புதிய சங்கங்களை உருவாக்கி, பதவிக்கால முடிவில் 120 சங்கங்களாக உயர்த்துவேன்” என்கிறார்.

ரூ.2.2 கோடி CSR நிதியிலான ‘சூர்யா’ திட்டத்தில் பார்வைத்திறன் குறைபாடுள்ளவர்களுக்கு 600 ஸ்மார்ட் கைத்தடிகள், 600 ஸ்மார்ட் கண்ணாடிகள் வழங்கப்படுவதுடன், 2,000 இளைஞர்களுக்குக் கணினிப் பயிற்சியும் அளிக்கப்படும்.

‘ஐ ப்ளீட்’ திட்டத்தில், 36,000 டாலர் உலகளாவிய மானியத்துடன் கொச்சி அரசு மருத்துவமனையில் முழுத் தானியங்கி CLIA பரிசோதனை அமைப்பு நிறுவப்படும். அதிக மாதவிடாய் ரத்தப்போக்கைத் தடுக்க, ஆரம்பகால நோயறிதலுக்கு உதவும் இவ்வசதியால் ஆண்டுக்கு 3,000 பெண்கள் பயனடைவர்.

கொச்சியருகேயுள்ள பெரும்பளம் தீவின் அரசு மருத்துவமனையில் ரூ.1.25 கோடி உலகளாவிய மானியத்தில் டிஜிட்டல் மம்மோகிராபி மற்றும் இரண்டு டயாலிசிஸ் இயந்திரங்கள் நிறுவப்படும். ஆண்டுக்கு 9,500 நோயாளிகள் பயனடைவர்.

முளந்துருத்தி A P வர்க்கி மிஷன் மருத்துவமனையில் 62,000 டாலர் மானியத்துடன் நவீன டிஜிட்டல் எக்ஸ்ரே இயந்திரம் நிறுவப்படும். ஆண்டுக்கு 4,500 பேருக்குக் குறைந்த கதிர்வீச்சில் பரிசோதனை கிடைக்கும். TRF இலக்கு ஒரு மில்லியன் டாலர்.

2008-ல் ரோட்டரியில் சேர்ந்த சாக்கோ, சிறிய மருத்துவ முகாம்களை நடத்தியதில் தொடங்கி, 2012–13-ல் AG-யானார். தொடர்ந்து ஆறாண்டுகள் மாவட்ட TRF துணைத்தலைவராக இருந்து பல மானியத் திட்டங்களுக்கு உதவினார். “பிறருக்குச் சேவை செய்வதன் மகிழ்ச்சியே எனது ஊக்கம்” என்கிறார்.

# மிகப்பெரிய மாவட்டத்தின் பெரிய இலக்குகள்

“உறுப்பினர் எண்ணிக்கையில் உலகின் மிகப்பெரிய RI மாவட்டம் நாங்கள். எட்டு வருவாய் மாவட்டங்களிலும் கிராமப்புற மக்கள் அதிகம் இருப்பதால், அவர்களின் தேவைகளைக் கருத்தில்கொண்டு திட்டமிடுவது சவால்” என்கிறார் R சுப்ரமணி.

அடுத்த ஜூனுக்குள் 50 புதிய சங்கங்களையும் 2,500 உறுப்பினர்களையும் சேர்த்து, சங்கங்களைச் சுமார் 240 ஆகவும் உறுப்பினர்களைக் கிட்டத்தட்ட 10,000 ஆகவும் உயர்த்த விரும்புகிறார். ஆகஸ்டிலேயே 41 சங்கங்கள் உருவாக்கப்பட்டு, 1,500 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த நான்காண்டுகளாகத் தொடரும் திட்டங்களில், பள்ளிகளில் ஆண்-பெண் தனித்தனி வசதிகளுடன் 50 கழிப்பறைத் தொகுதிகள் அமைக்க ரூ.3.5 கோடியும், கிராமங்களில் பத்து பொதுக் கழிப்பறைகளுக்கு ரூ.1.5 கோடியும் உலகளாவிய மானியங்கள் பயன்படுத்தப்படும்.

மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான 100 சிறப்புப் பள்ளிகளில் ரூ.1.6 கோடி உலகளாவிய மானியத்தில் ஸ்மார்ட் வகுப்பறைகள் அமைக்கப்படும். ரூ.2.5 கோடி CSR நிதியில் 2.5 லட்சத்திற்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நட்டு, ஐந்து அல்லது ஆறு மியாவாக்கி காடுகள் உருவாக்கப்படும். TRF இலக்கு இரண்டு மில்லியன் டாலர்.

2011-ல் ரோட்டரியில் சேர்ந்த இவர், ரோட்டரி நியூஸ் டிரஸ்டின் செயற்குழுச் செயலாளர். “தாக்கமுள்ள ஒவ்வொரு திட்டத்தின் வெற்றியும் இன்னும் பெரிய திட்டங்களைச் செய்ய ஊக்குவிக்கிறது” என்கிறார்.



**R சுப்ரமணி**
விடுதித் தொழிலதிபர்
RC திருச்சிராப்பள்ளி டயமண்ட் சிட்டி, RID 3000



**அனு நரங்**
உணவகத் தொழிலதிபர்
RC தன்பாத், RID 3250

# பத்து ஏகல் வித்யாலயாக்கள் தத்தெடுப்பு

2002-ல் ரோட்டரியில் சேர்ந்த அனு நரங்கிற்கு அது விரிவான குடும்பம் போன்றது. மாவட்டம், நாடு, உலகளவில் கிடைக்கும் நட்புறவே தொடர்ந்து சேவையாற்ற ஊக்கமளிக்கிறது.

ஜூலை 1-ல் 120 சங்கங்களும் 4,500 உறுப்பினர்களும் இருந்தன. பத்து புதிய சங்கங்கள் மூலம் பத்து சதவீத நிகர உறுப்பினர் வளர்ச்சியை இலக்காகக் கொண்டுள்ளார். மேலும் 25 ரோட்டராக்ட் சங்கங்கள், சுமார் 650 ரோட்டராக்டர்கள், பள்ளிகளில் 100 இன்டராக்ட் சங்கங்களும் அவரது திட்டங்களில் உள்ளன.

பாட்னா அறக்கட்டளை மருத்துவமனையில் 45,000 டாலர் மானியத்தில் தாய்ப்பால் வங்கி உருவாகிறது. அரசு அல்லது அறக்கட்டளை மருத்துவமனைகளில் தலா 40,000 டாலர் மானியத்தில் நான்கு டயாலிசிஸ் மையங்கள் அமைக்கப்படும்.

உறுப்பினர் நிதியில் ரூ.5 லட்சத்தில் ரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள், வணிக வளாகங்களில் குறைந்தது பத்து பாலூட்டும் அறைகள் அமைக்கப்படும். சுமார் 100 சாலையோர வியாபாரிகளுக்கு, வணிகத்தை மேம்படுத்த தலா ரூ.20,000 மதிப்புள்ள தள்ளுவண்டிகள் வழங்கப்படும்.

ஒற்றை ஆசிரியருடன் இயங்கும் கிராமப்புற அடிப்படைப் பள்ளிகளான ஏகல் வித்யாலயாக்களில் குறைந்தது பத்தைச் சங்கங்கள் தத்தெடுக்கும். மாவட்ட மானியம், சங்க நன்கொடைகளிலிருந்து ரூ.3–4 லட்சத்தில் வகுப்பறைகள் மேம்படுத்தப்படும். TRF இலக்கு ஒரு மில்லியன் டாலர்.

“மண்டலங்களைக் கடந்த ரோட்டரி நண்பர்களின் தொடர்புகளே வசதியற்றவர்களை அணுகிச் சேவையாற்ற உதவுகின்றன” என்கிறார் அனு.■

# மாற்றுத்திறனாளிகளுக்கு நம்பிக்கை ஒளி

கிரண் ஜெஹரா

தன்பாத்தைச் சேர்ந்த 20 வயது மாணவி பிரீத்தி குமாரி, பிறவியிலேயே கால்கள் இல்லாதவர். ஆகஸ்ட் 2026 முதல் வாரத்தில் RC தன்பாத், RID 3250 நடத்திய முகாமில் செயற்கைக் கால்களைப் பெற்ற அவர், ஒருவாரத்தில் ரோட்டரி ஜெர்ரி பவெல் செயற்கை உறுப்பு மையத்திற்கு மீண்டும் வந்தார். மேலும் நம்பிக்கையுடன் நடக்கவேண்டும் என்பதே அவரது எதிர்பார்ப்பு. பொருத்துதல், மறுவாழ்வுப் பயிற்சிகளில் தொழில்நுட்ப வல்லுநர்கள் வழிகாட்டினர். "இப்போது சக்கர நாற்காலிக்குப் பதிலாக நடந்தே கல்லூரிக்குச் சென்று முதுகலைப் படிப்பைத் தொடர முடிகிறது" என்கிறார்.

தன்பாத் ஜீவன் ஜோதி பள்ளியில் 2008 முதல் சங்கம் நடத்தும் இம்மையம், குறிப்பிட்ட இடைவெளிகளில் மூன்றுநாள் முகாம்களை நடத்துகிறது. இதுவரை 5,000க்கும் மேற்பட்டோர் செயற்கை உறுப்புகளைப் பெற்றுள்ளனர். பழுதுபார்த்தல், மாற்றுதல், பொருத்தத்தைச் சரிசெய்தலும் நடைபெறுவதாகச் சங்கத் தலைவர் கனவ் பாலி தெரிவிக்கிறார்.

"பயனாளிகளைப் பரிசோதித்து அளவெடுத்ததும், இரு நாட்களுக்குப் பிறகு வந்து செயற்கை உறுப்பைப் பெற்றுக்கொள்கிறார்கள்." வட்டாரத்தின் ஐந்து ரோட்டரி சங்கங்களின் நன்கொடைகள் மையத்திற்குத் துணைபுரிகின்றன. தலா ரூ.2,500 மதிப்புள்ள உறுப்புகளுக்கு ரோட்டேரியர்களும் தனிப்பட்ட முறையில் நிதியளிக்கிறார்கள்.

துண்டுப்பிரசுரங்கள், WhatsApp நிலைத்தகவல்கள், Instagram பதிவுகள்,



*மேலே: தற்காப்புப் பயிற்சித் திட்டத்தில் RC விக்ரம்ஷிலா பிங்க் உறுப்பினர்கள்.*







*ரோட்டரி ஜெர்ரி பவெல் செயற்கை உறுப்பு மையத்தில் மாற்றுத்திறனாளியுடன் உரையாடும் RC தன்பாத் உறுப்பினர். வலது: RC பொகாரோ ஸ்டீல் சிட்டியின் 'உஜாலா' திட்டத்தில் கண் பரிசோதனை செய்துகொள்ளும் லாரி ஓட்டுநர்கள்.*



*கீழே: மரக்கன்றுகள் நடும் RC கிரிதி கப்பிள் உறுப்பினர்கள்.*







*RC பாட்னா மில்லினியம் அமைத்த பாலூட்டும் அறையை ரயில் நிலையத்தில் திறந்துவைக்கும் DG அனு நரங்.*

தொழில் மற்றும் சமூகத் தொடர்புகள் வழியாக முகாம் தகவல்களும் Google Forms விண்ணப்பங்களும் பகிரப்படுகின்றன. கிராமங்களிலும் கிராமப்புறங்களில் செல்லும் ஆட்டோக்களிலும் சுவரொட்டிகள் வைக்கப்படுகின்றன. ஆரம்ப மதிப்பீட்டிற்காகப் பயனாளிகள் புகைப்படங்களுடன் இணையவழிப் படிவத்தைச் சமர்ப்பிக்கிறார்கள். “அண்மையில் காயமடைந்தவர்களை, காயம் ஆறியதும் வரச் சொல்கிறோம். முகாமிற்கு வரும், மருத்துவ ரீதியாகத் தயாராக இருக்கும் அனைவருக்கும் செயற்கை உறுப்பு வழங்குவதே நோக்கம்” என்கிறார் பாலி.

சங்கத்தின் அண்மைய முயற்சியான ‘உமீத் கி கிரண்’ எனப்படும் ‘நம்பிக்கை ஒளி’ இலவசச் செயற்கை உறுப்பு திட்டம், ரூ.48.13 லட்சம் உலகளாவிய மானியத்துடன் செயல்படுகிறது. இதன்கீழ் பீகார், ஜார்க்கண்ட் மாநிலங்களைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு இதுவரை 213 உறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. உள்ளூரில் RC ராம்கர் சிட்டி, RC நவாடா ராஜ்ஸ்ரீ இணைந்து செயல்படுத்தின. RIDs 1180, 1210, 1110, 1100, ரோட்டரி ஜெய்ப்பூர் லிம்ப் UK மற்றும் RID 1210ஐச் சேர்ந்த RC வுல்வர்ஹாம்ப்டன், RC வெலிங்டன் ஆகியவை சர்வதேசப் பங்காளிகள்.

கடந்தாண்டு ஸ்டீல் அத்தாரிட்டி ஆஃப் இந்தியாவுடன் இணைந்து, ரூ.16 லட்சம் CSR நிதியில் நடத்திய செயற்கை உறுப்பு முகாமால் 128 பேர் பயனடைந்தனர்.

### RID 3250-ன் பிற சேவைகள்

RC பொகாரோ ஸ்டீல் சிட்டியின் ‘உஜாலா’ திட்டத்தில், SAIL சேமிப்பு வளாக நெடுஞ்சாலையில் 62 லாரி ஓட்டுநர்களுக்குக் கண் பரிசோதனை நடைபெற்றது. இவர்களில் 41 பேருக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

RC பாட்னா மில்லினியத்தின் ‘மம்தா’ திட்டத்தில், பாட்னா ரயில் நிலையத்தின் முதலாவது நடைமேடையில் தாய்மார்கள் தனிமையுடனும் கண்ணியத்துடனும் குழந்தைகளுக்குப் பாலூட்டுவதற்கான அறை அமைக்கப்பட்டது.

RC விக்ரம்ஷிலா பிங்க் நடத்திய ‘முக்கா மார்’ தற்காப்புப் பயிற்சியில் 100 சிறுமிகள் பங்கேற்றனர். உஷா விஸ்வகர்மாவும் லக்னோ ரெட் பிரிகேட் உறுப்பினர்களும் பயிற்சியளித்தனர்.

RC கிரிதி கப்பிள், 2,000 சதுரடி நிலத்தில் 880 மரக்கன்றுகளை மியாவாக்கி முறையில் நட்டது. நகரில் உள்ளூர் மரவகைகளைக் கொண்ட அடர்ந்த காட்டையும் பசுமைவெளியையும் உருவாக்குவது நோக்கம். ■



## RID 2981

### RC நாகப்பட்டினம் ஹோலிடவுன்

வடுகச்சேரி கிராமத்தில் தீவிபத்தால் பாதிக்கப்பட்ட ஏழு குடும்பங்களுக்கு, தலா ரூ.1 லட்சம் மதிப்பிலான நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன. பாத்திரங்கள், உடைகள், போர்வைகள், மளிகைப் பொருள்கள், பாய்கள், தலையணைகள் உள்ளிட்டவை வழங்கப்பட்ட நிகழ்வில் சங்கத் தலைவர் G இளையராஜா பங்கேற்றார்.

Rotary PEOPLE OF ACTION

# சங்கச் செய்திகள்







## RID 3012

### RC காசியாபாத் வசுந்தரா

கடுமையான வெயிலிலும் மழையிலும் வியாபாரம் செய்யும் தெருவோர வியாபாரிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் நோக்கில், பெரிய குடைகள் வழங்கப்பட்டன. சங்கத் தலைவர் அஜய் ஜெயின் பங்கேற்றார்.

## RID 3020

### RC ராஜமுந்திரி ரிவர் சிட்டி

ராஜமுந்திரி SKVT அரசுக் கல்லூரியில் ரூ.2 லட்சத்திற்கும் அதிகமான மதிப்பில், 500 லிட்டர் திறனுள்ள RO குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டது. சுமார் 1,000 மாணவர்கள் பயனடைவர்.





## RID 3030

**RC நாசிக் வெஸ்ட்**

நாசிக் அசோசியேஷன் ஆஃப் பிளைண்ட் பள்ளியின் சுமார் 100 மாணவர்களுக்கு, ‘இந்தியாவின் பிரெய்லி மனிதர்’ ஸ்வாகத் தோரத் இருநாள் நடமாட்டப் பயிற்சி அளித்தார். ரூ.30,000 மதிப்பிலான இந்நிகழ்வை PDG ரமேஷ் மெஹருடன் இணைந்து DG ராஜேஷ் பாட்டீல் தொடங்கிவைத்தார்.

## RID 3000

**RC கரூர் யங் ஜென்**

உலக ஹெபடைட்டிஸ் தினத்தை (ஜூலை 28) முன்னிட்டு, கரூர் கேஸ்ட்ரோ ஃபவுண்டேஷனுடன் இணைந்து நடத்திய மருத்துவ முகாமில் 50 பேர் பங்கேற்றனர். Dr S சதாசிவம் ஹெபடைட்டிஸ் B, C வைரஸ் தொற்றுகளை முன்கூட்டியே கண்டறிவது, கல்லீரல் நலனைப் பாதுகாப்பது குறித்து விளக்கினார்.






## RID 3150

**RC குண்டூர் ஆதர்ஷ்**

வெள்ளிவிழா கொண்டாடும் சங்கம், நிதிதிரட்டும் நிகழ்ச்சிமூலம் திரட்டிய ரூ.1.5 லட்சத்தைத் தகுதியான 15 கல்லூரி மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகையாக வழங்கியது. அவர்களுக்குக் கல்விக்கட்டணச் சலுகை வழங்குமாறு கல்லூரிகளிடம் வலியுறுத்தப்பட்டது.

## RID 3070

**RC ஜம்மு சிட்டி**

வணிக வளாகத்தில் குறுநாடகம், விளக்க அமர்வுகளுடன் போதைப் பொருள் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இளைஞர்களுக்கும் பொதுமக்களுக்கும் போதைப் பொருள்களின் தீமைகள் குறித்த புரிதலை ஏற்படுத்துவதே நிகழ்ச்சியின் நோக்கம். போதையற்ற, ஆரோக்கியமான வாழ்க்கைமுறையைப் பின்பற்ற அனைவரும் வலியுறுத்தப் பட்டனர்.

# CSR நிதியைச் சேவைக்குப் பயன்படுத்துவோம்

அசோக் கந்தூர்

நிறுவனங்களின் சமூகப் பொறுப்புணர்வு நிதியான CSR நிதியைக் கொண்டு சமூகச் சேவைத் திட்டங்களைச் செயல்படுத்த, 2021–22-ல் 'ரோட்டரி CSR இந்தியா கிரான்ட்' முறை அறிமுகமானது. இதுவரையிலான பலன்கள் ஊக்கமளிக்கின்றன. பணப் பங்களிப்புகள் உள்ளிட்ட மொத்த CSR வசூல், 2021–22-ல் 4.02 மில்லியன் டாலராக இருந்தது; 2025–26-ல் 20.92 மில்லியன் டாலராக, ஐந்து மடங்கிற்குமேல் உயர்ந்துள்ளது.

மண்டலங்கள் 4, 5, 6, 7-ன் மொத்த TRF பங்களிப்பான 45.39 மில்லியன் டாலரில், கடந்தாண்டின் CSR பங்களிப்பு 46 சதவீதம். இந்தியாவில் ரோட்டரி திட்டங்களுக்கு மிக முக்கியமான நிதியாதாரமாக CSR உருவாக முடியும் என்பதை இது காட்டுகிறது. 2026–27-ல், முந்தைய ஆண்டைவிட 100 சதவீத வளர்ச்சியுடன், 42 மில்லியன் டாலருக்குமேல் திரட்டும் உயர்ந்த, அதேசமயம் எட்டக்கூடிய இலக்கை நிர்ணயிக்கவேண்டும். இந்த ரோட்டரி ஆண்டில் கிடைக்கக்கூடிய CSR நிதி ரூ.59,600 கோடி; சுமார் 5.21 பில்லியன் டாலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பெரும் நிறுவன நிதித்தொகுப்புடன் ஒப்பிடும் போது, ரோட்டரி தற்போது திரட்டுவது மிகச் சிறிய பங்கே. நிதி கிடைப்பது பிரச்னையல்ல; அதைப் பெறுவதற்கான தயார் நிலை, திறன், நிறுவனங்களை அணுகும் முயற்சிகள் குறித்த விழிப்புணர்வைச் சங்கங்களிடையே உருவாக்குவதே சவால். இந்தியாவில் சில RI மாவட்டங்களே CSR மானியங்களைத் தீவிரமாக நாடுகின்றன. சில மாவட்டங்கள் முன்னேறத் தொடங்கியிருந்தாலும், பெரும்பாலானவை வெற்றிகரமான, தொடர்ச்சியான CSR செயல்திட்டத்தை இன்னும் உருவாக்கவில்லை.

### ஏன் இந்தத் தயக்கம்?

பல மாவட்டங்களும் சங்கங்களும் CSR நிதியைப் பெறுவதில் ஏன் தீவிரம் காட்டுவதில்லை? ரோட்டரி CSR இந்தியா கிரான்ட் முறை பற்றிய போதிய விழிப்புணர்வின்மை, மானியங்களைப் பெறுவது சிக்கலானது என்ற எண்ணம், மாவட்ட அளவில் குறைவான விழிப்புணர்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள் ஆகியவை முக்கியக் காரணங்கள். மேலும், சேவைத் திட்டங்களுக்கு CSR நிதி பெறுவதற்குத் தேவையான சட்டங்களின்படியும் நிறுவனங்கள் சட்டப் பிரிவுகளின்படியும் பதிவுசெய்யப்பட்ட அறக்கட்டளை போன்ற அமைப்பு பல சங்கங்களிடம் இல்லை.

CSR நடைமுறையின் ஒவ்வொரு கட்டத்திலும் சங்கங்களுக்கு வழிகாட்டுவதற்கெனத் தனி நிபுணரோ குழுவோ இல்லாததும் தடையாகிறது. இந்தியா முழுவதும் ரோட்டரி வெற்றிகரமாகச் செயல்படுத்திவரும் CSR திட்டங்களைப் பற்றி அறியும் வாய்ப்பும் பல சங்கங்களுக்குக் குறைவு. நிறுவனங்களை அணுகித் தங்கள் திட்டங்களைத் தொழில்முறை நேர்த்தியுடன் முன்வைப்பதில் சில ரோட்டேரியர்களுக்குத் தன்னம்பிக்கை இல்லை. சங்க உறுப்பினர்களுக்கு முறையான பயிற்சி, வழிகாட்டுதல், ஆதரவு வழங்குவதன் மூலம் இந்தச் சவால்களைச் சமாளிக்கலாம்.

### இருமுனைச் செயல்திட்டம்

இந்தாண்டின் இலக்கை அடைய, உலகளாவிய மற்றும் மாவட்ட மானியங்கள் போன்ற பிற TRF திட்டங்களுக்கு இணையான முக்கியத்துவமும் அமைப்புரீதியான கவனமும் CSR நிதித்திரட்டலுக்கும் வழங்கப்படவேண்டும். தற்போது திஷா போன்ற பல ரோட்டரி நிகழ்ச்சிகளில் CSR திட்டங்களுக்கு 15-30 நிமிடங்களே ஒதுக்கப்படுகின்றன. இந்த நிலை மாறவேண்டும். இந்தியாவில் ரோட்டரியின் சேவைத் திட்டங்களுக்கு நிதி திரட்டுவதற்கான முக்கிய வழியாக CSR கருதப்படவேண்டும்.

இதற்காக இரண்டு நடவடிக்கைகளை முன்மொழிகிறேன். முதலாவது, மாவட்ட அளவிலான CSR கருத்தரங்குகள் மூலம் பரவலான விழிப்புணர்வையும் செயல்திறனையும் உருவாக்குவது. இரண்டாவது, சங்கங்களுக்குத் தொடர்ச்சியாக உதவ மாவட்டங்களில் பிரத்யேக CSR வழிகாட்டும் குழுவை அமைப்பது. RISAO-CSR குழு மற்றும் ரோட்டரி தேசிய CSR குழுவின் ஆதரவுடன் இந்த இரு முயற்சிகளும் நாடளாவிய CSR இயக்கத்தை உருவாக்க முடியும்.

ஒவ்வொரு மாவட்டமும் நடத்தும் கருத்தரங்கு, CSR நிதியை நடைமுறையில் எப்படிப் பெறுவது என்பதை ரோட்டேரியர்களுக்குக் கற்றுத்தரும் பயிலரங்காக அமைய வேண்டும். மாவட்டங்களுக்கு வழிகாட்டவும் ஊக்கமளிக்கவும் ஆதரவளிக்கவும் RISAO மற்றும் தேசிய CSR குழுவின் நிபுணர்களை அழைக்கவேண்டும்.

மாவட்ட வழிகாட்டும் குழு, சங்கங்களின் முயற்சிகளை எளிதாக்கி ஆதரிக்க வேண்டும். நிதித்திரட்டலை முன்னெடுக்கும் பொறுப்பைச் சங்கங்களிடமிருந்து எடுத்துக்கொள்ளக்கூடாது. ஒவ்வொரு சங்கமும் நிதியளிக்கக்கூடிய நிறுவனங்களை அடையாளம் காணுதல், திட்டத்தைத் தயாரித்தல், அணுகுதல், தொடர்ந்து தொடர்பு கொள்ளுதல், நிதியைப் பெறுதல், செயல்படுத்துதல், அறிக்கை சமர்ப்பித்தல் ஆகிய படிநிலைகளைப் பின்பற்ற ஊக்குவிக்கப்பட வேண்டும்.

இந்தச் செயல்சுழற்சியே சங்கங்களின் CSR பணிக்கு அடிப்படையாக வேண்டும். கிடைக்கும் வாய்ப்புகளை மட்டுமே பெரிதும் சார்ந்திருக்கும் அணுகுமுறையிலிருந்து, முறையாகத் திட்டமிடப்பட்டு, பலன்களை அளவிடக்கூடிய நிதித்திரட்டல் செயல்பாட்டிற்கு ரோட்டரியை இது இட்டுச்செல்லும்.

நிறுவனங்களை அணுகும்போது ரோட்டரிக்குப் பல இயல்பான பலங்கள் உள்ளன. அவற்றை நிறுவனங்களிடம் மேலும் திறம்பட எடுத்துரைக்கவேண்டும். சில வெற்றிகரமான மாவட்டங்களுடன் நின்றுவிடாமல், இந்தியா முழுவதும் அதிகமான மாவட்டங்களுக்கும் சங்கங்களுக்கும் CSR நிதித்திரட்டலை விரிவுபடுத்துவதே முக்கியம்.

கட்டுரையாளர் RID 3011 முன்னாள் ஆளுநர்; ரோட்டரி தேசிய CSR குழுவின் ஒருங்கிணைப்பாளர்.■

ரோட்டரியின் சேவைத்திட்டங்கள்
ரோட்டரி செய்திக்குழு

## பள்ளிகளுக்கு அறிவியல் கருவிகள்

RC பிகானேர், RID 3053, அறிவியல் ஆசிரியர்களும் ஆய்வகங்களும் இருந்தும் கருவிகள் இல்லாத ஆறு அரசு மேல்நிலைப்பள்ளிகளுக்கு ரூ.9 லட்சத்திற்கும் அதிகமான ஆய்வகக் கருவிகளை வழங்கியது. இயற்பியல், வேதியியல், உயிரியல் செய்முறைகளுக்கு இவை உதவும்.




*பள்ளி ஆய்வகத்தில் சங்க உறுப்பினர்களுடன் IPDG நிஷா ஷெகாவத் (இடமிருந்து மூன்றாவது).*

## மாதவிடாய்ச் சுகாதாரம்

RC இந்தூர் அப்டவுன், RID 3040, 'ஸ்வச்சதா சங்கல்ப்' திட்டத்தில் அரசுப் பெண்கள் பள்ளி, விடுதி மாணவிகளுக்குச் சுமார் ஒரு லட்சம் சானிட்டரி நாப்கின்களை வழங்கி, மாதவிடாய்ச் சுகாதாரத்தை ஊக்குவித்தது.



*சங்க உறுப்பினரிடமிருந்து நாப்கின்களைப் பெறும் மாணவி.*

## பல் சுகாதாரப் பயிற்சி

RC பையனூர், RID 3204, இந்தியப் பல் மருத்துவச் சங்கத்துடன் நடத்திய கூட்டுப் பல்துலக்கும் நிகழ்ச்சியில் 650 மாணவர்கள் பங்கேற்றனர். செயல்விளக்கம், போட்டிகள், கலந்துரையாடல்கள் மூலம் வாழ்நாள் முழுவதும் வாய்ச் சுகாதாரம் பேணுவது வலியுறுத்தப்பட்டது.



*பல்துலக்கும் முறையை விளக்கும் பல் மருத்துவர்.*

## மரக்கன்றுகள் நடுதல்

RC சம்பல்பூர், RID 3261, IIM சம்பல்பூரில் மியாவாக்கி முறையில் 1,200-க்கும் மேற்பட்ட பழமர, மருத்துவக் கன்றுகளை நட்டது.



*IIM சம்பல்பூர் வளாகத்தில் மரக்கன்று நடும் சங்கத் தலைவர் சின்மய் சத்பதி.*

# Membership and TRF Summary 2026-27

## Top 20 Districts worldwide in Rotaract membership

| Rank | District | Zone | Country | Clubs | Members |
|---|---|---|---|---|---|
| 1 | 3000 | 5 | India | 151 | 7,532 |
| 2 | 3233 | 5 | India | 70 | 5,800 |
| 3 | 3292 | 6 | India | 193 | 4,750 |
| 4 | 3220 | 5 | India | 95 | 3,708 |
| 5 | 9213 | 22 | Uganda | 148 | 3,369 |
| 6 | 3141 | 4 | India | 128 | 3,188 |
| 7 | 9214 | 22 | Tanzania | 120 | 2,679 |
| 8 | 3192 | 7 | India | 88 | 2,039 |
| 9 | 3206 | 5 | India | 106 | 2,038 |
| 10 | 3150 | 7 | India | 54 | 2,032 |
| 11 | 3080 | 4 | India | 86 | 2,016 |
| 12 | 9104 | 22 | Ghana | 68 | 1,951 |
| 13 | 3131 | 7 | India | 103 | 1,907 |
| 14 | 3234 | 5 | India | 73 | 1,906 |
| 15 | 3191 | 7 | India | 84 | 1,855 |
| 16 | 3170 | 7 | India | 138 | 1,738 |
| 17 | 9010 | 22 | Algeria | 134 | 1,679 |
| 18 | 3203 | 5 | India | 76 | 1,539 |
| 19 | 3300 | 10 | Malaysia | 38 | 1,503 |
| 20 | 9216 | 22 | Eritrea | 78 | 1,461 |

## Zonewise Ranking - New member addition

| Rank | Zone | Members |
|---|---|---|
| 1 | 5 | 4,513 |
| 2 | 4 | 3,264 |
| 3 | 7 | 2,905 |
| 4 | 6 | 1,898 |
| Total (net growth since July 1) | | 12,580 |
| Rest of the world total (net growth since July 1) | | 20,412 |
| World total (net growth since July 1) | | 32,992 |

## Rotaract, Interact, RCC membership as on September 2026

| Zone | Rotaract | | Interact | RCCs |
|---|---|---|---|---|
| | Clubs | Rotaractors | Clubs | |
| 4 | 666 | 12,210 | 2,125 | 2,093 |
| 5 | 921 | 26,724 | 2,160 | 1,751 |
| 6 | 595 | 9,848 | 2,383 | 2,519 |
| 7 | 700 | 12,662 | 2,386 | 1,595 |

## Districtwise Ranking New member addition

| Rank | District | Zone | Members |
|---|---|---|---|
| 1 | 3000 | 5 | 1,357 |
| 2 | 2981 | 5 | 751 |
| 3 | 3011 | 4 | 571 |
| 4 | 3141 | 4 | 556 |
| 5 | 3080 | 4 | 506 |
| 6 | 3233 | 5 | 410 |
| 7 | 3131 | 7 | 408 |
| 8 | 3203 | 5 | 383 |
| 9 | 3170 | 7 | 381 |
| 10 | 3191 | 7 | 366 |
| 11 | 3250 | 6 | 348 |
| 12 | 3182 | 7 | 338 |
| 13 | 3020 | 7 | 317 |
| 14 | 3192 | 7 | 286 |
| 15 | 3142 | 4 | 285 |
| 16 | 3181 | 7 | 268 |
| 17 | 3150 | 7 | 265 |
| 18 | 3231 | 5 | 265 |
| 19 | 3120 | 6 | 261 |
| 20 | 3234 | 5 | 260 |
| 21 | 3132 | 7 | 250 |
| 22 | 3292 | 6 | 242 |
| 23 | 3030 | 6 | 241 |
| 24 | 3060 | 4 | 222 |
| 25 | 3212 | 5 | 215 |
| 26 | 3206 | 5 | 201 |
| 27 | 3012 | 4 | 190 |
| 28 | 3055 | 4 | 186 |
| 29 | 3291 | 6 | 184 |
| 30 | 3070 | 4 | 177 |
| 31 | 3240 | 6 | 169 |
| 32 | 3056 | 4 | 163 |
| 33 | 3053 | 4 | 163 |
| 34 | 2982 | 5 | 155 |
| 35 | 3110 | 6 | 146 |
| 36 | 3220 | 5 | 137 |
| 37 | 3204 | 5 | 136 |
| 38 | 3090 | 4 | 135 |
| 39 | 3211 | 5 | 132 |
| 40 | 3262 | 6 | 127 |
| 41 | 3205 | 5 | 111 |
| 42 | 3040 | 4 | 110 |
| 43 | 3261 | 6 | 101 |
| 44 | 3100 | 6 | 79 |
| 45 | 3160 | 7 | 26 |
| **Total** | | | **12,580** |

## Top 10 Districts - TRF Giving

### Annual Fund

| Rank | Zone | District | Annual Fund ($) |
|---|---|---|---|
| 1 | 7 | 3150 | 235,585 |
| 2 | 4 | 3141 | 156,662 |
| 3 | 7 | 3131 | 132,781 |
| 4 | 4 | 3142 | 111,046 |
| 5 | 4 | 3080 | 109,373 |
| 6 | 4 | 3060 | 93,391 |
| 7 | 6 | 3250 | 87,527 |
| 8 | 6 | 3120 | 85,642 |
| 9 | 6 | 3291 | 84,364 |
| 10 | 7 | 3132 | 81,121 |

### PolioPlus Fund

| Rank | Zone | District | PolioPlus Fund ($) |
|---|---|---|---|
| 1 | 5 | 3234 | 8,584 |
| 2 | 7 | 3170 | 8,354 |
| 3 | 7 | 3150 | 7,449 |
| 4 | 7 | 3020 | 7,289 |
| 5 | 4 | 3141 | 6,889 |
| 6 | 6 | 3292 | 5,908 |
| 7 | 7 | 3181 | 4,317 |
| 8 | 4 | 3142 | 4,281 |
| 9 | 6 | 3240 | 4,117 |
| 10 | 6 | 3291 | 3,673 |

### Endowment Fund

| Rank | Zone | District | Endowment Fund ($) |
|---|---|---|---|
| 1 | 6 | 3291 | 57,646 |
| 2 | 4 | 3080 | 52,083 |
| 3 | 4 | 3053 | 50,000 |
| 4 | 5 | 3233 | 40,373 |
| 5 | 7 | 3150 | 38,592 |
| 6 | 6 | 3120 | 34,425 |
| 7 | 5 | 3212 | 30,000 |
| 8 | 7 | 3131 | 26,471 |
| 9 | 4 | 3141 | 26,263 |
| 10 | 6 | 3250 | 21,798 |

### Zone Ranking in Implementing 10:20:30 Formula for New Clubs

| Rank | Zone | Rotary | Rotaract | Interact |
|---|---|---|---|---|
| 1 | 5 | 41 | 24 | 165 |
| 2 | 4 | 33 | 24 | 65 |
| 3 | 6 | 18 | 39 | 87 |
| 4 | 7 | 8 | 45 | 86 |
| Total | | 100 | 132 | 403 |
| Target | | 500 | 1,000 | 1,500 |

### Top 20 Giving Districts in India for 2026–27

| Rank | District | Zone | Total Contributions ($) |
|---|---|---|---|
| 1 | 4 | 3141 | 961,605 |
| 2 | 7 | 3150 | 352,997 |
| 3 | 7 | 3191 | 250,585 |
| 4 | 4 | 3080 | 216,060 |
| 5 | 7 | 3131 | 205,503 |
| 6 | 4 | 3142 | 186,680 |
| 7 | 6 | 3291 | 151,551 |
| 8 | 6 | 3250 | 138,842 |
| 9 | 7 | 3132 | 137,083 |
| 10 | 6 | 3120 | 122,119 |
| 11 | 4 | 3060 | 113,077 |
| 12 | 5 | 3203 | 111,211 |
| 13 | 5 | 3234 | 98,121 |
| 14 | 4 | 3011 | 96,201 |
| 15 | 7 | 3020 | 81,111 |
| 16 | 4 | 3053 | 79,713 |
| 17 | 5 | 3205 | 77,298 |
| 18 | 7 | 3170 | 71,012 |
| 19 | 7 | 3192 | 65,609 |
| 20 | 5 | 3233 | 59,411 |

### Zonewise Ranking - CSR Credits

| Rank | Zone | District | CSR ($) |
|---|---|---|---|
| 1 | 4 | 3141 | 489,277.33 |
| 2 | 4 | 3142 | 69,791.67 |
| 3 | 7 | 3132 | 54,533.68 |
| 4 | 7 | 3150 | 53,694.17 |

# ரோட்டரியின் பல்வேறு திட்டங்கள்

**ரோட்டரி செய்திக்குழு**

## கடலூரில் கிராமத்தை மேம்படுத்தும் ரோட்டரி

RC கடலூர் மிட்டவுன் சங்கம், தனது கிராமத் தத்தெடுப்புத் திட்டத்தின்கீழ் சஞ்சீவிராயன் கோயில் கிராமத்தில் ரூ.2.78 லட்சம் மதிப்பில் நிறைவேற்றிய நலத்திட்டங்களை RID 2981 DG K வைத்தியநாதன் தொடங்கிவைத்தார்.

குளம் சீரமைப்பு, மரக்கன்றுகள் நடுதல், வாழ்வாதார உதவிகள் உள்ளிட்ட இத்திட்டங்களால் 500-க்கும் மேற்பட்ட கிராம மக்கள் பயனடைவார்கள். கிராம மக்களின் வாழ்வாதாரத்திற்கும் நலனுக்கும் உதவும் வகையில் நடைபெற்ற இந்த நிகழ்வுகளில், 300 கோழிக்குஞ்சுகள், குடற்புழு நீக்க மாத்திரைகள் மற்றும் இஸ்திரிப் பெட்டிகள் உள்ளிட்ட உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.

மேலும், கிராம மக்கள் பயன்பெறும் வகையில் கண் பரிசோதனை முகாம் ஒன்றும் நடத்தப்பட்டது. கிராமத்திலுள்ள அரசுப் பள்ளியில் CCTV கேமரா பொருத்தப்பட்டது.



*கிராமத் தத்தெடுப்புத் திட்ட நிகழ்வில் சங்க உறுப்பினர்களுடன் DG K வைத்தியநாதன் (இடமிருந்து 6-வது).*

## டெல்லி மருத்துவமனைக்கு மின்வாகனம்

RC டெல்லி சவுத் ஈஸ்ட், RID 3011 சங்கம் வழங்கிய மின்வாகனத்தை, முன்னாள் மத்திய அமைச்சர் மீனாட்சி லேகி, VMCC மற்றும் சஃப்தர்ஜங் மருத்துவமனையிடம் ஒப்படைத்தார். மருத்துவமனை வளாகத்திற்குள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு நோயாளிகள் சிரமமின்றியும் வசதியாகவும் சென்றுவர வேண்டும் என்பதே இந்த மின்வாகனம் வழங்கப்பட்டதன் நோக்கம்.

குறிப்பாக, நீண்ட தூரம் நடக்க முடியாத முதியவர்களுக்கும் நடமாடுவதில் சிரமமுள்ள நோயாளிகளுக்கும் இவ்வாகனம் பயனளிக்கும். “மருத்துவமனையில் நோயாளிகளின் பராமரிப்பு மற்றும் சிகிச்சை அனுபவத்தை மேம்படுத்தி, அவர்களது பயணத்தை எளிதாக்கும் சங்கத்தின் மற்றொரு முயற்சி இது” என்றார் சங்கத் தலைவர் சந்தீப் சோப்ரா.



*RC டெல்லி சவுத் ஈஸ்ட் உறுப்பினர்களுடன் முன்னாள் மத்திய அமைச்சர் மீனாட்சி லேகி (இடமிருந்து 3வது).*

# இமயமலையில் ரோட்டரியின் விழிப்புணர்வுப் பயணம்

இமயமலைப் பகுதிகளில் ரோட்டரியை அறிமுகப்படுத்தும் நோக்கில், RID 3090 PDG பாக் சிங் பன்னுவும் ரோட்டேரியன் M S போலோவாசியாவும் ஜூன் 2026-ல் சாலைப் பயணம் மேற்கொண்டனர். முன்னதாக பஞ்சாபின் பாட்டியாலாவிலுள்ள குருத்வாரா ஸ்ரீ குரு தேக் பகதூர் சாஹிப்பில் வழிபட்டனர்.

ரோட்டரி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் இந்தப் பயணத்தின்போது, 'நீரைச் சேமிப்போம், மரங்களை நடுவோம், பிளாஸ்டிக்கைத் தவிர்ப்போம்' என்ற வாசகங்கள் இடம்பெற்ற பதாகையை முக்கிய இடங்களில் இருவரும் காட்சிப்படுத்தினர். இந்திய-திபெத் எல்லையிலுள்ள லெப்சா லா கணவாய்; 14,567 அடி உயரத்தில் செயல்படும் உலகின் மிக உயரமான ஹிக்கிம் அஞ்சலகம்; ஹிமாச்சலின் ஸ்பிட்டி பள்ளத்தாக்கில் 13,596 அடி உயரத்திலுள்ள ஆசியாவின் மிக உயரமான சிச்சம் தொங்குபாலம் ஆகியவை அவற்றில் அடங்கும்.

இந்தச் சாலைப் பயணத்திற்கான யோசனையை உருவாக்கியவர் RC ஃபரீத்கோட் சங்கத்தின் முன்னாள் தலைவர் S P S சோதி ஆவார். RID 3090 மாவட்டத்தைச் சேர்ந்த மற்ற ரோட்டரி சங்கங்களும் இம்முயற்சிக்கு தங்கள் ஆதரவை வழங்கின.




*லெப்சா லா கணவாயில் ரோட்டரி பதாகையுடன் RID 3090 PDG பாக் சிங் பன்னு (வலது), M S போலோவாசியா.*

# சமூகச் சேவைக்கு உடல் பாதுகாப்புப் பெட்டிகள்

ஜால்னாவிலுள்ள ஓம் சாய்ராம் ஸ்டீல்ஸ் அண்ட் அலாய்ஸ் நிறுவனத்தின் $21,000 CSR நிதியுதவியுடன், மகாராஷ்டிராவின் 11 வருவாய் மாவட்டங்களிலுள்ள 28 ரோட்டரி சங்கங்களுக்குத் தலா ஒரு சடலப் பாதுகாப்புக் குளிர்பதனப் பெட்டியை RID 3132 வழங்கியுள்ளது.

உள்ளூர் மக்களுக்குச் சேவையாற்றுவதற்காக, ஒவ்வொரு சங்கமும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் உள்ளூர் NGO-விடம் பெட்டியை ஒப்படைத்துள்ளது. "தேவைப்படும் போதெல்லாம் இவ்வசதி கிடைக்கவும், பயனாளிக் குடும்பத்திடம் கட்டணம் வசூலிக்கப்படாமல் இருக்கவும் இந்த ஏற்பாடு செய்யப்பட்டது" என்றார் PDG சுரேஷ் சாபூ.

பெட்டிகளை வழங்கிய அவுரங்காபாத்தின் மூடி கூல் பேனல் நிறுவனம், வாழ்நாள் முழுவதும் பராமரிப்பு ஆதரவு வழங்க முன்வந்துள்ளது.



*சடலப் பாதுகாப்புக் குளிர்பதனப் பெட்டியுடன் ரோட்டேரியன்கள்.*

# உடலையே எதிரியாக்கும் நோய் எதிர்ப்பு மண்டலம்

கீதா மத்தாய்




வைரஸ், பாக்டீரியா தொற்றுகளையும், காயத்தால் ஏற்படும் திசுச்சேதம் மற்றும் ரத்தப்போக்கையும் எதிர்கொள்ளும் வகையில் நமது உடல் அமைந்துள்ளது. தாக்குதல் ஏற்பட்டதும், பாதுகாப்புப் படையான வெள்ளை ரத்த அணுக்கள் (WBCs) பாதிக்கப்பட்ட பகுதிக்கு விரைகின்றன. சில அணுக்கள் உடலுக்குள் ஊடுருவிய நுண்ணுயிரிகளை விழுங்கி அழிக்கின்றன. வேறு சில வெள்ளை ரத்த அணுக்கள் வைரஸ்களையும் பாக்டீரியாக்களையும் ஒழிக்க உதவும் பாதுகாப்பு வேதிப்பொருள்களை வெளியிடுகின்றன. ரத்த இழப்பைத் தடுக்க, ரத்தம் உறையும் செயல் முறையையும் உடல் இயக்குகிறது.

சில நேரங்களில் இந்தப் பாது காப்புப் படையே உடலுக்கு எதிராகத் திரும்புகிறது. தன்னுடல் தாக்குநோயில், சொந்தத் திசுக்களுக்கும் வெளியிலிருந்து ஊடுருவும் எதிரிக்கும் இடையிலான வேறுபாட்டை நோய் எதிர்ப்பு மண்டலம் உணரத் தவறுகிறது. பாதுகாக்க வேண்டிய திசுக்களையே அந்நியப் பொருளாகக் கருதித் தாக்குகிறது.

இத்தகைய பாதிப்புகள் அரிதானவை என்று நினைக்க வேண்டாம். தன்னுடல் தாக்குநோய்கள் ஒட்டுமொத்தமாக மக்கள்தொகையில் 8 சதவீதத்தினரைப் பாதிக்கின்றன. குறிப்பிட்ட வயதினருக்கு மட்டுமின்றி, எந்த வயதிலும் இவை ஏற்படலாம். 100-க்கும் மேற்பட்ட வகைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்டவர்களில் சுமார் 70-80 சதவீதத்தினர் பெண்கள். இதற்கு மரபியல், ஹார்மோன்கள், சுற்றுச்சூழல் சார்ந்த சிக்கலான காரணங்கள் இருக்கலாம். பெண்களுக்கு இரண்டு X குரோமோசோம்களும், ஆண்களுக்குப் பொதுவாக ஒரு X, ஒரு Y குரோமோசோமும் உள்ளன. X குரோமோசோமின் செயல்பாட்டு வேறுபாடுகளும் ஈஸ்ட்ரோஜன் போன்ற ஹார்மோன்களின் தாக்கமும் பெண்களின் அதிக பாதிப்பை ஓரளவு விளக்கக்கூடும்.

எலும்பு மண்டலம், நரம்புகள், மூளை, ரத்த நாளங்கள், நாளமில்லாச் சுரப்பிகள், செரிமான மண்டலம் அல்லது தோலை நோய் எதிர்ப்பு மண்டலம் 'எதிரி'யாகக் கருதலாம். ருமட்டாய்டு ஆர்த்ரைட்டிஸ், சிஸ்டமிக் லூபஸ் எரிதிமட்டோசஸ், மயோசைட்டிஸ், சொரியாசிஸ், டெர்மட்டோமயோசைட்டிஸ், ஸ்கிளிரோடெர்மா, வாஸ்குலைட்டிஸ், அல்சரேட்டிவ் கொலைட்டிஸ், அட்ரோபிக் கேஸ்ட்ரைட்டிஸ், வகை 1 நீரிழிவு, ஹாஷிமோட்டோ தைராய்டைட்டிஸ் ஆகியவை பொதுவான தன்னுடல் தாக்குநோய்கள்.

பாதிக்கப்படும் உறுப்பு மண்டலத்தைப் பொறுத்து அறிகுறிகள் மாறுபடும். சில அறிகுறிகள் குறிப்பிட்ட நோயைச் சுட்டாத பொதுவானவையாக இருக்கும். மூட்டுகள் தாக்கப்பட்டால் வலி, வீக்கம், இறுக்கம் ஏற்படலாம். கணையத்தில் இன்சுலின் உற்பத்தி செய்யும் பீட்டா செல்கள் அழிக்கப் பட்டால் வகை 1 நீரிழிவு உருவாகிறது.

நோயின் தாக்கம் அதிகரித்துத் தணியலாம். இடையில் அறிகுறிகளற்ற காலம் குறுகியதாகவோ நீண்டதாகவோ இருக்கலாம். இதனால், உணவுக் கட்டுப்பாட்டை மீறியது நோயை அதிகரித்ததாகவும், மூலிகைகள் அல்லது ஊட்டச்சத்துத் துணைப் பொருள்கள் நோயைத் தணித்ததாகவும் நோயாளிகள் தவறாகக் கருதக்கூடும். உண்மையில் இவற்றுக்கும் நோயின் மாற்றத்திற்கும் தொடர்பில்லாமல் இருக்கலாம்.

காரணமின்றி பலவீனமும் சோர்வும் ஏற்படலாம். ஆரம்பத்தில் தோல் மாற்றங்கள், தசைப் பலவீனம், வீக்கம், வலி போன்ற குறிப்பான அறிகுறிகள் இல்லாததால் நோயறிதல் கடினமாகலாம். சரியான நோயறிதலையோ நிரந்தரத் தீர்வையோ தேடி நோயாளிகள் மருத்துவர்களை மாற்றிக்கொண்டிருக்கவும் நேரிடலாம்.

சுற்றுச்சூழலும் நோய் வாய்ப்பைப் பாதிக்கிறது. நகர்ப்புறங்களில் காற்று

மாசு, டீசல் புகை, தொழிற்சாலை மாசுகளுக்கு நீண்டகாலம் ஆட்படுவது நாள்பட்ட அழற்சிக்குப் பங்களிக்கலாம். சிகரெட் புகை குறிப்பாகத் தீங்கானது. மற்றவர்கள் புகைப்பதால் வெளிப்படும் புகையைச் சுவாசிப்பவர்களும் நச்சுப்பொருள்களுக்கு ஆட்படக்கூடும்.

பெற்றோரிடமிருந்து குழந்தைக்கு ஒரே மரபணு கடத்தப்படுவதால் மட்டும் பொதுவாக இந்நோய்கள் வருவதில்லை. வகை 2 நீரிழிவைப் போல, பல மரபணுக்கள் இணைந்து நோய்க்கான முன்சாய்வை உருவாக்கலாம். உடன் பிறந்தவர், பெற்றோர் அல்லது குழந்தைக்குத் தன்னுடல் தாக்குநோய் இருப்பதால் உங்களுக்கும் கட்டாயம் வரும் என்பதில்லை. ஒரே மரபணு அமைப்புள்ள இரட்டையர்களில்கூட ஒருவர் பாதிக்கப்பட, மற்றவர் பாதிப்பின்றி இருக்கலாம்.

மரபியல் ரீதியாக நோய் வாய்ப்புள்ளவரிடமும், நோயைத் தொடங்கிவைக்கச் சுற்றுச்சூழல் அல்லது உயிரியல் தூண்டுதல் பெரும்பாலும் தேவைப்படுகிறது. குறிப்பாகச் சில வைரஸ் தொற்றுகள், இயல்புக்கு மாறான நோய் எதிர்ப்பு வினையைத் தூண்டக்கூடும்.

உடற்பருமனும் பங்களிக்கலாம். அதிக உடற்கொழுப்பு, குறைந்த தீவிரத்திலான அழற்சி நீடிக்க வழிவகுக்கும். ஒட்டுமொத்த ஆரோக்கியத்தைப் பராமரிப்பதில் நாம் உண்ணும் உணவும் முக்கியப் பங்கு வகிக்கிறது. அதிகமாகப் பதப்படுத்தப் பட்ட உணவுகள், மிகையான சர்க்கரை, டிரான்ஸ் கொழுப்புகளைவிட, புதிய பழங்கள், காய்கறிகள், முழுத்தானியங்கள், போதிய புரதம் கொண்ட சமச்சீர் உணவு சிறந்தது. எனினும், ஒரே உணவுப்பொருளோ சிறப்பு உணவுமுறையோ எல்லா தன்னுடல் தாக்குநோய்களையும் தடுக்கவோ குணப்படுத்தவோ முடியாது.

எல்லா வகைகளையும் அடையாளம் காணக்கூடிய ஒரே பரிசோதனை இல்லை. ESR (Erythrocyte Sedimentation Rate) எனப்படும் சிவப்பணு படிவுவேகப் பரிசோதனையும், CRP (C-Reactive Protein) எனப்படும் சி-ரியாக்டிவ் புரதப் பரிசோதனையும் அழற்சியை அளவிடுகின்றன; காரணத்தைக் கண்டறிவதில்லை. ANA (antinuclear antibody) பரிசோதனை, சொந்தச் செல்களின் கூறுகளுக்கு எதிராக வினைபுரியும் எதிர்ப்புரதங்களைக் கண்டறிகிறது. ANA நேர்மறை முடிவை மட்டும் வைத்து நோயை உறுதிசெய்ய முடியாது; ஆரோக்கியமானவர்களிடமும் அத்தகைய முடிவு வரலாம்.

எந்த தன்னுடல் தாக்குநோய் ஏற்பட்டுள்ளது என்பதைத் தெளிவுபடுத்த, அந்தந்த நோய்க்கு ஏற்ற மேலும் குறிப்பான பரிசோதனைகளும் தேவைப்படலாம். ருமட்டாய்டு காரணி (RF), anti-CCP எதிர்ப்புரதப் பரிசோதனைகள் ருமட்டாய்டு ஆர்த்ரைட்டிஸைக் கண்டறிய உதவும். anti-dsDNA, ENA (extractable nuclear antigen) எதிர்ப்புரதப் பரிசோதனைகள் லூபஸ் மற்றும் தொடர்புடைய நோய்களைக் கண்டறிய உதவலாம். மூட்டு, திசுச்சேதத்தை அறிய எக்ஸ்-ரே, அல்ட்ராசவுண்ட் அல்லது MRI பயன்படுத்தப்படலாம். குறிப்பிட்ட உறுப்பு பாதிப்பை உறுதிப்படுத்த சில நேரங்களில் திசு மாதிரிப் பரிசோதனை தேவைப்படும்.

எல்லா தன்னுடல் தாக்குநோய் களுக்கும் ஒரே சிகிச்சை பொருந்தாது. ஒருவருக்கு ஏற்பட்டுள்ள நோயின் வகை, அதன் தீவிரம் ஆகியவற்றைப் பொறுத்தே சிகிச்சை அமையும். ஸ்டீராய்டு அல்லாத அழற்சி எதிர்ப்பு மருந்துகள் (NSAIDs) வலியையும் அழற்சியையும் குறைக்கலாம். பிரெட்னிசோன் போன்ற கார்டிகோஸ்டீராய்டுகள் கடும் அழற்சியை விரைவாகக் கட்டுப்படுத்துவதால், நோய் திடீரெனத் தீவிரமடையும்போது பயன்படுத்தப்படுகின்றன. மெத்தோட்ரெக்சேட் போன்ற நோயின் போக்கை மாற்றும் மருந்துகள், அசாதாரண நோய் எதிர்ப்புச் செயல்பாட்டைக் கட்டுப்படுத்தி, திசுச்சேதம் அதிகரிப்பதைத் தடுக்கலாம்.

புதிய சிகிச்சைகளில் குறிப்பிட்ட இலக்கில் செயல்படும் உயிரியல் மருந்துகளும் மோனோக்ளோனல் எதிர்ப்புரதங்களும் அடங்கும். ஒட்டுமொத்த நோய் எதிர்ப்பு வினையையும் பரவலாக ஒடுக்காமல், குறிப்பிட்ட கூறுகள்மீது இவை செயல்படுகின்றன. பல தன்னுடல் தாக்குநோய்களின் சிகிச்சையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

அத்தியாவசிய ஹார்மோனை உற்பத்தி செய்யும் திறன் அழிந்துவிட்டால், அதை வெளியிலிருந்து வழங்கவேண்டும். வகை 1 நீரிழிவு உள்ளவர்களுக்கு இன்சுலின் தேவை. தன்னுடல் தாக்கத்தால் தைராய்டு செயல்பாடு குறைந்தவர்களுக்கு தைராய்டு ஹார்மோன் மாற்றுச் சிகிச்சை தேவைப்படலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட கடுமையான நோய்களில் நரம்புவழி இம்யூனோகுளோபுலின் (IVIG) அல்லது பிளாஸ்மா பரிமாற்றச் சிகிச்சையும் பயன்படுத்தப்படலாம்.

மூட்டுகளும் தசைகளும் பாதிக்கப்படும்போது பிசியோதெரபி முக்கியம். இயக்கத்திறன், சமநிலை, நெகிழ்வுத்தன்மை, தசைவலிமையைப் பராமரிக்க உதவுகிறது. பிசியோதெரபி நிபுணர் கற்றுத்தரும் பயிற்சிகளை அவ்வப்போது செய்வதுடன் நிறுத்திவிடாமல், அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாகத் தொடர்ந்து முறையாகச் செய்துவருவது அவசியம். நடைப்பயிற்சி, யோகா, டாய்ச்சி, பொருத்தமான தசைவலுப் பயிற்சிகளும் உடற்தகுதியையும் பிறரைச் சாராமல் செயல்படும் திறனையும் பேண உதவும்.

பல தன்னுடல் தாக்குநோய்களை தற்போது நிரந்தரமாகக் குணப்படுத்த முடியாவிட்டாலும், பெரும்பாலும் திறம்படக் கட்டுப்படுத்த முடியும். தீவிரமடைவதும் தணிவதும் மாறிமாறி நிகழலாம்; இக்காலகட்டங்கள் ஆண்டுக்கணக்கிலும் நீடிக்கலாம். ஆரம்ப நோயறிதல், பொருத்தமான மருந்துகள், தொடர் மருத்துவக் கண்காணிப்பு, சமச்சீர் உணவு, புகைப்பதைத் தவிர்த்தல், போதிய தூக்கம், வழக்கமான உடற்பயிற்சி ஆகியவை சிக்கல்களைத் தடுத்து வாழ்க்கைத்தரத்தைப் பேண உதவும்.

நேர்மறை மனப்பாங்கு, சிகிச்சையை முறையாகப் பின்பற்றுதல், உடலளவில் சுறுசுறுப்பாக இருத்தல் ஆகியவையே இந்நோயுடன் சிறப்பாக வாழ்வதற்கான அடித்தளங்கள்.

எழுத்தாளர் ஒரு குழந்தை மருத்துவ நிபுணரும், Staying Healthy in Modern India என்ற நூலின் ஆசிரியருமாவார்.



RID 3160

**RC விஜயநகர் ஹெரிடேஜ்**

பாப்பிநாயக்கனஹள்ளி கிராமத்தில் 150 மாணவர்களுக்குப் பள்ளிப் பைகள் வழங்கப்பட்டன. கிராமப்புறக் குடும்பங்களின் நிதிச்சுமையைக் குறைத்து, கல்விக்குத் தேவையான பொருள்களுடன் குழந்தைகளை ஊக்குவிப்பதே நோக்கம்.

Rotary PEOPLE OF ACTION

# சங்கச் செய்திகள்





RID 3212

**ரோட்டரி மாவட்டம் 3212**

IPDG தினேஷ் பாபுவின் அழைப்பையேற்று, RID 3090 PDG பாக் சிங் பன்னு, மாவட்டத்தின் 14 சங்கங்களுக்கு வருகை தந்து RI நிறுவனர் பால் ஹாரிஸின் மார்பளவுச் சிலைகளை நிறுவினார். இந்தியா முழுவதும் சங்கக் கட்டடங்களில் சுமார் 290 சிலைகள் நிறுவப்பட்டுள்ளன.

RID 3233

**RC மெட்ராஸ் வெஸ்ட்**

சென்னை அருகே பொன்னேரி, பெரும்பேடு கிராம அரசு உயர்நிலைப்பள்ளியில், ஹூண்டாய் ஆட்டோஎவர் இந்தியாவின் CSR நிதியுடன் ரூ.22.5 லட்சத்தில் ஸ்மார்ட் TV-யுடன் கணினி ஆய்வகம் அமைக்கப்பட்டது. DG ஸ்ரீராம் துவ்வூரி இவ்வசதியை திறந்து வைத்தார்.





## RID 3240

### RC மணிப்பூர்

வருங்காலத் தலைமுறைகளுக்குப் பசுமையான, ஆரோக்கியமான சூழலை உருவாக்க, ரோட்டரி பவனிலும் பொய்ரெய் நவகோல் குழந்தைகள் இல்லத்திலும் சுமார் 120 பழமரங்கள் நடப்பட்டன. சிரஞ்சீவ் கவுர் நிதியளித்தார். மேலும், இந்தச் சிறப்பு இல்லத்தில் வசிக்கும் 30-க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்குத் தின்பண்டங்களும் வழங்கப்பட்டன.

## RID 3170

### RC பெல்காம் சவுத்

பெஹரே ஃபவுண்டேஷனுடன் இணைந்து, ஹலசி கிராம அரசு உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு விளையாட்டுக் காலணிகள் வழங்கப்பட்டன. மாணவர்கள் விளையாட்டு நடவடிக்கைகளில் ஆர்வத்துடன் பங்கேற்க இந்தக் காலணிகள் உதவும்.





## RID 3291

### RC பாலிகஞ்ச்

சுக் சன்ஸ்தான் பிருத்தாஷ்ரம் முதியோர் இல்லத்தில் உடல்நலப் பரிசோதனை முகாம் நடைபெற்றது. உரிய நேரத்தில் மருத்துவப் பராமரிப்பு வழங்கிய இம்முயற்சி, முதியோருக்கு ஆறுதலையும் அக்கறையையும் நம்பிக்கையையும் அளித்தது.

## RID 3250

### RC பாட்னா சிட்டி சாம்ராட்

DG அனு நரங், PDG சந்தீப் நரங் முன்னிலையில், இருவருக்குச் சுயதொழிலுக்காக மின்ரிக்ஷாக்களும், வசதியற்ற ஐந்து மாணவர்களுக்கு மிதிவண்டிகளும் வழங்கப்பட்டன. PDG-கள் சஞ்சீவ் தாக்கூர், பிபின் சாச்சன் பங்கேற்றனர்.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# சமையலிலும் வேண்டும் சுற்றுச்சூழல் அக்கறை

**பிரீத்தி மெஹ்ரா**

இஸ்ரேல்-அமெரிக்கா-ஈரான் போர் தொடங்கியதிலிருந்து, LPG சமையல் எரிவாயுவுக்குத் தட்டுப்பாடு வருமோ, வீடுகளுக்கு சிலிண்டர் கிடைப்பது தாமதமாகுமோ என்ற கவலை எழுந்துள்ளது. சில குடும்பங்கள் LPG அடுப்புடன் பயன்படுத்த இண்டக்ஷன் அடுப்பையும், மற்றவர்கள் ஏர் ஃப்ரையரையும் வாங்கினர். மின்சாரத்தில் இயங்கும் இவற்றைப் பயன்படுத்தும் போது சமையலறையில் நேரடியாக மாசு வெளியேறுவதில்லை.

ஆனால் இவற்றை இயக்கும் மின்சாரம் எங்கிருந்து வருகிறது என்பதும் கவனிக்கத்தக்கது. நமது நாட்டில் உற்பத்தியாகும் மின்சாரத்தின் பெரும்பகுதி, அதிக மாசை ஏற்படுத்தும் நிலக்கரி என்னும் எரிபொருளையே சார்ந்திருக்கிறது. புதுப்பிக்கத்தக்க ஆற்றலிலிருந்து கிடைக்கும் மின்சாரமே சிறந்த, தூய்மையான மாற்றுவழி என்பதை நம்மில் பலரும் அறிவோம்.

இந்தச் சமையல் எரிபொருள் விவாதத்தில் நாம் கவனிக்க வேண்டிய ஒரு முரண்பாடும் இருக்கிறது. புவி வெப்பமாதல் அல்லது கார்பன் தடத்தைக் குறைப்பது பற்றிப் பேசும் போதெல்லாம் நகர்ப்புற இந்தியாவையே கவனிக்கிறோம். தீர்வுகளுக்கு உதாரணமாக, தூய்மையான சமையல் எரிபொருளாக LPG பரவலாக்கப்பட்டதன் வெற்றியைக் குறிப்பிடுகிறோம்.

நகர்ப்புற வீடுகளின் சமையலறைகளில் பயன்படுத்துவதற்குத் தூய்மையான எரிபொருள்களும் மின்சார சாதனங்களும் பல்வேறு தேர்வுகளாக உள்ளன. சில நகரங்களில் குழாய்வழி எரிவாயு கிடைக்கிறது. மின்சார அடுப்புகள், ஏர் ஃப்ரையர்கள் உள்ளிட்ட சாதனங்களும் பயன்படுகின்றன. நகர்ப்புற ஏழைகளிடமும் LPG பிரபலமாகி, விறகு, நிலக்கரியின் இடத்தைப் பிடித்துள்ளது.

கிராமங்களின் உட்பகுதிகளுக்கும் LPG சென்றடைந்துள்ளது. எனினும், எரிசக்தி, சுற்றுச்சூழல் மற்றும் நீர் கவுன்சில் (CEEW) வெளியிட்ட அண்மைய மூன்று ஆய்வுகள் வேறொரு நிலையை வெளிப்படுத்துகின்றன. தேவையை நிறைவேற்றும் முறைசாரா எரிவாயுச் சந்தையின் வளர்ச்சிக்கேற்ப, அங்கீகரிக்கப்பட்ட இணைப்புகள் வழியான அணுகல் வளரவில்லை.

அங்கீகரிக்கப்பட்ட இணைப்பு இருந்தால், அரசு அங்கீகாரம்பெற்ற விநியோகஸ்தரிடமிருந்து காலியான சிலிண்டருக்குப் பதிலாக நிரப்பப்பட்ட சிலிண்டரைத் தொடர்ந்து பெறலாம். ஆனால் இணைப்பு இல்லாதவர்களின் தேவையை நிறைவேற்றும் அங்கீகார மற்ற சிலிண்டர் சந்தையும் செழித்தோங்குகிறது.

பல்வேறு சமூகப் பிரிவுகளை உள்ளடக்கிய விரிவான தகவல்களின் அடிப்படையில் இந்த மூன்று ஆய்வுகளும் அமைந்துள்ளன. ஆறு மாநிலங்களில் 2,200-க்கும் மேற்பட்ட கிராமப்புறக் குடும்பங்கள், முறைசாராக அமைந்த குடியிருப்புகளில் 1,100-க்கும் மேற்பட்ட குடும்பங்கள், பத்து நகரங்களில் 1,000-க்கும் மேற்பட்ட புலம்பெயர் தொழிலாளர்களிடமிருந்து இந்த ஆய்வுகளுக்குத் தகவல்கள் திரட்டப்பட்டன.

கிராமங்களில் மளிகைக் கடைகள், சாலையோர விற்பனையாளர்கள், அங்கீகரிக்கப்படாத விநியோகஸ்தர்களிடமிருந்து கூடுதல் விலையில் சிலிண்டர்கள் வாங்கப்படுகின்றன. ஒழுங்குபடுத்தப்படாத விநியோகத்தில் சிலிண்டர் வெடிப்பு, தீவிபத்து அபாயங்கள் உள்ளன. தொடர்ச்சியான பயன்பாடு, கட்டுப்படியாகும் விலை, முறையான இணைப்பு, கடைசிக் கட்ட விநியோகத்தை உறுதிசெய்யும் தூய்மையான சமையல் கொள்கை தேவை என ஆய்வுகள் வலியுறுத்துகின்றன.

நகரங்களிலும் அங்கீகாரமற்ற LPG சந்தை உள்ளது. எனினும்



பயன்பாட்டிலும் அணுகலிலும் நகர-கிராம வேறுபாடுகள் முக்கியமானவை. நகர்ப்புற முறைசாராக அமைந்த குடியிருப்புகளில் 70 சதவீதக் குடும்பங்கள் LPG-யை மட்டுமே பயன்படுத்துகின்றன. முறையான இணைப்பில்லாதவர்களில் 31 சதவீதத்தினருக்கு முகவரிச் சான்று போன்ற ஆவணங்கள் இல்லாததால் இணைப்பு மறுக்கப்பட்டுள்ளது.

ஆய்வில் பங்கேற்ற நகர்ப்புறக் குடும்பங்களில் 11 சதவீதத்தினர் அங்கீகாரமற்ற சந்தையில் சிலிண்டர் வாங்குகின்றனர். ஆய்வின்போது சில்லறை விலை ரூ.803-ஆக இருந்த போதும், இவர்கள் ரூ.1,040 செலுத்தியுள்ளனர். முறையான இணைப்பு கிடைக்காததால் கூடுதல் செலவு ஏற்படுகிறது.

கிராமங்களில் முந்தைய 90 நாட்களில் 73 சதவீதக் குடும்பங்கள் LPG பயன்படுத்தியிருந்தாலும், 23 சதவீதத்தினர் மட்டுமே அதையே முழுமையாக நம்பியுள்ளனர். பாதிக் குடும்பங்களின் முதன்மை எரிபொருள் இன்னும் விறகுதான். LPG பயனாளிகளில் 47 சதவீதத்தினருக்கு மட்டுமே வீட்டுவாசலில் சிலிண்டர் கிடைக்கிறது. மறுநிரப்பலுக்கான



செலவும், வீட்டிற்குக் கொண்டு சேர்க்கும் கடைசிக் கட்டப் போக்கு வரத்துச் சிக்கல்களும் தொடர்ச்சியான பயன்பாட்டிற்குத் தடைகளாகின்றன.

இந்த விவரங்கள் உணர்த்துவது என்ன? சமையலுக்கு விறகை நம்பியிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை கணிசமாக இருப்பதால், அவர்களது சமையல் எரிபொருளிலிருந்து காற்றில் கலக்கும் மாசின் அளவும் குறிப்பிடத்தக்க வகையில் அதிகமாகவே இருக்கும். கிராமங்களுக்குத் தூய்மையான அடுப்புகள் அல்லது சூரிய அடுப்பு களை வழங்கும் முயற்சிகள் சில பகுதிகளுடன் நின்றுவிட்டன. LPG மட்டுமே நடைமுறைக்கேற்ற தீர்வாகப் பார்க்கப்படுகிறது. அதிலும் நாடு முழுவதும் விநியோகத்தைச் சீரமைத்து, விலையைக் கட்டுப்படியாக்கி, காற்று மாசைக் குறைப்பதற்குத் தேவையான முன்னேற்றம் ஏற்படவில்லை.

தூய காற்றுக்கும் சமையல் முறைக்கும் என்ன தொடர்பு? பாரம்பரிய உயிரித்திண்ம எரி பொருள்கள், விறகு மற்றும் பிற திட எரிபொருள்களை எரிக்கும்போது அதிக மாசுப்பொருள்கள் காற்றில் கலக்கின்றன. அவற்றிற்கு நீண்டகாலம் ஆட்படுவதால் சுவாச நோய்கள், புற்றுநோய், ஆக்சிஜனேற்ற அழுத்தம், இதய-ரத்தநாள நோய்கள் உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்படுகின்றன.

நமது மக்கள்தொகையில் சுமார் 70 சதவீதத்தினர் இன்னும் சமையலுக்குத் திட எரிபொருள்களையே நம்பி யுள்ளனர். சமையலுக்காக உயிரித் திண்ம எரிபொருள்களை எரிப்பது இந்தியாவின் காற்று மாசில் 40 சதவீதம் வரை பங்களிப்பதாகவும், ஆண்டுதோறும் சுமார் எட்டு லட்சம் அகால மரணங்களுக்கு வழி வகுப்பதாகவும் கடந்த சில ஆண்டு களின் ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

இந்த மூன்று ஆய்வுகளின் அடிப்படையில் CEEW ஆய்வாளர்கள் இருவர் தெரிவித்துள்ள கருத்துகள் மிகவும் பொருத்தமானவை. கொள்கை களை வகுக்கும் அதிகாரிகள் அவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். பிரார்த்தனா போரா கூறுகிறார்: “மக்கள் சமைக்கும், வேலை செய்யும், வாழும் முறைகளிலிருந்து தூய காற்றைப் பிரித்துப் பார்க்க முடியாது. LPG இணைப்பு வழங்குவது முதல் படிதான்.

“தொடர்ந்து சிலிண்டர் வாங்கும் வசதி குடும்பங்களுக்கு இல்லா விட்டாலோ, PMUY திட்டத்தின்கீழ் முறையான இணைப்பு பெறுவது புலம் பெயர்ந்தோருக்குத் தெரியா விட்டாலோ, கிராம வீடுகளுக்கு நம்பகமாக சிலிண்டர் சென்றடையா விட்டாலோ, மக்கள் மாசுபடுத்தும் எரிபொருள்களைச் சார்ந்திருப்பார்கள். இணைப்பு கிடைப்பதைத் தாண்டி, தூய்மையான சமையல் கட்டுப் படியாகிறதா, நம்பகமானதா, தொடர்ந்து பயன் படுத்தப்படுகிறதா என்பதையும் இந்தியாவின் தூய காற்றுத் திட்டம் கவனிக்கவேண்டும்.”

அபிஷேக் கர் கூறுகிறார்: “சமையல் கொள்கையின் கவனம் இணைப்புகளின் எண்ணிக்கை யிலிருந்து தொடர்ச்சியான பயன் பாட்டிற்கு மாறவேண்டும். கிராமக் குடும்பங்களுக்கு மறுநிரப்பலின் விலையும் வீட்டுவாசல் விநியோகமும் முக்கியம். நகர்ப்புற ஏழைகளுக்கு ஆவணச் சிக்கல்களுக்கான தீர்வுகளும் சிறுதொகைகளாகச் செலுத்தும் வசதி போன்ற புதுமைகளும் தேவை. புலம்பெயர்ந்தோருக்குக் கூடுதல் மானியமும் விழிப்புணர்வும் அவசியம்.

“புலம்பெயர் LPG பயனாளிகளில் பெரும்பாலோர் முறைசாரா சந்தையில் தான் வாங்குகிறார்கள். முறையான விநியோகத்தில் முழு சிலிண்டரை வாங்கும் வசதியுள்ளவர்களைவிட, ஒரு கிலோவிற்கு 20 சதவீதத்திற்கும் அதிகமாகச் செலுத்துகிறார்கள். இந்த வாழ்க்கை யதார்த்தங்களே அடுத்தகட்ட நடவடிக்கைகளை வழிநடத்தவேண்டும்.”

அப்படியானால், சமையல் எரிவாயுவைத் தொடர்ந்து வாங்கு வதற்கு நுகர்வோர் தங்களால் செலுத்த முடியும் என்று கருதும் விலை என்ன? மூன்று ஆய்வுகளும் ஏறத்தாழ ஒரே முடிவைக் காட்டுகின்றன. கிராமக் குடும்பங்கள், நகர்ப்புற முறைசாராக அமைந்த குடியிருப்புவாசிகள், புலம்பெயர் தொழிலாளர்கள் ஆகிய மூன்று பிரிவுகளிலும் குறைந்தது 80 சதவீதத்தினர், 14.2 கிலோ LPG சிலிண்டர் மறுநிரப்பல் ரூ.400-க்குக் கிடைத்தால் முழுமையாக LPG-க்கு மாறுவதாகக் கூறியுள்ளனர்.

மூன்று பிரிவினரும் செலுத்தத் தயாராக இருந்த தொகைகளின் இடைநிலை மதிப்பு ரூ.500. ரூ.400, ரூ.500 இரண்டுமே, ஆய்வு நேரத்தில் மானியத்திற்குப் பிறகு PMUY சிலிண்டருக்குச் செலுத்த வேண்டிய ரூ.642-விடக்குறைவு. கட்டுரை குறிப்பிடும் போது அந்த விலை மேலும் உயர்ந்துள்ளது.

சமையலுக்குப் பயன்படுத்தும் எரிபொருள் என்பது குடும்பத்தின் தனிப்பட்ட தேவையுடன் முடிந்து விடுவதல்ல; அதுவும் காற்று மாசு தொடர்பான ஒரு முக்கியப் பிரச்னைதான். ஆனால் மற்ற மாசுப் பிரச்னைகளைப் பற்றிப் பேசும் அளவிற்கு, சமையல் எரிபொருளால் ஏற்படும் மாசிற்கு நாம் பெரும்பாலும் உரிய கவனம் அளிப்பதில்லை. கட்டுப்பாடற்ற நகரமயமாக்கல், அதிகரிக்கும் தொழிற்சாலை மாசு, கிராமங்களிலும் சிறுநகரங்களிலும் முன்னெப்போதுமில்லாத வளர்ச்சி ஆகியவற்றின் பின்னணியில், அனைத்துத் தரப்பினருக்கும் தூய்மையான சமையல் எரிபொருள் கிடைப்பதை நாம் அனைவரும் தீவிரமாக எடுத்துக்கொள்ளவேண்டும்.

எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதி வருகிறார்.

# இரவு ரயிலில் ஒரு உலகப் பயணம்

*உலகெங்கும் படுக்கை வசதியுள்ள ரயில்களில் பயணித்த மகிழ்ச்சியையும் கண்டடைந்த அனுபவங்களையும் பகிர்கிறார் மோனிஷா ராஜேஷ்.*



சந்தியா ராவ்

புதிய இடங்களுக்குச் செல்வதிலும், அங்கே கிடைக்கும் அனுபவங்களை ரசிப்பதிலும் உங்களுக்கு விருப்பமா? அவசரமின்றி நிதானமாக ரயிலில் செல்லவும், ஜன்னலுக்கு வெளியே விரியும் காட்சிகளை ரசிக்கவும் விரும்புகிறீர்களா? முன்பின் அறிமுகமில்லாதவர்களிடம் ஆழ்மன உணர்வுகளைக்கூட வெளிப்படுத்தும் உரையாடல்கள் உங்களுக்குப் பிடிக்குமா? மோனிஷா ராஜேஷின் 'அரவுண்ட் இந்தியா இன் 80 டிரெயின்ஸ்', 'அரவுண்ட் தி வேர்ல்ட் இன் 80 டிரெயின்ஸ்' நூல்கள் உங்களைக் கவரும். ரயில் பயணக் காதலர்களுக்கு அவரது புதிய நூலான 'மூன்லைட் எக்ஸ்பிரஸ்: அரவுண்ட் தி வேர்ல்ட் பை நைட் டிரெயின்' அருமையான விருந்து. இந்த நூலின் பக்கங்கள்வழியே நிகழும் வாசிப்பே ஓர் உலகப் பயணமாகிறது. மனதின் அறியப்படாத, இதுவரை அசைவின்றிக் கிடந்த பல மூலைகளை அது நிரந்தரமாக விழித்தெழச் செய்யக்கூடும்.

'ஹெம்மாபிளைண்ட்' என்ற சொல்லையே எடுத்துக்கொள்வோம். ஆஸ்லோவிலிருந்து ட்ரான்ஹைம் வரை 300 மைல் நீளும் டோவ்ரே ரயில்பாதையில் பயணியுங்கள். அங்கிருந்து நார்ட்லாண்ட் ரயிலில், ஆர்க்டிக் வட்டத்திற்கு வடக்கேயுள்ள போடோ நோக்கி 500 மைல் பயணம். அதன் உச்சரிப்பு 'பூடா'. ஆர்க்டிக்கின் வானொளியான அரோரா போரியாலிஸ் நமக்குப் பரிச்சயமானது. நார்வே, நியூசிலாந்து, கிரீன்லாந்தில் கடலிலிருந்து நிலத்திற்குள் நீளும் குறுகிய, ஆழமான ஃபியோர்டுகள் நிறைந்திருப்பதையும் படித்திருக்கிறோம்.

இந்தக் கடற்கிளைகளைக் கடக்கும் 293 பாலங்களைக் கொண்ட நார்ட்லாண்ட் பயணத்தில், தூக்கமும் விழிப்புமாக இருக்கும் மோனிஷாவுக்கு லுட்விக்குடன் உரையாடும் வாய்ப்பு கிடைக்கிறது. குதிரைவால் கொண்டையிட்ட இவர், ஸ்வீடனிலிருந்து நார்வேயில் குடியேறியவர். "குளிர்காலம் நீண்டது; இருளானது. ஆனால் தினமும் நான்கு மணிநேரம் இளஞ்சிவப்பும் ஆரஞ்சும் கலந்த அழகிய அந்தியொளி கிடைக்கும். வடதுருவ ஒளியும் உண்டு" என்கிறார்.

அரோரா போரியாலிஸ் என்னும் அந்த வானொளியைத் தேடிவந்திருக்கும் மோனிஷா, இதைக் கேட்டதும் ஆர்வத்துடன் நிமிர்ந்து உட்கார்கிறார். அந்த ஒளிக்காட்சியை எப்போதும் பார்க்க முடியுமா என்று கேட்கிறார். "பெரும்பாலான நேரங்களில்" என்கிறார் லுட்விக். "ஸ்வீடிஷ் மொழியில் 'ஹெம்மாபிளைண்ட்' என்போம். 'வீட்டுக் குருட்டுத்தன்மை' போன்ற பொருள். வாழுமிடத்தின் அழகைப் பழகிப்போனதால் கவனிக்காமல் விடுவதைக் குறிக்கும். ஆங்கிலத்தில் அப்படியொரு சொல் இல்லையா?"

பிரிட்டனைச் சேர்ந்த மோனிஷா எழுதுகிறார்: "UKயில் இயற்கையாக அழகான எதைப் பழகிப்போனதால் கவனிக்காமல் விட்டிருப்பேன் என்று கற்பனை செய்ய முடியவில்லை. ஒருவேளை லுட்விக் சொன்னதே அதைத்தானோ!" ஒரு சக பயணியுடன் இயல்பாக நிகழ்ந்த சாதாரண உரையாடலிலிருந்து எவ்வளவு ஆழமான வாழ்க்கைப் புரிதல் கிடைத்திருக்கிறது பாருங்கள்! என் சிந்தனைக்குள் நுழைந்த ஒளிக்கீற்று அது. இப்படி ஏராளமான ஒளிக்கீற்றுகளால் நூல் என் மனதை ஒளிரச்செய்தது; தெரிந்திருந்தும் போதிய கவனம் பெறாத உண்மைகளையும் உறுதிப்படுத்தியது.



நார்வே பயணத்திற்கு இரண்டு மாதங்களுக்குப் பிறகு புகைப்படக் கலைஞர் மார்க் சேத்தியுடன் பணி நிமித்தமாக ஷாலிமார் எக்ஸ்பிரஸில் செல்கிறார் மோனிஷா. மார்க்கிடம் இருந்த ஒரே கால்சட்டை கிழிந்துவிடுகிறது. சக பயணி மோகன் தனது கால்சட்டைகளில் ஒன்றைக் கொடுக்கிறார். “லண்டனில் யாராவது இப்படிக் கொடுப்பார்களா என்று கற்பனைக்கூடச் செய்ய முடியவில்லை” என்கிறார் மார்க்.

“நாங்கள் வெளிநாட்டவர்களாகத் தோன்றியது மோகனின் உதவும் எண்ணத்தை அதிகரித்திருக்குமோ என்று நினைத்தேன். ஆனாலும் மார்க் சொன்னது உண்மை. இந்திய ரயில் பயணிகளிடம் தனித்துவமான தாராளம் உண்டு. உணவைப் பகிர்வது, நகர்ந்து இடமளிப்பது, கேட்டாலும் கேட்காவிட்டாலும் ஆலோசனை வழங்குவது என மனித இயல்பின் சிறந்த அம்சங்களை ரயில்வே வெளிக்கொணர்கிறது” என்கிறார் மோனிஷா.

ரயிலில் பயணித்த, இன்றும் பயணிக்கும் நமக்கு இந்த அனுபவங்கள் எல்லாம் நன்றாகவே தெரியும். அந்நியர்களுடன் நட்பை உருவாக்கிக்கொண்டவர்கள் பலர். பழைய முன்பதிவில்லாப் பெட்டிகளில் ‘கொஞ்சம் அட்ஜஸ்ட்’ செய்வதற்கு அளவேயில்லை. இன்னொருவர் உட்கார எப்படியாவது இடம் கிடைக்கும்!

ஓரியன்ட் எக்ஸ்பிரஸின் 140-வது ஆண்டு நிறைவுப் பயணத்துடன் நூல் தொடங்குகிறது. பாரிஸையும் இஸ்தான்புல்லையும், அன்றைய கான்ஸ்டான்டிநோபிளையும், இணைத்த சேவை முதலில் ரயிலும் படகும் மாறிமாறிச் செல்லும் பயணமாக இருந்தது. ரயில் பெட்டிகளைப் பிரித்துப் படகுகளில் ஏற்றி, மறுகரையில் மீண்டும் இணைத்துப் பயணித்திருக்கிறார்கள்! அசல் சேவையும் மாற்றியமைக்கப்பட்ட சேவையும் 2009-ல் நிறுத்தப்பட்டன. தனியார் நிறுவனங்களின் வெனிஸ் சிம்ப்ளான்-ஓரியன்ட் எக்ஸ்பிரஸ், ஓரியன்ட் எக்ஸ்பிரஸ் லா டோல்சே வீட்டா சொகுசுச் சேவைகள் ஆண்டின் குறிப்பிட்ட காலங்களில் கிடைக்கின்றன.

இரவில் பயணிப்பதால் இடையில் ஊர்சுற்றவும் ஓய்வெடுக்கவும் வசதியாகிறது. ‘டாட்ஸ்யா’ என உச்சரிக்கப்படும் டாசியா ரயிலில் வியன்னாவிலிருந்து ருமேனியாவின் புகாரெஸ்டுக்கு வந்து ஓய்வெடுக்கிறார் மோனிஷா. ‘புகாரெஸ்டிலிருந்து சோஃபியா’ அத்தியாயத்தில்




‘புல்டோசரால் இடித்துத்தள்ளுதல்’ என்ற சொல் கவனத்தை ஈர்த்தது.

1977 நிலநடுக்கம் புகாரெஸ்டைச் சிதைத்தபின், கொடுங்கோலர் என நான் குறிப்பிட விரும்பும் அதிபர் செளசெஸ்கு, குடியிருப்புகள், பள்ளிகள், யூத வழிபாட்டுத் தலங்களை இடித்து, சோவியத் பாணி வெறுமையான கட்டமைப்புகளை உருவாக்கினார். சில மடாலயங்களையும் தேவாலயங்களையும் பொறியாளர்கள் காப்பாற்றிய விதம் வியப்பூட்டுகிறது. கட்டடங்களுக்குக் கீழே தோண்டி, தண்டவாளங்கள் போன்ற பாதைகளை அமைத்து, முழுக் கட்டடங்களையும் உருட்டிப் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்தியிருக்கிறார்கள்!

தி கலிடோனியன் ஸ்லீப்பர், தி ராயல் ஸ்காட்ஸ்மேன், தி குட் நைட் டிரெயின், தி சில்வர் மீட்டியோர், தி ஆண்டியன் எக்ஸ்ப்ளோரர், தி சான்டா கிளாஸ் எக்ஸ்பிரஸ் எனப் பெயர்களே ஆர்வமூட்டுகின்றன. பயணங்கள் வரலாறு, புவியியல், அரசியல், சமூகம், உணவு, ஆடை அலங்காரம், மனப்பான்மைகள் எனப் பலவற்றை அறிமுகப்படுத்துகின்றன.

சில பயணங்கள் வசதியானவை; சில விசித்திரமானவை. வியன்னா-ஹாம்பர்க் நைட்ஜெட்டில் சிறிய உறக்கக் கூடுகளில் மடங்கிப் படுக்கிறார்கள்! சிலவற்றில் இரைச்சல்; சிலவற்றில் அமானுஷ்ய அமைதி. நல்ல துணையுடன் பயணிக்கையில், பல ஆண்டுகளில் அறியாதவற்றை இரண்டே நாட்களில் ஒருவரைப் பற்றி மற்றவர் அறிகிறார்கள்.

எனக்குப் பிடித்த முதல் மூன்று பயண நூல்களில் இதுவும் ஒன்று. மற்றவை அலெக்சாண்டர் ஃபிரேட்டரின் ‘சேஸிங் தி மான்சூன்’, அன்டோனியா போலிங்புரோக்-கென்ட்டின் ‘லேண்ட் ஆஃப் தி டான்லிட் மவுன்டன்ஸ்’. தெளிவும் உயிரோட்டமும் நுட்பமும் கொண்ட எழுத்து, மனிதர்களையும் இடங்களையும் கடந்து நூலை உயர்த்துகிறது. வெளிப்படையும் தாராளமும் ஆழ்ந்த உணர்வுகளும் அதில் நிறைந்துள்ளன.

அங்காரா எக்ஸ்பிரஸில் அங்காரா வந்து, டோகு எக்ஸ்பிரஸில் கார்ஸ் செல்லத் திட்டமிட்டிருந்தபோது, துருக்கியேவில் மிக மோசமான இரண்டு நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. “வடமேற்கு சிரிய அகதிகள் அங்கே தற்காலிகத் தங்குமிடங்களில் வசித்தனர். மீட்புப் பணியாளர்களின் கடுமையான சூழலைக் கொடூரக் குளிர் மோசமாக்கியது. அங்கே எனக்குக் குடும்பமோ நண்பர்களோ இல்லை. ஆனாலும் பெற்றோரின் வலி நிறைந்த அலறல்கள் என்னை நிலைகுலையச் செய்தன. என் துயரத்தின் ஆழம் எனக்கே புரியவில்லை” என்கிறார்.

நூலில் இடம்பெறும் சில அனுபவங்கள் மாயாஜாலம் போன்ற மகிழ்ச்சியைத் தருகின்றன; சில புதிய பார்வையைத் தருபவை. சிசிலியில் ‘தி காட்ஃபாதர்’ டான் கார்லியோனேயின் நாற்காலியில் அவரது கணவர் பக்திப்பரவசத்துடன் அமர்கிறார். இரண்டு மகள்களும் பார்கோ டெல்லா சலூட்டே நடைவெளியில் விளையாடுகிறார்கள். விளையாட்டு வீட்டில் சாய்வுப்பாதைகள், சக்கர நாற்காலிக்கான பெரிய ஊஞ்சல், ராட்டினத்தில் சாய்வான அணுகுபாதைகள் உள்ளன. “அரேபிய, கிரேக்கப் பண்பாடுகளை அரவணைத்த பலேர்மோவின் வரலாறு, அனைவரையும் உள்ளடக்கும் பண்பாகத் தொடர்கிறது.”

புலன்கள், இயற்கை, வாழ்க்கை அனைத்தையும் உள்ளடக்கும் இந்நூல் அனைவருக்குமானது. இதோ ஒரு வினாடிவினா. ஆறுகள், ஏரிகள் உள்ளிட்ட கீழ்க்கண்ட நீர்நிலைகளை உலக வரைபடத்தில் பின்தொடர்ந்து, மோனிஷா சென்றடைந்த, கடந்துசென்ற இடங்களைக் கண்டறியுங்கள்:

ஒல்ட், பிரஹோவா, யான்ட்ரா, டான்யூப், இஸ்கார், குச்சுக்செக்மெஜே, கிசிலிர்மாக், சால்டி சுயு, கராசு, டோர்னெட்ராஸ்க், எக்ஸ், டீன், ஆல்மண்ட், ஃபர்த் ஆஃப் ஃபோர்த், டே, ஸ்பே, யூரி, மெசினா நீரிணை, ஸ்ப்ரீ, வோர்மா, மியோசா, லோகன், கவுலா, நிட், ரான்ஃபியோர்டன், சால்ட்ஃபியோர்டன், செயின்ட் மேரிஸ், பொட்டோமாக், வான் ஸ்கைவர், கச்சிமாயு, உருபாம்பா, டிட்டிகாக்கா.

இப்போது உங்கள் மூன்றாவது கண்ணைத் திறந்துகொள்ளுங்கள்!

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.



# நாற்காலி நிபுணர்களின் காலம்

## LBW



**TCA ஸ்ரீநிவாச ராகவன்**

தங்களுக்கு எதுவுமே தெரியாத விஷயங்களைப் பற்றி படித்த இந்தியர்கள் ஏன் இவ்வளவு அதிகாரத்துடன் பேசுகிறார்கள் என்று எப்போதாவது யோசித்துப் பார்த்திருக்கிறீர்களா? "மன்னிக்கவும், இது தொழில்நுட்ப விஷயம். எனக்குத் தெரியாது; எனவே வாயை மூடிக்கொள்கிறேன்" என்று ஏன் சொல்வதில்லை? அரைகுறை அறிவை அள்ளிவழங்கும் இணையமும், அண்மையில் AI மற்றும் சமூக ஊடகங்களும் இந்தப் போக்கை மோசமாக்கியுள்ளனவா? முன்பைவிட இப்போது அதிகமானோர் அதிக அபத்தங்களைப் பேசுவதை மறுப்பவர்கள் மிகச் சிலரே.

ஆழ்ந்த நிபுணத்துவமும் பயிற்சியும் தேவைப்படும் விஷயங்களில்கூட அடிப்படை அறிவின்றி மிகுந்த நம்பிக்கையுடன் நீட்டி முழக்குவதை நாம் அடிக்கடி பார்க்கிறோம். அரசமைப்புச் சட்டம் ஓர் உதாரணம். அதைப் பற்றிய அடிப்படையான விஷயங்கள்கூட தெரியாமல் சிலர் முடிவில்லாமல் பேசிக்கொண்டே இருப்பார்கள். NGO செயல்பாட்டாளர்கள் இதில் குறிப்பாகக் கெட்டிக்காரர்கள். வெளியுறவுக் கொள்கையிலும் எல்லோருக்கும் கருத்துண்டு; பெரும்பாலும் அறியாமையில் பிறந்த கருத்து.

மருத்துவமும் விதிவிலக்கல்ல. எனது 82 வயது அக்காவுக்கு மருத்துவமோ மனித உடலமைப்போ தெரியாது. என்மீதான அவரது அக்கறையிலும் நல்லெண்ணத்திலும் சந்தேகமில்லை. ஆனால் என் உடல்நலத்தை எப்படிப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று பாடம் நடத்துவதோடு, எடுத்துக்கொள்ள வேண்டிய மருந்துகளையும் அவரே பரிந்துரைப்பார். நல்லவேளையாக அவையெல்லாம் ஹோமியோபதி மருந்துகள். அலோபதியில் நம்பிக்கையில்லை என்பவர், குரோசின் மாத்திரைகளை விழுங்குவார்; கண்களுக்குச் சொட்டு மருந்தும் போட்டுக்கொள்வார்.

எண்பது வயதைக் கடந்த அவரது தோழி, தன்னைப் பங்குச்சந்தை நிபுணராகக் கருதினார். இருவரும் உதவாக்கரைப் பங்குகளை வாங்கிப் பணத்தை இழப்பார்கள். அதிர்ஷ்டவசமாக இழப்பு பெரிதில்லை. ஹோமியோபதியையும் பங்குச்சந்தை விளையாட்டையும் விட்டுவிடச் சொன்னால் என்னை முட்டாள் என்பார்கள். இப்போது பங்குச்சந்தையில் ஈடுபடுவதை மட்டும் நிறுத்திவிட்டார்கள்.

புள்ளியியல், பொருளாதார அளவியல் துறைகளில் துளிகூட நிபுணத்துவமின்றி வியாக்கியானம் செய்பவர்களையும் அறிவேன். அவர்களுடைய அறிவு பூஜ்ஜியம். முற்றிலும் பூஜ்ஜியம். அக்காவிடமும் தோழியிடமும் கேட்டதுபோல, இவர்களில் ஒருவரிடம், "நீங்கள் சொல்வது சரியென்று எதை வைத்து நம்புகிறீர்கள்?" என்றேன். "உள்ளுணர்வுதான்" என்றார். புள்ளியியலிலும் பொருளாதார அளவியல் முறைகளிலும்கூட உள்ளுணர்வா?

ஒரு இரவு விருந்தில், நான் பத்திரிகையாளர் என்று ஒரு பெண்மணியிடம் அறிமுகப்படுத்திக்கொண்டேன். பத்திரிகையாளர்கள் எப்படி வேலை செய்யவேண்டும் என்று கரகரப்பான குரலில் நீண்ட பிரசங்கம் செய்தார். "நீங்கள் என்ன செய்கிறீர்கள்?" என்றேன். "ஒன்றுமில்லை. ஒரு தூதரின் மனைவி" என்றார். உயர்பதவியிலிருந்து ஓய்வுபெற்ற கணவருக்கும் வேலையை எப்படிச் செய்வதென்று சொல்லிக்கொடுத்திருப்பார் என்பது நிச்சயம்.

கிரிக்கெட்டிலும் இதே கதைதான். தெருவில் டென்னிஸ் பந்தையும் துணிதுவைக்கும் பலகையையும் வைத்து விளையாடியதைத் தவிர அனுபவமில்லாத ஆண்கள், பெண்கள், குழந்தைகள்கூட நிபுணர்களாகிவிட்டார்கள். பல ஆண்டுகளுக்கு முன்பு, தன்னை மிகவும் எரிச்சலூட்டிய பத்திரிகையாளரிடம் சுனில் கவாஸ்கர் பொருத்தமாகக் கேட்டார்: "நீங்கள் எத்தனை சதங்கள் அடித்திருக்கிறீர்கள்?" கவாஸ்கர் அடித்தது 35 சதங்கள்.

வேடிக்கை என்னவென்றால், இந்தியா வென்றால் இவர்களிடம் கருத்தே இருக்காது. தோற்றால்தான் விமர்சனங்கள் பெருக்கெடுக்கும். இந்தியாவை எதிர்த்து ஆடிய அணி வென்றால், அந்த அணியினர் எவ்வளவு சிறப்பாக விளையாடினார்கள் என்று பேசுவதில்லை. எதிரணியை மதிப்பிடுவதற்கு மட்டும் யாருக்கும் அக்கறையில்லை.

உலகப்புகழ்பெற்ற பொருளாதார நிபுணர் ஒருவரும் ஒருமுறை இதே விரக்தியுடன் கேட்டார்: "பொருளாதாரக் கொள்கை பற்றி எல்லோரும் தாராளமாகக் கருத்துச் சொல்கிறார்களே, விமான வடிவமைப்பு பற்றி ஏன் பேசுவதில்லை?" பிரச்னையின் மையம் இதுதான். பொருளாதாரம் மிகுந்த தொழில்நுட்ப அறிவைக் கோரும் சிறப்புத் துறை. இருந்தாலும் யார் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் பேசலாம் என்ற நிலை.

மறைந்த இத்தாலிய நாவலாசிரியர் உம்பெர்ட்டோ ஈக்கோ சொன்னார்: "முன்பெல்லாம் ஒரு கோப்பை மது அருந்திவிட்டு மதுக்கூடத்தில் மட்டும் பேசிக்கொண்டிருந்த முட்டாள்கள் சமூகத்திற்குத் தீங்கு விளைவிக்கவில்லை. சமூக ஊடகங்கள் இப்போது அந்தப் பெருங்கூட்டத்திற்குப் பேசும் உரிமையை வழங்கியுள்ளன. நோபல் பரிசு பெற்றவருக்கு இருக்கும் அதே பேச்சுரிமை அவர்களுக்கும் கிடைத்துவிட்டது. இது முட்டாள்களின் படையெடுப்பு."■


Rotary
Zones 4,5,6 & 7
AIM HIGH
Sri Lanka
ROTARY INSTITUTE 2026
AIM HIGH
Sri Lanka
ROTARY INSTITUTE 2026
18-20 DECEMBER
CITY OF DREAMS, COLOMBO
Yinka Babalola
Rotary International President
2026-2027
Muruganandam M. (MMM)
RI Vice President & Convenor
K.P. Nagesh (KPN)
RI Director & Co-Convenor
Gowri Rajan
Institute Chair
A.S. Venkatesh
TRF Trustee
www.rotaryinstitute2026srilanka.com

Posted at Egmore RMS Patrika Channel. Date of posting: 9–15 every month. Regd with RNI TNTAM/2018/76372. Rotary News Tamil Published 1st week of every month.
Registered No. TN/CCN/677/2025-2027 | Total number of pages in this monthly issue, including cover, 84. Price: `50
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP/611/25-27

